Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 78 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 ஆகத்து 2024

## 14.08.2006 அன்று வள்ளிபுனம் செஞ்சோலை சிறுவர் வளாகத்தின் மீது சிறீலங்கா விமானப்படை நடாத்திய தாக்குதலில் பலியான மாணவச் செல்வங்களின்

# 18ஆம் ஆண்டு










**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**




























## விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203




## www.sangathamil.ca



## தேசிய தலைவர்
## மேதகு
## வே. பிரபாகரன்
## அவர்களின்
## சிந்தனையிலிருந்து

**இந்த உலகில் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும்வரை சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# சண்டைக்காரன்
# லெப். கேணல் தேவன்




இரவின் இருள் சூழ்ந்த நேரம். படைக் காப்பரணில் வெளிச்சம் தெரிகின்றது. அணி நகர்ந்துகொண்டிருந்தது. அந்த அணிக்குள் தேவன் மட்டுமல்ல அவனது ஒன்றரை அகவை நிரம்பிய குழந்தை, அவனது மனைவியென அவனது குடும்பமே நகர்ந்து கொண்டிருந்தது. வவுனியா படை வல்வளைப்புப் பகுதியிலிருந்து படைக் காவலரணை ஊடறுத்து வன்னி நோக்கி இரகசியமாக அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். படையினரின் காப்பரண் வரிசையைக் கடக்கும்போது சத்தமில்லாமல் கடக்கவேண்டும் அப்போது ஏதும் அறியாக் குழந்தை சத்தமிட்டால் நிலைமை விபரீதமாகிவிடும். அதனால் ஏற்கனவே குழந்தையை ஆழ்ந்து உறங்கச் செய்திருந்தார்கள். ஆனாலும் இராணுவ வேலியைக் கடக்கவிருந்த வேளையில் வெளிச்சத்தைக் கண்டவுடன் குழந்தை விழித்துக்கொள்கிறது. குழந்தை சத்தமிட எத்தனிக்கின்றது. குழந்தையின் வாயைப் பொத்தினார்கள். ஒருவாறு காப்பரணைக் கடந்துவிடுகின்றார்கள்.

தேவனின் போராட்ட வாழ்வு இப்படித்தான் கழிந்தது. தேவன் இந்தப் போராட்டத்திற்காக எத்தனை அர்ப்பணிப்புணர்வுடன் செயற்பட்டான் என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டு மட்டுமே. அவனது வாழ்வில் தனித்து ஒருவனாய் அல்லாமல் போராளி அல்லாத தனது மனைவியுடனும் குழந்தையுடனும் அவன் சாதித்த சாதனைகள் நிறையவே இருக்கின்றன. தேவனின் போராட்ட வாழ்வு சண்டையில்தான் தொடங்குகின்றது. சண்டையில்தான் நகர்கின்றது. சண்டையில்தான் முடிகின்றது.

1988இல் தன்னைக் களவாழ்வுக்குள் இணைத்துக்கொண்ட நாள்முதல் வீரச்சாவடையும் வரை தேவன் அதிகம் சந்தித்தது சண்டைகளைத்தான். அவனது கன்னிச்சமர் இந்திய படைகளுடன் தோடுதான். அந்தப் பட்டறிவோடுதான் வவுனியாக் கோட்டத் தாக்குதல் அணிக்குள் ஒருவனாய் தேவன் செயற்பட்டான். இந்தக் காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணிகள் கோட்ட ரீதியாக பிரிக்கப்பட்டிருந்தன. 1991ஆம் ஆண்டு தேசவிரோதிகள் மீது தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிடப்படுகின்றது. அந்த அணியில் தேவனும் தெரிவு செய்யப்பட்டிருந்தான். தாக்குதல் நடைபெறவிருந்த இடம் எமக்குப் பாதுகாப்பற்றதும் யாரும் அந்தப் பகுதிக்குப் பெரிய அளவில் செல்ல முடியாததுமான இடமாகும். ஆனால் தாக்குதலை நடாத்தியே ஆகவேண்டும். விடுதலைப்புலிகளின் அணி நகர்ந்து செல்கிறது. சண்டை தொடங்குகிறது. தேசவிரோதிகளின் முகாம் தகர்க்கப்படுகிறது. வெற்றியோடு அணி தளம் திரும்பியது.

இந்தச் சண்டையில் தேவன் இதுவரை பெற்றிருந்த கள பட்டறிவை நன்கு பயன்படுத்தினான். அதில் திறமையாகச் செயற்பட்டான். தேவன் ஒரு சண்டைக்காரனாக அறிமுகமாகினான். அவனது சண்டைத்திறனும் அவனது ஆளுமைத்திறனும் அவனை வவுனியாக்கோட்டச் சிறப்புப் பொறுப்பாளர் ஆக்கியது.

தேவனின் சிந்தனைகள் எப்போதும் சண்டைகளைப் பற்றியே இருக்கும். போராளிகளுடன் எப்போதும் அதைப்பற்றியே கதைத்துக்கொண்டிருப்பான். அப்போது பெரிய அளவில் தாக்குதல் மேற்கொள்வதைவிட சிறு சிறுதாக்குதல்களே மேற்கொள்ளப்பட்ட காலம். படைக் காவலரண்கள் முகாம்கள் அமைந்திருக்கும் இடங்களை வேவு பார்ப்பது, பார்க்கப்பட்ட வேவுத் தகவல்களின் படி தாக்குதல்களை மேற்கொள்வதுதான் தேவனின் பணியும் பொழுதுபோக்கும். எப்படியாவது கிழமைக்கு ஒரு தாக்குதலாவது மேற்கொள்ளவேண்டுமென ஏராளமான பொழுதுகளை அதற்கே செலவுசெய்தான்.

தேவனின் சமராற்றலை வெளிப்படுத்திய மற்றொரு தாக்குதல் இது. 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனியா பிரப்பமரப் பகுதியில் சிறீலங்கா படை கவச ஊர்திகளுடன் முன்னேற்ற நகர்வொன்றை மேற்கொண்டது. உடனடியாகவே முன்னேறி வரும் படையினரை வழிமறித்து அடித்து விரட்டுவதற்குத் தேவன் தலைமையிலான அணி களம் விரைகின்றது. சண்டை தொடங்குகின்றது. சிங்களப் படைகள் தங்கள் கவச ஊர்திகளிலிருந்து தானியங்கித் துப்பாக்கிகளால் தாக்கினார்கள். தேவன் தனது அணியைச் சாதுரியமாய் நகர்த்தினான். சிங்களப்படைகளைச் சுற்றி வளைக்கின்றான். சிங்களப் படை திகைப்படைந்து பவள் கவச ஊர்தி ஒன்றைக் கைவிட்டுவிட்டு ஓட்டம் எடுத்தது. தேவனின் திறமையான வழிநடத்தல் சண்டையை வெற்றியாக்கியது. பவள் கவசவாகனத்தில் இருந்த L3 ஆயுதம் கழற்றியெடுக்கப்பட்டது. வன்னி மாவட்டத்தில் முதல் முதல் L3 ஆயுதத்தைக் கைப்பற்றியது தேவன் தான். அன்றைய நாளில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாய் பதிவாகியது. சண்டை நடந்த இடத்திலிருந்து பவள் கவசஊர்தியைக் கொண்டுவர முடியாதிருந்ததால் அது தகர்க்கப்பட்டது.

இப்படியாகத் தேவன் சென்ற சண்டைகள் எல்லாம் வெற்றியாய்த் தான் முடிந்தன. ஏனெனில் அதற்காய் அணுவணுவாய் உழைத்தான. வேவு பார்ப்பதிலிருந்து தாக்குதல் நடாத்தும் வரை எல்லாவற்றிற்கும் அவன் நிற்பான். எதையுமே தான் நேரில் நின்று உறுதிப்படுத்தினால் தான் அவனிற்கு நிறைவு வரும். அன்றைய நாட்களில் இப்போது போன்று முழுமையான கட்டுப்பாட்டுப்பகுதிகள் என்று இருந்தது குறைவு. படையினர் எமது பகுதிக்குள் ஊடுருவி வருவார்கள். அந்தச் செய்தி அறிந்து உடனேயே அணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு களம் விரையும். சிங்களப் படைகள் அடிவாங்கியபடி பின்வாங்கிவிடும். அதே போல் எங்களது அணிகளும் நீண்டதூரம் கால்நடையாகச் சென்று தாக்குதல் நடாத்தி எதிரிக்குச் சேதத்தை விளைவித்து விட்டு தளம் திரும்புவர். இந்த நீண்டதூரப் பயணங்களில் எல்லாம் தேவன் முன்னணியில் செல்வான். சண்டைகளில் அதிகம் சாதிப்பான்.

இந்தச் சண்டைக்காரன் சுயவிருப்பின் பெயரில் சிறிதுகாலம் இயக்கத்திலிருந்து விலகியிருந்தான். 1997ஆம் ஆண்டு தேவனுக்கு திருமணம் நடக்கிறது. சுசித்திரா என்ற பெண்ணை அவன் தனது துணைவியாக்கிக்கொண்டான். இந்த நாட்களில் வவுனியாவில் இரணை இலுப்பைக்குளத்தில்தான் தேவன் குடும்பம் வசித்துவந்தது. 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள படை இந்தப் பகுதிகளில் முன்னகர்வுகளை மேற்கொண்டு எமது நிலங்களை வல்வளைத்துக் கொண்டிருந்தது. சிங்களப் படைகளால் வல்வளைக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்த மக்களுக்கு நெருக்கடிகள் அதிகரித்தன. படையினரால் இனங்காணப்படுவோர் தினமும் படை முகாமிற்கு வந்து கையெழுத்திடுமாறு மிரட்டப்பட்டனர்.

இந்த மிரட்டல்கள் தேவனுக்கு கடும் சினத்தையும் அதே வேளை படையினர் மீது நகைப்பையும் ஏற்படுத்தியது. எத்தனை களங்களுள் படையினரைச் சின்னாபின்னமாக்கி, சடலங்கள் ஆக்கிய அந்தச் சண்டைக்காரனுக்கு இந்த மிரட்டல்கள் எம்மாத்திரம்? கையில் ஆயுதம் இல்லாமல் அவன் வீட்டில் இருந்தாலும் எத்தனை களங்களைக் கண்டு எத்தனை போராளிகளோடு உறவாடி அந்த நினைவுகளை மனசுக்குள் சுமந்த அவன் முடிவெடுக்கின்றான். எந்த நிலைவரினும் படையினரிடம் மண்டியிடுவதில்லையென்று. அன்றிலிருந்து தேவனின் தலைமறைவு வாழ்க்கை தொடங்குகின்றது.

அப்போது அவனிற்கும் இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. அவன் தலைமறைவாகினாலும் அவனிடம் தற்பாதுகாப்பிற்கு ஆயுதமும் இருக்கவில்லை. தொடக்கத்தில் அவன் வைத்திருந்தது கத்தியொன்றைத்தான். போராளிகளுடன் தொடர்பை மேற்கொள்ள அவன் முயற்சித்தபோதும் தொடர்புகள் கிடைக்கவில்லை. தேவன் ஆயுதம் ஒன்று கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருந்தான். அவனது முயற்சிக்கு ஒரு "சொட்கண்" கிடைத்தது. அதை வைத்துக்கொண்டு படையினர் மீது தாக்குதலை மேற்கொண்டு ஆயுதம் ஒன்றைக் கைப்பற்ற அவன் முயற்சித்துக் கொண்டிருந்த போது போராளிகளின் தொடர்பு அவனுக்குக் கிடைத்தது.

தேவன் தலைமறைவானதுமே சிங்களப் படையினர் அவனைத் தேடினார்கள். தேவனின் வீட்டிற்குச் சென்று அவனது மனைவியை மிரட்டினார்கள். இராணுவத்தின் தொல்லை அதிகரித்ததால் அவளும் அவளது குழந்தையும் தேவனுடன் சேர்ந்து தலைமறைவாகினார்கள். ஒரு குழந்தையுடன் தலைமறைவு வாழ்க்கை என்பது எத்தனை கடினமானது. ஒவ்வொரு இரவுகளும் அவர்களுக்கு நெருக்கடியைக் கொடுத்தன. ஆனால் அந்த நெருக்கடிகளுக்குள்ளாலும் தேவனின்




# சண்டைக்காரன்

திட்டங்களிற்கு அவள் ஒத்துழைப்புக் கொடுத்தாள்.

வவுனியாவிற்குள் சென்ற போராளிகள் தேவனின் விருப்பத்தைத் தங்கள் தலைமையகத்திற்குத் தெரிவித்து அனுமதி பெற்று அவனை இணைத்துக்கொண்டார்கள். தேவன் வவுனியாவின் ஊர்களையெல்லாம் நன்கறிவான். அந்த ஊர்களின் ஒவ்வொரு சந்துபொந்துகளும் அவனுக்கு நன்கு பரிச்சயமானவை. தாக்குதலுக்கான வேவுகள் பார்க்கப்பட்டன. எதிரி வல்வளைத்த பகுதிக்குள் மறைந்து வாழ்ந்தபடி எதிரிக்குத் தொல்லைகொடுக்கத் தொடங்கினார்கள். எப்போதும் எந்தக் கணத்திலும் எதிரியால் உயிர் அச்சுறுத்தல் இருந்தபோதும் அவனது மனைவியும் குழந்தையும் தலைமறைவு வாழ்க்கையையே வாழ்ந்தனர். தலைமறைவு வாழ்க்கையின் அத்தனை கடினங்களையும் சிலகாலம் அவர்கள் அனுபவித்தனர்.

இந்தக் கடினங்களைத் தாங்கியபடி தேவன் நடாத்தவிருக்கும் தாக்குதலுக்கு அவனது துணைவியும் குழந்தையும் வேவு பார்த்துக்கொண்டிருந்தனர். அவள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு படைக் காப்பரண்கள் அமைந்திருக்கும் இடம், அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள், அங்கு நிலைகொண்டுள்ள படையாட்களின் எண்ணிக்கை போன்ற விடயங்களை அவதானித்து வந்து தேவனிற்குக் கொடுப்பாள். போராளிகள் சேர்த்த வேவுத் தகவல்களோடு இந்தத் தகவல்கள் சரிபார்க்கப்பட்டு அதன் பின் தாக்குதல் நடக்கும்.

இரணைஇலுப்பைக் குளத்தில் தேவனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இப்படித்தான் வேவு பார்க்கப்பட்டது. தாக்குதல் நடைபெறவிருந்த அன்றைய நாள் காலையும், தேவனின் மனைவி வேவு பார்த்துக்கொடுத்தாள். வேவுத் தகவல்களின்படி அங்கு காப்பரண் அமைத்திருந்த சிங்களப் படைகள் மீது அதிரடித்தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. திட்டத்தின்படி தாக்குதல் வெற்றிகரமாக நடந்துமுடிந்தது. ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். நான்கு துப்பாக்கிகளும் இதர பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இதேபோல தட்சணாமருதமடுப் பகுதியில் குளத்தில் குளிப்பதற்கு வரும் படையினர் மீது தேவன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் நான்கிற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இப்படி தட்சணாமருதமடு, முள்ளிக்குளம், மடு, பாலம்பிட்டி என பல பகுதிகளிலும் தேவனின் தாக்குதல்கள் நடைபெற்றன.

தேவனுடன் சண்டைக்குச் செல்வதென்றால் போராளிகள் போட்டிபோட்டுக்கொண்டு முன்வருவார்கள். ஏனெனில் தேவனில் அத்தகைய நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. அவன் சண்டைகளைத் திட்டமிடும்போது இழப்புக்கள் இல்லாமல் எப்படி வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்தமுடியுமோ அப்படிச் செய்யக் கூடிய வகையில் நன்கு திட்டமிடுவான். களத்தில் முதலாளாய் தானே நிற்பான். நிலைமைகளுக்கு ஏற்றவாறு முடிவெடுத்துச் சமர்க்களங்களைச் சாதுரியமாய் வழிநடத்துவான். எந்தப் போராளியும் தேவனுடன் சண்டைக்குப் போவதென்றால் சம்மதித்துப் போய்விடுவான். தேவன் அத்தகைய சாதனைகளைச் சண்டையில் சாதித்திருக்கின்றான்.

துணிந்தவனே சமரில் வெற்றியடைவான். தேவன் துணிந்தவன். அதனால் வெற்றிகளுக்குச் சொந்தக்காரனாகினான். தேவனின் துணிவிற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட "கிளைமோர்" தாக்குதல் ஒன்று சான்று பகர்கின்றது.

கவச ஊர்திகளில் சுற்றுக்காவல் செய்யும் படையினர் மீது "கிளைமோர்" தாக்குதலுக்கு இடம் பார்க்கப்பட்டு நாளும் குறிக்கப்பட்டது. தேவன் தெரிவுசெய்த இடம் தாக்குதலை நடாத்துவதற்கு முற்றிலும் சாதகமற்ற இடம். தாக்குதலில் சின்னப் பிசகு நடந்தாலும் தாக்குதலுக்குச் செல்லும் அத்தனைபேரும் சந்தேகத்திற்கு இடமின்றி அந்த இடத்திலேயே எதிரியால் கொல்லப்படக்கூடும். இதனால் இந்த இடத்தைத் தெரிவு செய்ய வேண்டாமெனப் போராளிகள் அவனிற்கு ஆலோசனை கூறினார்கள். அந்த இடத்தில் சிறு சிறு பற்றைகளே இருந்தன. எழுந்து நின்றால் எதிரியால் உடனடியாகவே இனங்காணப் படக்கூடிய சாத்தியம் அதிகம் இருந்தது. தேவனிற்கு இவையெல்லாம் சின்னப் பிரச்சினைகள். இந்தத் தாக்குதலை இந்த இடத்தில்தான் நடாத்தவேண்டும் என அவன் உறுதியாய் நின்றான். "கிளைமோர்" வெடிக்கவைக்கும் ஆழியை இயக்கும் பொறுப்பையும் தானே எடுத்துக்கொண்டான். அவனுடன் சென்ற போராளிகளை நிலையெடுக்கச் செய்துவிட்டு சிறு பற்றை மறைவில் இருந்தபடி ஊர்தியை அவதானித்து கிளைமோரை வெடிக்கவைத்தான். பதட்டம் இல்லாமல் அந்தச் சிறுபற்றைக்குள் இருந்தபடி படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களை அவதானித்தான். இந்தத் தாக்குதலில் 18மேற்பட்ட சிங்களப் படைகள் கொல்லப்பட்டனர்.

தேவனின் வெற்றிகரமான இந்தத் தாக்குதல்களால் எதிரி சினமடைந்தான். தேவனை எப்படியாவது கொன்றுவிடவேண்டுமென்று அலைந்துதிரிந்தான் எதிரி. ஒருநாள் தேவனின் குடும்பம் மறைவிடம் ஒன்றில் இருந்தபோது சிறீலங்கா படை சுற்றிவளைத்துக்கொள்கின்றது. தேவனின் குழந்தை பச்சைச் சீருடையுடன் வருவது போராளிகள் என நினைத்து அவர்களை நோக்கிச் சென்றது. நிலைமை இப்போது விபரீதமாகிவிட்டது. குழந்தையை விட்டுவிட்டு இருவரும் தப்பிக்கமுடியாது. உடனடியாகவே முடிவெடுக்கின்றனர். தேவனை ஓடித்தப்புமாறு சொல்லிவிட்டு மனைவி படையினருக்குத் தன்னை வெளிக்காட்டிக் கொள்கின்றாள். சிறீலங்கா படை அவளை அடித்துத் துன்புறுத்தியது. தேவன் இருக்கும் இடத்தைக் காட்டுமாறு மிரட்டியது. அவர்கள் நினைத்தது நடக்கவில்லை. அவளது தாயை அழைத்துத் தேவனிடம் இனி இவளை அனுப்பவேண்டாம் என சொல்லி ஒப்படைத்தார்கள்.

தேவன் இப்படி பல நெருக்கடிகளைச் சந்தித்தான். அவனது கள வாழ்விற்குள் ஒரு பொழுதில் அரவம் தீண்டி கடும் உபாதைக்கு உட்பட்டான். இனி தப்பமுடியாது என்று எண்ணும் அளவிற்கு நிலைமை விபரீதமாக இருந்தது. தேவனிற்குப் பாம்பு கடித்த செய்தி படையினரின் காதுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. தேவன் இனி செத்துவிடுவான் என மகிழ்ச்சிக்கொண்டாட்டம் போட்டார்கள். ஆனால் தேவன் தப்பிவிட்டான்.

தேவனை எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நடவடிக்கை ஒன்றிற்காக வருமாறு பணிப்பு வந்தது. ஆனால் தேவன் அதை மறுத்துவிட்டான். இயக்கத்திலிருந்து சிறிதுகாலம் தான் ஒதுங்கியிருந்ததால் சண்டைகளில் நிறையச் சாதித்தபின்னரே தான் வருவேன் என அடம்பிடித்தான். எனினும் அவன் கட்டாயம் வரவேண்டும் என மீள வலியுறுத்திய பின்னரே விடுதலைப் புலிகளின் வன்னித்தளம் நோக்கி வருகின்றான். 1999ஆம் ஆண்டின் 10 மாதம் தேவனின் குடும்பம் இரவோடு இரவாக எதிரியின் காவலரணூடாக பல இடர்களைத் தாண்டி வன்னித் தளம் வந்தடைந்தது.

தேவன் இதன் பின்பும் அதிக நாட்களை வவுனியா படை வல்வளைப்புப் பகுதியிலேயெ கழித்தான். படையினருக்குத் தொல்லைகொடுக்கும் பல தாக்குதல்களை அங்கிருந்தபடி மேற்கொண்டான். தேவனிற்கு எப்போதும் பிடித்தது சண்டைதான். அதற்கேற்றபடியே தனக்குக் கீழிருக்கும் போராளிகளை வழிநடத்துவான். அவனது குடும்பம் வன்னிக்கு வந்தபின் அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைத்ததால் தனது நேரம் முழுவதையும் போராளிகளுடனேயே செலவு செய்யவிரும்பினான். வீட்டிற்குச் சென்றாலும் "அங்க என்னபாடோ தெரியாது" என்று சொல்லிவிட்டுப் போய்விடுவான்.

"உங்கட சேவைக்காலம் காணும்தானே" என்று கேட்டால் "நான் சண்டைபிடித்து வீரச்சாவுதான் அடையவேண்டும் அது தான் என்ர விருப்பம்" என்று சொல்லுவான். "அப்பிடி நடக்காட்டி என்ர பிள்ளையள் வளர்ந்த பிறகு நான் அவயளுக்குச் சண்டை பழக்கி அவையும் சண்டை பிடிக்கத் தொடங்கினாத்தான் நான் சண்டையில இருந்து ஓய்வு பெறலாம்" என்று சண்டையைப் பற்றியே கதைத்துக்கொண்டிருப்பான்.

இந்திய படைக் காலத்திலிருந்து இற்றைவரை பல சண்டைக் களங்களைத் தேவன் சந்தித்திருக்கின்றான் படை நகர்வு முறியடிப்புக்கள், பதுங்கித் தாக்குதல்கள், காவலரண் மீது தாக்குதல்கள், தேச விரோதிகள் மீதான தாக்குதல், கடற்புலிகள் அணியில் சிறிதுகாலம் இருந்தபோது கடற்சண்டை என இது வரை 55இற்கும் மேற்பட்ட களங்களைச் சந்தித்துச் சாதனை படைத்தவன் தேவன். இந்த நீண்ட களச் சாதனைகளின்போது பலமுறை அவன் விழுப்புண் அடைந்திருக்கின்றான். அவனது உடலெங்கும் காயத்தழும்புகள் சாட்சியமாய் இருக்கிறது. தலையில், தோள்மூட்டில், நெஞ்சுப் பகுதியில், மூச்சுப் பையில், தொடையில், காலில் என உடலின் பல்வேறு பகுதிகளிலும் விழுப்புண் தழும்புகள். இந்த விழுப்புண்களை அவன் ஒரு பொருட்டாகக் கருதியதில்லை.

தன் தாய்நாட்டிற்காகத் தான் மட்டுமல்லாது போராளி அல்லாத தன் மனைவியோடும், குழந்தையோடும் தேவன் அதிகம் சாதித்த மாவீரன். ஒரு போர் வீரன். களத்தில் சண்டையிடுவதற்கு குடும்பம் ஒரு சுமையல்ல. அது துணையென்று நிரூபித்தவன் தேவன். இறுதி நாட்களில் அவன் மணலாறு மாவட்டத்தில் பகுதிப் பொறுப்பாளராகக் கடமையாற்றினான். தன் பணியைச் சரிவர நிறைவேற்றுவதில் இங்கும் கடுமையாய் உழைத்தான். இந்த வீரன்தான் 29.03.2007 அன்று மணலாற்றுப் பகுதியில் எதிரியுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வித்தாகிப் போனான். வித்துக்கள் புது வீரியத்தோடு முளைவிடும். அந்த வீரியம் இந்தத் தேசத்தை எப்போதும் காத்துநிற்கும்.

– புரட்சிமாறன்

விடுதலைப் புலிகள் (பங்குனி – சித்திரை 2007)

www.sangathamil.ca




# முடிவிற்கு கொண்டுவரப்பட்டதா கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி?

யூலை 16, 2024

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 52 மனித எலுப்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன நிலையில் இன்று (16.07.2024) புதைகுழி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி கடந்த ஆண்டு 2023.06.29 ஆம் திகதி இனம் காணப்பட்ட நிலையில் மூன்று கட்டங்களாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு இதுவரை 52 மனித எச்சங்கள் மீட்கப்பட்ட நிலையில் இன்றுடன் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களின் போது 40 மனித எச்சங்கள் மீட்கப்பட்ட நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வு கடந்த 04.07.2024 அன்று ஆரம்பமாகி 15.07.2024 வரைஇடம்பெற்று 12 மனித எசசங்கள் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின், இன்றைய (16) அகழ்வாய்வுப் பணிகளின் நிறைவில் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்

52 மனித எச்சங்களுடன் சான்று ஆதாரப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் ஸ்கான் பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் இந்த மனிதப்புதைகுழி மேலும் நீடிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்ற நிலையில் நீதிமன்ற அனுமதியுடன் பகுதிளயவில் மூடப்பட்டுள்ளன.

இன்னும் ஒரு சில தினங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பணியகத்தினை சேர்ந்த அதிகாரிகள் பார்வையிட்டு முற்று முழுதாக இந்த மனித புதைகுழிகளை மூடுவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தலைமையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர்

தடயவியல் பொலிசார், உள்ளிட்ட தரப்பினரின் முன்னிலையில் மூன்றாம் கட்ட அகழ்வு பணியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் நீதிபதி முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் இதற்குமுன்னர் இடம்பெற்ற இரண்டு கட்ட அகழ்வாய்வுகளின்போது 40மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளில் இதுவரை மீட்க்கப்பட்ட 12 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளுடன் மொத்தம் 52 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

















# மூதூர் – பெரியவெளி அகதிமுகாம் படுகொலையின் 38வது ஆண்டு நினைவேந்தல்!

யூலை 16, 2024

மூதூர் பிரதேசத்தின் தெற்கு பகுதியின் A15 பிரதான வீதி மல்லிகைத்தீவு சந்தியின் ஊடாக செல்கையில் 500 மீற்றர் தொலைவில் மணற்சேனை, பெருவெளி கிராமங்கள் அமைந்துள்ளன.

1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது இம் மக்கள் இடம் பெயர்ந்து பின் மீள குடியேறி அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் 1986ம் ஆண்டு யூலை மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பால் மல்லிகைத் தீவு சந்தியில் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் மூதூர் சென்று திரும்பிய தெகிவத்தை, சேருநுவர ஆகிய இராணுவ முகாம்களை சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச் சந்தர்ப்பத்திலும் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து ஒரு சில நாட்களின் பின் மீண்டும் தமது வீடுகளுக்கு வந்து வசிக்கத் தொடங்கியதுடன் சில குடும்பங்கள் பெருவெளி பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமிலும் தங்கி இருந்தனர். அத்தோடு இவ் அகதி முகாமில் பாரதிபுரம், மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலை கட்டிடத்திலும் அவ் வளாகத்தினுள் ஓலைக் கொட்டில்கள் அமைத்தும் தங்கி இருந்தனர்.



இவ்வாறான நிலையில் கண்ணிவெடி சம்பவம் நடைபெற்று ஒரு மாதம் கழித்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பழி தீர்க்கும் முகமாக 1986.07.16 அன்று அதிகாலை 03:00 மணியளவில் மணற்சேனை பெருவெளி ஆகிய கிராமங்கள் கட்டைபறிச்சான், மூதூர், தெகிவத்த, சேருநுவர ஆகிய இராணுவ முகாம்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும் சுற்றி வளைக்கப்பட்டன. அதன்பின்னர் வீடு வீடாக புகுந்த இரா



ணுவத்தினர் வீட்டில் பயத்தில் உறைந்து இருந்த ஆண்களை ஒவ்வொருவராக சுட்டுக் கொலை செய்து கொண்டு வந்தனர். அதிகாலை நேரம் நாய்கள் குரைப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியதால் சில ஆண்கள் ஓடி ஒழிந்து கொண்டனர். இவ்வாறு தமது கொலை வெறியை ஆரம்பித்த இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் பெருவெளி அகதி முகாமில் தஞ்சம் அடைந்திருந்த மக்களை சுற்றிவளைத்து அங்கிருந்த 17 ஆண்களை ஒன்று திரட்டி ஓர் இடத்தில் முழந்தாழிட வைத்து குடும் பத்தினர் கண் எதிரே சுட்டுக் கொண்று குவித்தனர். அகதி முகாம் மரண ஓலமாக மாறியது. இவ்வாறு தமது கொலைத் தாண்டவத்தினை காலைவரை அரங்கேற்றிய இராணுவத்தினர் அகதி முகாமில் படுகொலை மேற்கொண்டதனை மறைப்பதற்கான திட்டத்தினை தீட்டி அகதி முகாமில் படுகொலை



செய்யப்பட்ட 17 அப்பாவி ஆண்களின் சடலங்களை தமது இராணுவ வாகனத்தினைக் கொண்டு ஏற்றி கட்டைபறிச்சான் இராணுவ முகாமிற்கு எடுத்துச் சென்றனர்.

இராணுவத்தினர் வெளியேறிய பின் பெருவெளி, மணற்சேனை கிராமங்களில் இருந்து 25 ஆண்களின் சடலமும் 02 பெண்களின் சடலமும் மீட்கப்பட்டு மணற்சேனை இந்து மயானத்தில் ஓர் பெரிய குழி அகழப்பட்டு மாலை 05:00 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டன. பின் அகதி முகாமிலிருந்து கொண்டு செல்லப்பட்ட 17 ஆண்களின் சடலங்களும் 1986.07.18 அன்று பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இச் சடலங்கள் இந்து மயானத்தில் ஓர் குழியில் அடக்கம் செய்யப்பட்டன. இப் படுகொலை சம்பவத்தில் 42 ஆண்கள், 02 பெண்கள் உட்பட 44 அப்பாவிப் பொது மக்கள் பரிதாபகரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் குறித்த தினத்தில் அங்கிருந்த 11 பேரை கைது செய்து அழைத்துச் சென்றனர். இவர்களில் 8 பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதோடு 3பேர் சிறையில் அடைக்கப்பட்டு சில வருடங்களின் பின் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்களது 17 பேரின் சடலங்களும் கட்டைபறிச்சான் GPS இராணுவ முகாமில் வைத்து பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படுகொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம்

01.இராசையா செல்லத்துரை – பாரதிபுரம்

02.ஆரியத்தம்பி சிவசுப்ரமணியம் – பாரதிபுரம்

03.சித்திராவி கனகய்யா – பாரதிபுரம்

04.முத்துக்குமார் சிவநாயகமூர்த்தி – பாரதிபுரம்

05.இராசையா குமாரதுரை – பாரதிபுரம்

06.வேலுப்பிள்ளை ஆறுமுகம் – மல்லிகைத்தீவு

07.கோணாமலை இராசநாயகம் – மல்லிகைத்தீவு

08.கதிரவேல் நாகேந்திரம் – மல்லிகைத்தீவு

09.கோணாமலை வீரக்குட்டி – மல்லிகைத்தீவு

10.கதிர்காமத்தம்பி வைரக்குட்டி – மல்லிகைத்தீவு

11.வெற்றிவேல் குணசிங்கம் – மல்லிகைத்தீவு

12.சித்திரவேல் குணசிங்கம் – மல்லிகைத்தீவு

13.சித்திரவேல் ஜெகன் – மல்லிகைத்தீவு

14.சித்திரவேல் பத்தக்குட்டி – மல்லிகைத்தீவு

15.ஆலப்பிள்ளை – மல்லிகைத்தீவு

16.செல்லையா சுந்தரலிங்கம் – மல்லிகைத்தீவு

17.பொன்னையா – மல்லிகைத்தீவு

18.மாரிமுத்து சிறிகந்தராசா – மல்லிகைத்தீவு

19.வைரமுத்து வைரக்கட்டயன் – மல்லிகைத்தீவு

20.மாரிமுத்து யோகராசா – மல்லிகைத்தீவு

21.சி. மகேந்திரன் – மணற்சேனை

22.வீரக்குட்டி மயில்வாகனம் – மணற்சேனை

23.செல்லையா சித்திரவேல் – மணற்சேனை

24.வடிவேல் நவரெட்ணராசா- மணற்சேனை

25.இராசகுலம் – மணற்சேனை

26வைரமுத்து குணசேகரம் – மணற்சேனை

27அழகுதுரை சத்தியசீலன் – மணற்சேனை

28செல்லத்தம்பி தர்மராசா – மணற்சேனை

29.கந்தவனம் கமலம் – மணற்சேனை

30.சிவசுப்ரமணியம் யோகதாஸ் – மணற்சேனை

31.பத்தக்குட்டி கனகநாயகம் – மணற்சேனை

32.மகேந்திரன் – மணற்சேனை

33.சின்னத்துரை குணநாயகம் – பெரியவெளி

34.கந்தையா தங்கராசா – பெரியவெளி

35.காளிக்குட்டி அருளம்பலம் – பெரியவெளி

36.பசுபதி மோகனதாஸ் – பெரியவெளி

37.சேதுநாதன் கோணாமலை – பெரியவெளி

38.தம்பிமுத்து தங்கராசா – பெரியவெளி

39.தியாகராசா வடிவேல் – பெரியவெளி

40.நாகராசா சரஸ்வதி – பெரியவெளி

41.பத்தக்குட்டி மகாலிங்கம் – பெரியவெளி

42.பத்தக்குட்டி யோகராசா – பெரியவெளி

43.பிரான்சிஸ் மார்டின் – இருதயபுரம்

44.அரசரெட்டினம் ஆலப்பிள்ளை – புன்னையடி, ஈச்சிலம்பற்று.

மூதூர் – பெரியவெளி அகதி முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் 38வது நினைவுநாள் நிகழ்வு பாதிக்கப்பட்ட மக்களினால் இன்று (16) பெரியவெளி கிராமத்தில் நினைவு கூரப்படுகின்றது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டம் முன்னெடுப்பு!

யூலை 20, 2024

சட்டவிரோதமாக தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று (20.07.2024 ) சனிக்கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த விகாரைக்கு வழிபடச் செல்லும் இன வழிப்பு சிங்கள இராணுவத்தினர், எதிராகப் போராடும் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டதை அவதானிக்க முடிகிறது.







# மாகாணத்தின் அதிகாரங்களில் மத்தி தலையிடுவதை அனுமதிக்க முடியாது!

## ஈ.பி.ஆர். எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

யூலை 20, 2024

வடக்கில் மாத்திரமன்றி நாடு முழுவதுமே , சுகாதாரத்துறை சீர்கெட்டுள்ளது. அதற்காக மாகாணத்தின் அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்துகிற விதமாக எவரும் செயற்பட கூடாது என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சுகாதார துறை மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றினை வெளிப்படுத்திய வைத்தியர் அருச்சுனா இராமநாதனுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதற்காக மாகாணத்திற்கு உரிய அதிகாரங்களை கேள்விக்கு உட்படுத்தும் விதமாக செயற்பட முடியாது.

போதனா வைத்தியசாலைகள் மற்றும் சிறப்பு வைத்திய சாலைகள் மாத்திரமே மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ளன. ஏனைய வைத்தியசாலைகள் மாகாண அரசின் கீழ் உள்ளவை.

அவற்றுக்கான நியமனங்கள் மாகாண ஆளுநர், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் மாகாண பணிப்பளார் என ஒரு ஒழுங்கின் கீழ் தான் வர வேண்டும்.

கொழும்பில் இருந்து மத்திய அரசின் நியமனங்கள் மாகாண அமைச்சின் கீழான நியமனங்களில் செல்வாக்கு செலுத்த முடியாது. அதனை அனுமதிக்கவும் முடியாது.

கொழும்பில் இருந்து மாகாணத்தின் கீழ் இயங்கும் வைத்திய சாலைக்கு நியமனம் பெற்று வந்து, மாகாணம் சொல்வது எதனையும் கேட்க மாட்டேன். கொழும்பு சொல்வதை மாத்திரமே கேட்பேன் என கூறுவது மாகாணத்திற்கான அதிகாரத்தை கேள்விக்கு உட்படுத்துவதாகும்.

அதனை அனுமதிக்க முடியாது. அதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் குரல் எழுப்ப வேண்டும் .




நாட்டின் சுகாதார துறை சீர்கெட்டு போயுள்ளது என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை. சுகாதார அமைச்சராக இருந்தவர், தரமற்ற மருந்துகளை இறக்கிய குற்றச்சாட்டில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனும் போதே நாட்டின் சுகாதார துறை எந்தளவு தூரம் மோசமாக உள்ளது என்பது தெரிகிறது.

அதற்காக வடக்கில் மாத்திரமே சுகாதாரம் சீர்கெட்டு உள்ளதாக விம்பத்தை உருவாக்கி மாகாணத்தின் அதிகாரங்களில் மத்தி தலையிடுவதை அனுமதிக்க முடியாது என தெரிவித்தார்.

# கறுப்பு 1983 யூலை 23

**பொதுவாக கறுப்பு யூலை என நினைவுகூரப்படுவது,இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடந்த தமிழர் விரோத படுகொலைகள், யூலை 23 முதல் யூலை 30 வரை நீடித்த கொடூரமான அரச அனுசரணையுடன் நடந்த இனப்படுகொலையாகும். வாக்காளர் பதிவுப் பட்டியலைக் கொண்டு ஆயுதம் ஏந்திய கும்பல்கள் குறைந்தது 3,000 தமிழர்களின் உயிரைப் பறித்தது, அத்துடன் 5,000 தமிழர் கடைகளை அழித்தது, 150,000க்கும் மேற்பட்ட தமிழர்களை இடம் பெயர வைத்தது. 500க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். பல குடும்பங்கள் உயிருடன் கொதிக்கும் தார்ப் பீப்பாய்களுக்குள் தூக்கி வீசப்பட்டார்கள், பல நூறு மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். இது தமிழர்களின் முதலாவது பாரிய இடப்பெயர்வாக கருதப்பட்டது (500,000 பேர் தீவை விட்டு வெளியேறினார்கள்). அத்துடன் தமிழர் என்கின்ற இனமொன்று இலங்கையில் உள்ளது என்பதை உலகிற்கு பறைசாற்றியது.**

# யாழ். ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சிகள் தற்காலிகமாக நிறுத்தம்!

## யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரம புஷ்பரட்ணம்

யூலை 20, 2024



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்ற அகழ்வு பணிகள் நேற்றைய தினம் சனிக்கிழமையுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரம புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதி பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றைய தினம் சனிக்கிழமை யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.



அந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டவற்றை ஆய்வு செய்யும் நடைமுறைகளை இனித்தான் முன்னெடுக்க வேண்டும்.

எம்மால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொல்லியல் பொருட்களை யாழ். பல்கலையில் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவற்றை விரைவில் பல்கலைக்கழகத்தில் காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யவுள்ளோம்.

பலரிடமும் ஒரு கேள்வி இருக்கிறது, தொல்லியல் ஆய்வினை ஏன் ஆனைக்கோட்டையில் செய்தார்கள்? என. பலருக்கு ஆனைக்கோட்டையின் வரலாறு தெரியாது. யாதொரு வரலாற்று முக்கியத்துவமான இடம்.

ஆணைக்கோட்டையில் 1980 ஆம் ஆண்டு கால பகுதியிலையே ஆய்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

அந்த ஆய்வு பணிகளின் போது, யாழ்ப்பாணத்தில் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இருவரின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் கீழ் நிவேதிய பொருட்களையும், முத்திரை மோதிரங்களும் மீட்கப்பட்டன. அவை சிந்து வெளி காலத்திற்கு உரியது. அவற்றில் பிரமி எழுத்துக்களும் காணப்பட்டன. அதில் இன குழுமம் ஒன்றின் தலைவனின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தது

அந்த தொல்லியல் பொருட்களை 1998 ஆம் ஆண்டு இழந்துள்ளோம்.

இந்த நிலையிலையே மீண்டும் கடந்த ஜூன் மாதம் முதல் அகழ்வாய்வு பணிகளை மீள மேற்கொள்ளப்பட்டது.

1980களில் நவீன தொழினுட்பங்கள் இருக்க வில்லை. ஆனால் தற்போது நவீன தொழினுட்பங்கள் இன்றி மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுகள், விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்த முடியாது.

அதனால் இலங்கையில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களின் உதவியுடன், மிக பிரமண்டமாக ஆனைக்கோட்டை பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக அகழ்வாய்வுகளை மேற்கொண்டோம்.

எமது ஆய்வு நடவடிக்கையில் கற்காலத்திற்கு முற்பட்ட ஆய்வுகளை மேற்கொண்ட அனுபவம் வாய்ந்தவர்கள், என்புகளை ஆய்வு செய்து காலத்தை கண்டறிய கூடியவர்கள் என பலதரப்பட்டவர்களை ஒன்றிணைத்தே முன்னெடுத்தோம்.

இந்த அகழ்வு ஆய்வின் போது புலமையானவர்களின் பங்களிப்புடன், தொல்லியல் மாணவர்களின் பங்கும் மிக முக்கியமாக இருந்தது.

அவர்கள் வகுப்பறையில் கற்பதை விட செயல்முறை ஊடாக கற்பதே சிறந்தது. அதனால் பல மாணவர்கள் ஆர்வத்துடன் பணியாற்றினார்கள் என மேலும் தெரிவித்தார்,

# சிறீலங்கா ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது போட்பாளரை நிறுத்துவதற்கான கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை!

யூலை 22, 2024







ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று இன்றைய தினம் திங்கட்கிழமை கைச்சாத்திடபட்டது.

தமிழ் சிவில் சமூகத்திற்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் இந்த உடன்படிக்கை யாழ்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் சுப நேரமான மதியம் 12.12 க்கு கைச்சாத்திடப்பட்டது.

கடந்தகாலங்களில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கு வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தேவைகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தெடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த்து.

இந்நிலையில் இரு தரப்பினர்களுக்கு இடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த உடன்படிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி. விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தான் ஆகியோரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, ஜனநாயக போராளிகள் சார்பில் சி.வேந்தன் உள்ளிட்ட அரசியல்வாதிகளும், அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி அ.யோதிலிங்கம், அரசியல் விமர்சகர் யதீந்திரா மற்றும் அரசியல் விமர்சகர் நிலாந்தன் உள்ளிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கையொப்பம் இட்டனர்.









# தமிழ்த் தேசிய கட்சிகள் மற்றும் தமிழ் மக்கள் பொதுச்சபை யாழில் இன்று கைச்சத்திடப்பட்ட உடன்படிக்கை!

யூலை 22, 2024



தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகிய இரு தரப்பினரின் இணைவில், உருவாக்கப்படும் இக்கட்டமைப்பு "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" என அழைக்கப்படும் என உடன்படிக்கையில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் - தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகிய வற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, யாழ்ப் பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இன்றைய நாள் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாவது,

தமிழ்த் தேசியக் கட்சிகள் - தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகிய வற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை 9 அம் சங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஈழத்தமிழ் மக்கள் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கில் தமக் கென ஒரு மரபு வழித் தாயகத்தைக் கொண்ட, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வடக்கு கிழக்கு உள்ளடங்கலாக இலங்கைத் தீவில் வாழும் தேசிய இனம் என்ற அடிப்படையில், சுயநிர்ணய உரிமையைக் கொண்டவர்கள்.

அடிப்படையிலும் உச்சபட்ச தன்னாட்சியைக் கோருவதற்கான உரித்துடையவர்கள். அதனடிப்படையிலும் பன்னாட்டுச் சட்டங் களின் நீண்ட வரலாற்றையும் மிகச் செழிப்பான பண்பாட் டையும் கொண்ட தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை சிதைக்கும் நோக்கத்துடன், நிலப்பரப்பு ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும், மதரீதியாகவும் என பல்வேறு வழி களில் இலங்கைத்தீவில் இனவழிப்பு நடவடிக்கைகள் சிறீலங்கா அரசினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டம் தீவிரவாத மாகவும் பிரிவினைவாதமாகவும் பயங்கரவாதமாகவும் சித்தரிக்கப்பட்டு வருகின்றது.

ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவில் ஒரு தேசிய இனமாக இருப் பதும், கேந்திர முக்கியத்துவம் மிக்க புவிசார் அமைவிடத்தை வாழ்விடமாகக் கொண்டிருப்பதும் அவர்களது பிரதான அரசியல் பலமாகும் என்னும் யதார்த்தத்தின் பின்னணியில்தான் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் முதலில் பிராந்திய மயப்பட்டது. பின்னர் அனைத்துலகமயப்பட்டது.

நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் இனப்படுகொலை செய்யப் பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களின் விவகாரத்தில் பன்னாட்டுச் சமூகம் காட்டி

வந்திருக்கின்ற கரிசனைகளைச் சிறீலங்கா அரசு எந்தவிதத் திலும் பொருட்படுத்தவும் இல்லை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவுமில்லை.

அதேநேரத்தில் முள்ளிவாய்க்காலின் பின்னரான கடந்த



பதினைந்து ஆண்டுகளில், இலங்கைத் தீவின் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக தமிழ் மக்களிற்கு சம உரிமையை வழங்கும் அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு நகர்வுகளைக்கூட இதுவரை காலமும் முன்னெடுக்கவில்லை.

இனப்படுகொலைக்கு எதிரான நீதியுமின்றி, அரசியல் தீர்வு மின்றி, ஒன்றுபட்ட அரசியல் தலைமைத்துவமும் இன்றி பாரபட் சங்களும், அடக்குமுறைகளும், அச்சுறுத்தல்களும், ஆக்கிரமிப் புக்களும். அழிப்புகளும், பிரித்தாளும் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு அரசியல், பொருளாதார, இராணுவச் சூழலில் தந்திரங்களும் தமிழ் மக்களின் தேசிய இருப்பு கேள்விக்குள்ளாகி நிற்கின்றது.

இவ்வாறான வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலும், இதுகாலவரையிலான அனுபவங்களின் அடிப்படையிலும், சிறீலங்காவின் 2024 அரசுத்தலைவர் தேர்தலைத் தமிழ் மக்கள் தரப்பில் செயல்முனைப்புடன் எதிர்கொள்ளவேண்டிய அரசியல் தேவையும் அவசியமும் எழுந்திருக்கின்றது.

இந்த யதார்த்தத்தின் பின்னணியில், தமிழ்த் தேசத்தின் மக்களை ஒன்றுபடுத்துவது என்னும் பிரதான நோக்கத்தோடு, எதிர்வரும் சிறீலங்காவின் அரசுத்தலைவர் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று. தமிழ் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபையும் இணக்கம் கண்டுள்ளன.

அத்துடன், இதனைச் செயல்முனைப்புடன் கையாளும் நோக் கில், பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான புரிந் துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதென்றும் முடிவைக் கொண்டுள்ளன.

இதன்பிரகாரம் இவ்வுடன்படிக்கையின் சம தரப்புக்கள் என்னும் வகையில், தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவை பின்வரும் அடிப்படையில் புரிந்துணர்வு ஒன்றினை ஏற்படுத்திக்கொள்கின்றன.

1. தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகி யவை இவ்வுடன்படிக்கையில் சம தரப்பினர் என்னும் வகை யில், இரு தரப்பினரின் இணைவில், உருவாக்கப்படும் இக்கட் டமைப்பு "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" என அழைக் கப்படும்.

2. இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படும் "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலை. சிறீலங்காவின் அரசுத் தலைவரை தேர்வு செய்வதற் கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக கையாளும் வகை யில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதெனத் தீர்மானித் துள்ளது.

3. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தல், தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல், நிதி தொடர்பான விடயங்கள். பரப்புரைகளை முன் னெடுத்தல் போன்ற, அனைத்து அவசியமான செயற்பாடுகளை யும் முன்னெடுப்பதற்கும் நிர்வகிப்பதற்குமான, துணைக் குழுக்களை தேவைக்கேற்ப உருவாக்கும் அதிகாரங்களை கொண்டிருக்கும்.

4. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பால் பொதுவேட்பாளரை நடவடிக்கைக்காக உருவாக்கப்படும் குறித்த துணைக் குழுக்கள் மற்றும் ஏனைய துணைக் கட்டமைப்புக்கள் அனைத் திலும் தமிழ்த் தேசியக் கட்சிகள். தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை சமதரப்பாகப் பங்குபற்றும்.

5. தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக் கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாக மட்டுமே கருதப்படுதல் வேண்டும்.

6. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது பொது வேட்பாள ராகத் தெரிந்தெடுக்கப்படுபவருடனும், அவர் எந்த அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வமாக நிறுத் தப்படுகின்றாரோ அந்த நபருடனும் அந்தக் கட்சியுடனும் அவ சியமானதும் உகந்ததுமான, உடன்படிக்கையைத் தனித் தனியே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

7. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகிய இரு தரப்பும். ஒரு பொதுக் கட்டமைப்பாக செயற் படுபவர்கள் என்னும் அடிப்படையில் கூட்டுப் பொறுப்புடைய வர்கள் என்பதில் இணக்கம் காணப்படுவதுடன், வழிகாட்டல் நெறிமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்வது என்றும் இணக்கம் இதற்கான காணப்படுகின்றது.

8. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உடன்பாடுள்ள ஏனைய கட் சிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு, பொதுக் கட்டமைப்புடன் இணைந்து பயணிக்க முன்வரும்போது, அவர்களை உள்வாங்கிக் கொள்வதென்றும் இணக்கம் காணப்படுகின்றது.

9. தமிழ்த் தேசிய இனத்தின் நீண்டகால அரசியல் அபி லாசைகளை நிறைவேற்றும் குறிக்கோளுடன் தொடர்ந்து செயற்படுவதென இருதரப்பும் மேலும் இணங்கிக் கொள் கின்றனர்

என 09 புரிந்துணர்வுகள் அடங்கிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

குறித்த உடன்படிக்கையில், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) , தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தமிழ் தேசிய கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) தமிழ் தேசிய பசுமை இயக்கம் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் கைச்சாத்திட்டுள்ளனர்.

தமிழரசு கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# கறுப்பு யூலை 41ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் யாழ். முனியப்பர் கோயில் முன்றலில் நினைவேந்தப்பட்டது! - 23.07.2024









## சிங்களத்தின் கோர முகத்தை நினைவூட்டும் கறுப்பு யூலை!

யூலை 23, 2024




இலங்கையில் கறுப்பு யூலை 1983ஆம் ஆண்டு இடம்பெற்று இனப்படுகொலை 41 ஆண்டுகளாகின்றன. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இதில் கொல்லப்பட்டனர். பெரும் எண்ணிக்கை யானவர்கள் படுகாய மடைந்தார்கள்.

தலைநகர் கொழும்பு மற்றும் நாட்டின் தென்பகுதி நகரங்களில் தமிழர்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு சூறையாடப் பட்டன. தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான வீடுகள், கட்டடங்களுக்கு தீ வைக்கப்பட்டன. வீதிகளில் வாகனங்கள் மறிக்கப்பட்டு தமிழர்கள் இருக்கின்றார்களா என்று தேடித் தேடி தமிழர்கள் மீது தாக்குதல் களை சிங்கள இன வெறியர்கள் நடத் தினார்கள்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் 1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் நாள் நள்ளிரவுக்குச் சற்று முன்னதாக இராணுவத்தினர் பயணம் செய்த வாகனங்களின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய வழி மடக்கித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள்.

ஆயுத மோதல்கள் சிறிய அளவில் அங்கொன்றும் இங்கொன்று மாக நடை பெற்றுக் கொண்டிருந்த அந்தக் காலப் பகுதியில் ஒரே தாக்குதல் சம்பவத்தில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிகழ்வு...

அந்நிகழ்வில் படுகாயமடைந்திருந்த மேலும் இரண்டு படைச் சிப்பாய்கள் பின்னர் மரணமடைந்ததையடுத்து, இந்தத் தாக் குதலில் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்திருந்தது. ஆயினும் இந்தச் சம்பவத்தில் உடனடி யாகக் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரே பொதுவாக இதில் உயி ரிழந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

இறந்த இராணுவத்தினருடைய சடலங்களுக்கு கொழும்பு பொரளையில் உள்ள கனத்தையில் இறுதிநிகழ்வுகள் செய் வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்திருந்தது. இதனை உறவினர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் விரும்ப வில்லை. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இது பின்னர் கலவரமாக வெடித்தது.

எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப்போன்று யாழ்ப் பாணத்தில் பவுத்த பிக்கு ஒருவரை உயிரோடு எரித்து விட் டார்கள் என்றும், கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்காக விடுதலைப் புலிகள் வந்து விட்டார்கள் என்றும் காட்டுத் தீ போன்று பரப்பப்பட்ட வதந்திகளையடுத்து, கொழும்பு நகரின் பல இடங் களிலும், ஏனைய பல நகரங்களுக்கும் கலவரங்கள் பரவின.

இந்தக் கலவரங்களில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். சில இடங்களில் குடும்பமாகத் தமிழர்கள் கொல்லப்பட்ட தாகவும் செய்திகள் வெளியாயின. இக் கலவரங்களில் சுமார் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணிப் பீடுகள் தெரிவிக் கின்றன. ஆயினும் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகம் என்றே கூறப்படுகின்றது.

நகரப்பகுதிகளில் மட்டுமல்லாமல் மோசமான குற்ற செயல் களில் ஈடுபட்ட சிங்களவர்கள் கைதிகளாக இருந்த கொழும்பு வெலிக்கடைச்சிறையில், மற்றொரு பகுதியில் அரசியல் கைதிக ளாக தமிழர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். வெளியே கலவரம் ஏற்பட்டிருந்த நிலையில் சிறைக்காவலர்களாக இருந்த சிங் களவர்களால், தமிழர்கள் அடைக்கப்பட்டிருந்த சிறைக்கதவு திறக்கப்பட்டு, சிங்களக்கைதிகளால் தாக்கப்பட்டு கொல்லப் பட்டனர்.

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை அரசியல் கைதிகளாக நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்ட 53 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மரண தண்டனை விதிக்கப்பட்டபோது நீதிமன்றத்தில் குட்டி மணி தான் இறந்த பின்னர் தன்னுடைய கண்களை எடுத்து பார்வையில்லாத ஒருவருக்கு பொருத்தி சுதந்திர தமிழ் ஈழத் தைக் காண விரும்பு வதாகக் கூறினார். ஆனால், சிங்களக் கைதிகள் சிறையிலேயே குட்டிமணியைத் தாக்கி கொலை செய்து, அவருடைய கண்களைப் பிடுங்கி நசுக்கிய கொடுமை அன்றைய நாளில் நடைபெற்றது.

உலக வரலாற்றில் மிகமோசமான சிறைக்கலவரமாக சிறைச் சாலைப் படு கொலையாக இது பார்க்கப்படுகின்றது.

பின்னாளில் பல அரசியல் திருப்பங்களுக்கு வித்திட்டிருந்த இந்த வன் முறைகளில் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வித நிவாரண மும் வழங்கப்படவில்லை.

இந்த வன்செயல்கள் காரணமாக சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக் கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்குரிய ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் பின்னர் வந்த அரசுகளாலும் மேற்கொள்ளப்படவில்லை.

40 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இனக்கலவர வன் முறைகள் குறிப்பிட்ட தமிழினத்தை முற்றிலுமாக அழிப் பதற்கான நடவடிக்கையாகவே இலங்கைத் தமிழ் மக்களால் கருதப்படுகிறது

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் நாளில் இலங்கை தலைநகர் கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக சிங்கள காடையர் கும்பலால் நடத்தப்பட்ட கலவரத்தினால் ஏறத்தாழ 3000க்கு மேற் பட்ட தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஆனால் அரசாங்க புள்ளி விவரங்கள் வெறும் 471 பேர் என்று குறிப்பிடுகின்றன.

தலைநகரில் மட்டும் ஏறத்தாழ 3700 கடைகள், எண்ணுக் கணக்கற்ற தமிழர்களின் வீடுகள் உடைக்கப்பட்டும், எரிக்கப் பட்டும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இராணுவத்துக்கும், போராளிகளுக்கும் இடையில் யுத்தத்தில் 13 படையினர் கொல்லப்பட்டால் அதன் கோபத்தை, அப்பாவி மக்கள் மீது காட்டும் கோழைத்தனமான, தமது கேவலமான பழிவாங்கலாக திட்ட மிட்டு நடத்தப்பட்ட கலவரங்களாகும் இவை!

தமிழ் குழந்தைகள் எரியும் தார் பீப் பாயிகளில் போடப்பட்டு கொல்லப்பட்டனர். தமிழ் பெண்களின் மார்பில் சுடு தாரால் "ஶ்ரீ" என எழுதப்பட்டது. பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத் தப்பட்டு கொல்லப்பட்டனர். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்து நெருப்பில் போட்டனர். உயி ருடன் கொளுத்தப்பட்ட தமிழர்கள் பலர். இவ்வாறு இன்னும் சொல்ல முடியாத பல கொடுமைகள் சிங்களவர்களால் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டன.

தமிழன் உயிர்வாழ விரும்பினால் தமக்கென்று ஒரு நாடு வேண்டும் என்று ஆயுதம் தூக்க வழிவகுத்தது இந்த 1983 யூலை. வரலாற்றில் கருப்பு யூலை என்று குறிப்பிடப்படுகிறது.

பட்ட துன்பங்களை மறக்கக் கூடாது. இதை அடுத்தடுத்த தலை முறைகளுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். பன்னாட்டளவில் உள்ள தமிழர்கள் இதுகுறித்த உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கிற அளவில், தமிழர்களுக்கென்று ஒரு நாள் விடியும் என்கிற எதிர்பார்ப்பில் பன்னாட்டளவில் உள்ள தமிழர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்...!

# யாழில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் முன்னெடுப்பு!

யூலை 23, 2024

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கலைத்தூது மண்டபத்திற்கு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.






வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் ஆனாது வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் நாட்களில் சுழற்சி முறையில் முன்னெடுக்கவுள்ளதாக உறவுகள் தெரிவித்தனர்.








# யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு!

யூலை 23, 2024

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் யாழ்.மாவட்ட சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்ற நிர்வாக தெரிவில் செயலாளராக நி. மேரி ரஞ்சினியும், தலைவராக சிவபாதம் இளங்கோதையும், உப தலைவராக சு. கஜேந்திரனும் உப செயலாளராக புஸ்பலதாவும், பொருளாளராக விஜயபாமாவும் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

அதனை தொடர்ந்து ஏனைய நிர்வாக குழு தெரிவுகள் இடம்பெற்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி தொடரும் பயணத்தினை தொடர்ந்தும் தாம் முன்னெடுத்து செல்ல உள்ளதாகவும், தம் மீது சர்வதேச நாடுங்கள் கரிசனை கொண்டு , தமக்கான நீதியினை பெற்று தர வேண்டும் என புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட சி. இளங்கோதை தெரிவித்தார்.










## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# வெலிகடைச் சிறைப் படுகொலையின் 41 ஆம் ஆண்டு நினைவு நாள்!
# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அரசியல் கைதிகளை பார்வையிட்டனர்!

யூலை 23, 2024




வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட தியாகிகளை நினைவு கூர்ந்தும் வகையில் வெலிகடை சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளை பார்வையிட்டு அவர்களுடன் அன்பை பரிமாறிக்கொள்வதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனும் அவரது கட்சி உறுப்பினர்களும் அருட்தந்தை மா.சக்திவேல் மற்றும் சிலரும் இன்று(23) வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றிருந்தனர்.

1983ஆம் ஆண்டு யூலை மாதம் இடம்பெற்ற தமிழின அழிப்பைத் தொடர்ந்து யூலை 25, 27ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள், தங்கத்துரை, குட்டிமணி அடங்கலாக 53 அரசியல் கைதிகள் படுகொலைசெய்யப்பட்டனர்.




யூலை 23 ஆம் திகதி முதல் தொடர்ந்த இந்தத் திட்டமிட்ட இனப் படுகொலைகளின்போது மூவாயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன், தென்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அவர்களது அனைத்து உடமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் வடக்



கிற்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

1983 கறுப்பு யூலை இனப்படுகொலை தொடர்பிலோ, 2009 இல் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது நிகழ்த்தப்பட்ட யுத்தக் குற்றங்கள் உட்பட மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள் தொடர்பிலோ இதுவரை சிறீலங்கா அரசாங்கம் நீதியான விசாரணைகளை மேற்கொள்ள எந்த வொருநடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அன்று முதல் தொடரும் தமிழினப் படுகொலைக்கு நீதிகோரும் போராட்டங்களும் இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

# தமிழ்மக்களுக்குச் சுயாட்சி அடிப்படையிலான தீர்வு வழங்கப்படவேண்டும்!
## மக்கள் போராட்ட முன்னணியினர்

யுலை 23, 2024

தமிழ்மக்களுக்கான தீர்வு சுயாட்சி அலகுகளுடன் கூடியதாக அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக வுள்ளதாக மக்கள் போராட்ட முன்னணியினர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.




முன்னிலை சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, சோஷலிச மக்கள் மன்றம் ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளும் காலிமுகத் திடல் அரகலய எழுச்சியில் இணைந்து நின்ற முற்போக்கு ஜனநாயக அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் ஒன்றிணைந்து அரசியல் வேலைத்திட்ட அடிப்படையில் உருவாக்கிய ஐக்கிய முன்னணி அமைப்பான மக்கள் போராட்ட முன்னணியின் யாழ்ப்பாணத்திற்கான முதலாவது ஊடக மாநாடு செவ்வாய்க்கிழமை (23.07.2024) யாழ். றிம்மர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மக்கள் போராட்ட முன்னணியினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேசும் போதே தென்னிலங்கையில் பேரினவாதிகள் துள்ளிக் குதிக்கும் நிலையில் சுயாட்சி அதிகாரம் என்ற மிக உயர்ந்த அதிகாரக் கொள்கையை நாங்கள் தீர்வாக முன்வைத்துள்ளோம். இதனால், பேரினவாதிகள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்பதும் எங்களுக்குத் தெரியும். எனினும், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளக் கூடிய தைரியத்தை நாங்கள் கொண்டுள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# கிளிநொச்சியில் கறுப்பு யூலை 41ஆவது ஆண்டு நினைவேந்தல் முன்னெடுப்பு!

யூலை 23, 2024

கறுப்பு யூலைப் படுகொலையின் 41வது ஆண்டு நினைவேந்தல், இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கட்சியின் மாவட்டப் பணிமனை அறிவகத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, எழுத்தாளரும் ஆசிரியருமான தீபச்செல்வன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்தனர்.









# மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட கறுப்பு யூலை கவனயீர்ப்புப் போராட்டம்!

யூலை 23, 2024

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கவன ஈர்ப்பு போராட்டம் இன்று புதன்கிழமை மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் நடைபெற்றது.

கறுப்பு யூலை 41, வது ஆண்டு நினைவாக இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வினர்களின் ஏற்பாட்டில் முன்னெடுத்திருந்தனர்.

கையில் ஒப்படைத்த எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது, காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது, என்பதை கண்டறிய சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கூறி போரட்டத்தை முன்னெடுத்தனர்.





# முல்லைத்தீவு செம்மலை பழைய நீராவியடி பிள்ளையார் ஆலய பொங்கல் உற்சவத்தினை குழப்பும் முயற்சியில் சிறீலங்கா பொலிசார்; ஆலய நிர்வாகத்தினருக்கும் பொலிசாருக்கும் இடையில் முறுகல்!

யூலை 24, 2024

முல்லைத்தீவு - பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றையநாள் சிறப்பாக இடம்பெற்றுவந்த வேளை அதனை குழப்பும் முகமாக பாரிய மீன் கூலர் ரகவாகனம் வரவழைக்கப்பட்டு ஆலயத்திற்கு மின் வழங்கும் வயர் அறுக்கப்பட்டு பொங்கல் உற்சவத்தினை தடுக் கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற றுள்ளது.



முல்லைத்தீவு - பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் ஆரம்பமாகிய நிலையில் நேற்றையதினம் பாரம்பரிய முறைப்படி கோட்டைக்கேணி பிள் ளையார் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு உற் சவம் ஆரம்பித்து இன்றைய நாள் பொங்கல் உற்சவம் இடம்பெற்றது.

இந்நிலையில் மாலை நேரம் ஆலய வளாகத்திற்குள் மீன் வியாபாரம் மேற்கொள்ளும் கூளர்ரக வாகனம் ஒன்றினை பொலிசார் உள்ளே அழைத்து குறித்த வாகனத்தினால் ஆலயத் திற்கு செல்லும் மின்சார வயர் அறுக்கப்பட்டதனால் பொலிசார், பிக்கு மற்றும் ஆலய நிர்வாகத்தினருக்கிடைய முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்றைய நாள் பொங்கல் உற்சவம் நடைபெற்ற



வேளை திட்டமிட்டு குழப்பும் நோக்கோடு ஆலய வளாக பகுதிக் குள் மீன் ஏற்றும் கூலர்ரக வாகனம் கொண்டுவரப்பட்டு ஆல யத்திற்கு மின் வழங்கும் வயர் அறுத்து விடப்பட்டுள்ளது. இதனால் ஆலயத்தில் மின் தடை ஏற்பட்டிருந்தது. அத்தோடு அறுத்துவிடப்பட்ட மின் வயறினால் மின் தாக்கும் அபாயமும்



ஏற்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் ஆலய உற்சவத் தினை குழப்பும் நோக்கிலையே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளை யார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றைய நாள் (24) இடம்பெறவிருந்த நிலையில் நேற்றையநாள் (23) ஆலயத்திற்கு சென்ற பொலிஸ், இராணுவம் மற்றும் தொல் பொருள் திணைக்களத்தினர் ஆலய பணிக்காக வருகை தந்த பூசாரி உள்ளிட்டவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக ஆலய பூசகர் தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தை அபகரித்து சட்ட விரோதமாக பௌத்த விகாரை அமைத்து பல்வேறு நெருக்கடிகள் வழங்கப்பட்டு வந்திருந்தது. தற்போது குறித்த ஆலயத்தின் வழிபாடுகள் தொடர்ச்சியாக ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். அச்சுவேலி – தொண்டமனாற்று வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை!

யூலை 24, 2024

யாழ்ப்பாணம், அச்சுவேலி - தொண்டமானாறு வீதி மிக மோசமான நிலையில் பழுதடைந்துள்ளமையால், வீதியால் பயணிப்போர்கள் மிக சிரமங்களின் மத்தியிலையே பயணிக் கின்றனர்.



யாழ்ப்பாணத்தில் பருவ மழை காலத்தில் தொண்டமானாறு நீர் குறித்த வீதியின் மேலாக பாய்ந்து ஓடுவதால், வீதி மழை காலங்களில் வீதிகளில் பாரிய குழிகள் தோன்றி வீதியால் பயணிக்க முடியாத அளவுக்கு வீதி மோசமாக சேதமடைந்து இருக்கும்.



பின்னர் மழை காலம் முடிய தொண்டைமனாற்றில், நீர் குறைய வீதியில் உள்ள குழிகளை மூடி வீதியை தாற்காலிக மாக புனரமைத்து மக்கள் தமது போக்குவரத்தினை தொடரு வார்கள்.

இம்முறை வீதி பருவ மழை காலம் முடிவடைந்து சுமார் 07 மாதங்கள் கடந்த நிலையிலும் பழுதடைந்த வீதியினை தற் காலிகமாக வேணும் புனரமைக்கப்படாது இருப்பதால் , வீதியால் செல்வோர் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்

எதிர்வரும் 04ஆம் திகதி செல்வச்சந்நிதி ஆலய வருடாந்திர திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த வீதியினை அதிகளவானோர், வாகனங்களில் பயணிப்பார்கள் என்பதால் , வீதியினை விரைந்து புனரமைத்து தருமாறு கோரியுள்ளனர்.

தொண்டமானாற்று நீர் வீதியின் மேலாக ஓடாதவாறு குறித்த வீதியானது உயர்த்தப்பட்டு, பொருத்தமான இடங்களில் சிறிய பாலங்கள் அமைத்து வீதியினை நிரந்தமாக தரமான வீதியாக புனரமைத்து தருமாறு பல வருடங்களாக அப்பகுதி மக்கள் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# யாழில் வெலிக்கடை படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யூலை 25, 2024

இலங்கை சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப் பட்டிருந்த நிலையில், பல்வேறு காலகட்டங்களில் சாவினைத் தழுவிய, தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூர்ந்து நினைவு வணக்க நிகழ்வுகள் இன்றைய நாள் யாழில் இடம்பெற்றது.





"வெலிக்கடை சிறைப் படுகொலை" இடம்பெற்ற நாளான இன்றைய நாள் வியாழக்கிழமை மாலை 3.05 மணிக்கு, யாழ்ப் பாணத்திலுள்ள "தந்தை செல்வா கலையரங்கில்" நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவினர்கள், முன்னைநாள் அரசியல் கைதிகள், சர்வகட்சி அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட் டாளர்கள், பல்கலைக்கழக மாணவ மற்றும் ஆசிரியர் சமூகத் தினர், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்













# குருந்தூர்மலை விவகார வழக்கு மீண்டும் தவணை!

யூலை 25, 2024

குருந்தூர்மலை தொடர்பான வழக்கு ஒன்று இன்றைய நாள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றிருந்தது.

B1053 / 2022 என்ற இலக்கமுடைய வழக்கு தொடர்ச்சியாக தவணைகள் வழுங்கப்பட்டு இடம்பெற்று வந்த நிலையில் இன்றையநாள் (25.07.2024) குறித்த வழக்கு இடம்பெற்றிருந்தது. குறித்த வழக்கில் சம்பந்தப்பட்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கு விசாரணை விவாதங்கள் நடைபெற்று 16 ஆம் திகதி தை மாதம் 2025 அன்று (16.01.2025) வழக்கு மீண்டும் நீண்ட கால இடைவெளியின் பின்னர் தவணையிடப் பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்புகள் மதிக்கப்பட வேண்டும், சைவ வழி பாடுகளை மேற்கொள்ள எந்தவித இடையூறுகளும் விளை விக்க கூடாது, குருந்தூர் மலையை அண்டிய பகுதிகளில் நில அபகரிப்பு தடுக்கப்பட வேண்டும் என தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனை பகுதி மக்களால் கடந்த 2022.09.21 குருந்தூர் மலையில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அவ் ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்து கொண்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன், கரைதுறைப் பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோரை விசாரணைகளை மேற்கொள் வதற்காக முல்லைத்தீவு பொலிஸார், பொலிஸ் நிலையம் வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர். இந்நிலையில் பொலிஸ் நிலையம் சென்றவர்களை பொலிசார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# வவுனியா வெடுக்குநாறி ஆலயப் பூசகரிடம் பயங்கரவாத புலனாய்வு பிரிவு விசாரணை!

யூலை 27, 2024



வவுனியா வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகரான மதிமுகராசாவை பயங்கரவாத புலனாய்வு பிரிவின் வவுனியா அலுவலகத்தினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு வருமாறு கிராம சேவையாளர் ஊடாக விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் மதிமுகராசா பயங்கரவாத புலனாய்வு பிரிவின் வவுனியா அலுவலகத்திற்கு சென்று இருந்தார்.

அங்கு கடும் விசாரணைகள் இடம் பெற்றதோடு வெடுக்குநாறி ஆலயம் தொடர்பான பல்வேறு விடயங்களும் அவரிடம் வினாவப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாட்டின் போது பொலிசாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் பொலீசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களில் ஆலய பூசகரும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் இடம்பெற்ற கறுப்பு யூலை படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யூலை 27, 2024

கறுப்பு யூலை படுகொலையின் 41 ஆம் ஆண்டுநினைவேந்தலும் பொதுக் கூட்டமும் யாழில் இன்று சனிக்கிழமை (27) நடைபெற்றது.



ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்க மண்டபத்தில் இவ் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.




கடந்த 1983 ஆம் ஆண்டு யூலை 25-27 ஆம் திகதிகளில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 அரசியற் கைதிகள் உள்ளிட்ட அனைவரையும் நினைவுகூர்ந்து நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில் வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் பொதுச் சுடரை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஏனையவர்களும் சுடரேற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் என். சிறிகாந்தா உள்ளிட்ட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின்




தலைவர்கள் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் மற்றும் யூலை கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அகவணக்கம் செலுத்தினர்.








# தமிழ் வேட்பாளர் யார் என அறிவிக்க உப கட்டமைப்பு உருவாக்கம்!

யூலை 28, 2024

சிறீலங்காவின் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர் யார் என்பதை தெரிவதற்கும், தேர்தல் அறிக்கையை தீர்மானிப்பதற்கும், கட்சி சின்னத்தை தீர்மானிப்பதற்குமான உப கட்டமைப்புக்கள், நிதி மற்றும் பரப்புரை நடவடிக்கைகளுக்கான உபகட்டமைப்புக்கள் என்பன உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பின் விசேட கூட்டம் யாழ் நகரிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இன்றைய நாளட ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதில் பொதுக் கட்டமைப்பின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து  முக்கிய சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பு தொடர்பாக சிவில் சமூகப் பிரதி நிதியும் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினருமான அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக் கப்பட்டுள்ள தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் முதலாவது கூட்டம் இன்று நடை பெற்றது.

இதன் போது பொதுவேட்பாளரை நிறுத்துவது குறித்தான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில்



சில தீர்மானங்களை எடுத்திருக் கிறோம்.

# வலிந்து காணாமலாக்கப்பட்ட எம் உறவுகளுக்கு ஜனாதிபதியால் தீர்வு தர முடியுமா?

## மன்னார் – வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா

யுலை 28, 2024

நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை (28) காலை 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போதே சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.







அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை அரசாங்கமும் சரி சர்வதேசமும் சரி, எங்களை ஒரு தடவையாவது திரும்பி பார்க்க வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மாத முடிவில் வடக்கு, கிழக்கில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான நாங்கள் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வீதியில் நின்று போராடி வருகிறோம்.

ஆனால், எங்களை ஒருவருமே திரும்பி பார்ப்பதாக தெரியவில்லை. எனினும், எங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வீதியில் இறங்கிப் போராடி வருகிறோம். ஆனால், நீதிக்காக ஏங்கி போராடி வருகின்ற அம்மாக்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் சாட்சிகளும் மறைக்கப்பட்டுக் கொண்டு செல்கிறது. அதனையே இந்த அரசும் விரும்புகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை (OMP) மாவட்ட ரீதியாக ஸ்தாபித்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு 2 இலட்சம் ரூபாய் கொடுப்பதாக கூறுகின்றனர். எமது உறவுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த அரசு இந்த பணத்தை வழங்குகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் ஊடாக உண்மையை கண்டறிவோம் என கூறப்பட்டுள்ள போதும் இதுவரை உண்மையை கண்டறிய யாரும் முன்வரவில்லை. ஆனால் இழப்பீடு வழங்குவதற்காக மாத்திரம் முன்னுக்கு வருகின்றனர்.

நாங்கள் நஷ்டஈட்டை பெற்றுக்கொண்டு வீட்டில் இருக்க வேண்டும் என்பதே ஓ.எம்.பியின் நோக்கமாக உள்ளது.

எமது பிள்ளையின் உயிர் 2 இலட்சம் பெறுமதி இல்லை. எங்கள் பிள்ளைகளை திருப்பி தந்தால் 4 இலட்சம் எங்களால் தர முடியும். உயிருடன் ஒப்படைத்த பிள்ளைகளையே கேட்கிறோம். தற்போது ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு தற்போதைய ஜனாதிபதியினால் தீர்வு தர முடியுமா? நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் காணாமல் போன எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக்கொண்டே இருக்கிறோம். நேரடியாக சென்று சந்தித்து கலந்துரையாடியும் உள்ளோம்.

ஆனால், இதுவரையில் எந்த ஜனாதிபதியும் எமக்கான பதிலை வழங்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதியாக வந்தால் காணாமல் ஆக்கப்பட்ட எம் பிள்ளைகளையும் உறவுகளையும் மீட்டுத் தருவாரா? அல்லது எமது உறவுகளுக்கு நீதி கிடைக்குமா? அல்லது இருக்கின்ற இடத்தை கண்டுபிடித்து தருவாரா? அந்த எதிர்பார்ப்புக்களுடனே இன்று வரை போராடி வருகிறோம்.

இலங்கை அரசியலில் நம்பிக்கை இல்லை. இவ்வாறான காரணங்களினாலேயே சர்வதேச விசாரணை கோரி போராட்டம் முன்னெடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழரைத் தாங்கிய சிங்களவர் விக்கிரமபாகு கருணாரட்ன மறைந்தார்! தலைதாழ்த்தி விழிநீர் சிந்துகிறது தமிழீழம்! காசி ஆனந்தன் அவர்கள் இரங்கல் செய்தி...

யூலை 27, 2024



பிரிட்டிசார் வெளியேறிய பின்பான இலங்கையில் புத்த - சிங்கள மத - இனவெறி அரசுகளும், வெறிகொண்ட புத்த சிங்கள படைகளும் - காடைக் கும்பலும் ஈழத்தமிழர்களை வேட்டையாடியும், பிணங்களாய்க் குவித்தும், அவர்களின் தாயகமான தமிழீழத்தின் நிலங்களைப் புத்த சிங்களவர் குடியேற்றங்களால் பிடுங்கியும் ‘இனவழிப்பு’ நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

சிங்களவரிடையே மாந்தநேயம் பேசும் இடதுசாரிகளோ புத்தனின் அறம் பேசும் மதத் தலைவர்களோ - மக்கள் நலன் பேசும் இலக்கியர்களோ - குடி உரிமை பேசும் அரசியல் தலைவர்களோ யாரும் தமிழீழ மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை எதிர்த்துச் சிலிர்த்தெழவில்லை.

ஒரே ஒரு சிங்களவர் தமிழரின் பெருமூச்சோடும் விம்மலோடும் கண்ணீரோடும் ஏக்கத்தோடும் உயிர் வதையோடும் ஒன்றி நின்றார்.

அவர்தான் இலங்கை நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ன.

‘இலங்கையில் சிங்கள இனம் தோன்றுவதற்கு முன்பு இலங்கை தமிழர் தேசமாக இருந்தது’ என்று சிங்கள இனவெறியர்களின் நடுவில் வழ்ந்துகொண்டே ஓர் வரலாற்று உண்மையை புத்த மதவெறிப் பீடங்கள் அதிர இடித்துரைத்தவர் விக்கிரமபாகு கருணாரட்ன.

சிறீலங்காவில் நடைபெறுவது தமிழின அழிப்பு (Genocide) என்று அவர் சினம் கொண்ட உறுமினார்.

அரசு தமிழர்கட்குத் தன் முடிபுரிமை (சுயநிர்ணய உரிமை) வழங்க வேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தினார்.

தலைவர் பிரபாகரன் அவர்களை அவர் பிறந்தநாளில் வாழ்த்தினார் என்பதற்காக விக்கிரமபாகு கருணாரட்ன அவர்களைச் சிங்கள இன வெறியர்கள் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் இக்காலகட்டத்தில் அவர் தலைமறைவு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டி இருந்ததென்பதும் அவர் வரலாறாகும்.

அடக்குமுறைச் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிரான அறத்தின் குரல் அது.

துணிச்சலாக நெருப்பின் நடுவில் தமிழர் துணையாக நின்றார்.

உலக நாடுகளெங்கும் முற்போக்காளர் அமைப்புகளிடையே ஈழத்தமிழரின் போராட்ட வழ்வு குறித்த செய்திகள் பரவ உறுதுணையாக இருந்தார்.

ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழீழ மக்களின் அறம்தழுவிய உரிமைக்குரலாய் விளங்கிய ஒரே ஒரு சிங்களவரை - ஒப்பற்ற விடுதலைப் போராளியை இழந்தோம்.

தமிழர்களின் இனிய நண்பர் விக்கிரமபாகு கருணாரட்ன அவர்களுக்குத் தமிழீழத்தின் அஞ்சலி.

கவிஞர் காசி ஆனந்தன்
தலைவர்,
ஈழத் தமிழர் நட்புறவு மையம்

# இந்து தலங்களை பௌத்த மயமாக்கும் நடவடிக்கையில் சிறீலங்கா அரசாங்கம்!

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

யூலை 29, 2024

இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் வழிபாட்டுதலங்கள் மற்றும் அது தொடர்பான பகுதிகளிற்கு செல்வதை தடுக்கும், மறுக்கும் நடவடிக்கைகளில் இலங்கை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், அவ்வாறான இடங்களை பௌத்தஸ்தலங்களாக, பௌத்தர்களிற்கு உரிய பகுதிகளாக மாற்றுவதிலும் அரசாங்கம் ஈடுபடுகின்றது என தெரிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களம் உட்பட அரசஸ்தாபனங்கள், இராணுவம், பொலிஸார் இணைந்து மத சிறுபான்மையினத்தவர்களின் கலாச்சாரம், வழிபாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளும் ஒரு ஒருங்கிணைந்த மூலோபாயத்தை முன்னெடுக்கின்றனர் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அவர்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குகிழக்கில் சிங்களபௌத்த குடியேற்றங்களை ஊக்குவிக்கின்றனர், இது பெரும்பான்மையான தமிழ் முஸ்லீம் மக்களின் சொத்து மற்றும் மத உரிமை ஆகியவற்றிற்கு தீங்குவிளைவிப்பதாக காணப்படுகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

26வருட ஈவிரக்கமற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் பிரிவினை வாத தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கை அரசாங்கம் 2009 இல் தோற்கடித்தது முதல், வடக்குகிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் பாதுகாப்பு தரப்பினரும் செயற்பாட்டாளர் குழுக்களை கண்காணிப்பது, உடன்பட மறுத்தலை ஒடுக்குவது, போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், மதசுதந்திரத்திற்கான உரிமையை அதிகளவில் மீறி வருகின்றனர் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

வடக்குகிழக்கில் உள்ள இந்துகோவில்களில் அதிகாரிகள், பௌத்த மதகுருமாருடன் இணைந்து இந்து மத கடவுள்களின் விக்கிரகங்களை சேதப்படுத்தியுள்ளனர், அல்லது அகற்றியுள்ளனர், வழிபாட்டில் ஈடுபடுபவர்களை அச்சுறுத்தியுள்ளனர் தாக்கியுள்ளனர், கைதுசெய்துள்ளனர், அவர்களிற்கு வழிபாட்டிற்கான அனுமதியை மறுத்துள்ளனர், என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், நில அபகரிப்பின் மூலம் தமிழ் முஸ்லீம்களின் சொத்துக்களை அவர்கள் இலக்குவைத்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

சிறுபான்மையினத்தவர்களின் கலாச்சார மத அடையாளங்கள் மீதான அதிகரித்த ஒடுக்குமுறைகள் காரணமாக நல்லிணக்கம் குறித்து இலங்கை அரசாங்கம் உரத்தகுரலில் பேசுவது போலியானதாக, வெறுமையானவையாக தோன்றுகின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதிஇயக்குநர் மீனாக்சிகங்குலிதெரிவித்துள்ளார்.

ஏனையமக்களை பலிகொடுத்து சிங்களபௌத்த தேசியவாதத்தை ஊக்குவிக்கும் மலினமான இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு சர்வதேசத்தின் ஒருங்கிணைந்த அழுத்தம் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்!

யூலை 29, 2024




திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் இன்று திங்கட்கிழமை (29) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுதுடன் ஆர்ப்பாட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் பங்கு பற்றியிருந்தார்கள்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்களுக்கான நீதி வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தியும் சர்வதேச பொறிமுறையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் "உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள்?" "காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும், அச்சுறுத்துத்துவதையும் நிறுத்துங்கள்", நாங்கள் கேட்பது இழப்பீடுகளையோ மரணச்சாண்றிதழை அல்ல முறையான நீதி விசாரணையையே! என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இம்மாதம் 24ஆம் திகதி முதல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதி வரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி அவர்களின் உறவுகளினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.









# வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவிக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அழைப்பு!

யூலை 29, 2024

மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அ. அமலநாயகியை பயங்கரவாத தடுப்பு பிரிவில் இன்று (29.07.2024) முன்நிலையாகுமாறு அழைப்பு விடக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவின், அலுவலகத்திற்கு இன்று காலை 10:00 மணிக்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் தொடர்ச்சியாக மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவிக்கு இவ்வாறு புலனாய்வுப் பிரிவினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது உரிமைக்காக போராடுவோரை அச்சுறுத்தும் வகையில் இவ்வாறான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். பருத்தித்துறை பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் வைத்து சந்தேகநபர் மீது தாக்குதல்!

யூலை 29, 2024

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் நிலைய தடுப்பு காவலில், தடுத்து வைத்து சந்தேக நபர் ஒருவரை மூர்க்க தனமாக தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்ய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர், கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் தடுத்து வைத்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று இருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிசார், இளைஞனை தாக்கிய குற்றச்சாட்டில் இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், இருவரையும் தலா 50ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் திணைக்கள ரீதியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், காங்கேசன் துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் விசாரணைகள் முடிவடையும் வரையில் பணி இடை நீக்கம் செய்துள்ளார்.



# மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் சூரிய மின் உற்பத்தியை விஸ்தரிக்கும் திட்டத்திற்கு எதிராக மக்கள் போராட்டம்!

யூலை 29, 2024

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் சூரிய மின் உற்பத்தியை விஸ்தரிக்கும் திட்டத்திற்கு எதிராக கிராம மக்கள் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக இன்று திங்கட்கிழமை (29) போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

நாவற்காடு கிராமத்தில் கடந்த 2022 ஒக்டோபர் மாதம் திறக்கப்பட்டு இயங்கி வரும் சூரிய சக்தி மின் உற்பத்தி (சோலார் பவர்) நிலையம் மேலும் பல மடங்கு விஸ்தரிக்கப்படவிருப்பதாக கூறி சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தை அண்டிய கிராம மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த சூரிய மின் உற்பத்தியை விஸ்தரித்தால் தமது விவசாய நிலங்களுக்கும், குடியிருப்புக்களுக்கும் கிராம மக்களுக்கும் பா





திப்பு ஏற்படும் என தெரிவித்து இதன்போது தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இந்த விஸ்தரிப்பு திட்டத்தினை நிறுத்தக் கோரி பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர்.

# கிராம சேவகரின் உதவியாளர் மக்கள் நலத்திட்டங்களில் பாகுபாடு காட்டுவதாக யாழில் பெண்ணொருவர் போராட்டம்!

யூலை 30, 2024

யாழ்ப்பாணம், நவாலி வடக்கு ஜே/134 கிராம சேவகர் பிரிவில் கிராம சேவகரின் உதவியாளராக பெண்ணொருவர் செயற்பட்டு உதவித் திட்டங்களில் பாகுபாடு காட்டுவதாக தெரிவித்து பொண்ணொருவர் திங்கட்கிழமை (29) குறித்த கிராம சேவகர் அலுவலகத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டார்.

வருகின்ற உதவித் திட்டங்களை தனக்கு விரும்பியவர்களுக்கு வழங்குவதாகவும், பொதுக் கூட்டங்களுக்கு சமூகமட்ட பொது அமைப்புகளுக்கு அறிவித்தல் வழக்குவதில்லை எனவும், பொதுவான இடங்களில் கூட்டத்திற்கான அழைப்பு அறிவித்தல் ஒட்டப்படுவதில்லை எனவும், தனக்கு விரும்பியவர்களுக்கு தொலைபேசி மூலம் அறியத் தருவதாகவும் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பான முறைப்பாட்டை தான் ஏற்கனவே அரசாங்க அதிபர் மட்டத்துக்கு கொண்டு சென்ற நிலையில் இதற்கு முன்னர் இருந்த கிராம சேவகர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும், புதிதாக வந்த கிராம சேவகரும் ஒரு வருடம் கழிந்த நிலையில் அந்த பெண்ணின் கருத்துப்படியே செயற்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

அத்துடன், அரசாங்கத்தால் வழங்கப்படும் வாழ்வாதாரங்களிலும் பாகுபாடு காட்டப்படுவதாகவும் அவர் தெரிவித்ததுள்ளார். இவ்வாறு செய்ய வேண்டாம் என தான் பலமுறை கூறி முரண்பட்ட நிலையில், தான் பயங்கரவாதத்தை மீளுருவாக்க செய்யவுள்ளதாக பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு மொட்டை கடிதம் மூலம் முறைப்பாடு செய்து, பழிவாங்கும் முகமாக தன்னை பயங்கரவாத தடுப்பு பிரிவு விசாரணைக்கு அழைத்ததாகவும் கூறுகின்றார்.

நேற்றைய தினம் போராட்டத்தில் தான் ஈடுபட்டவேளை அவ்விடத்திற்கு வந்த கிராம சேவகர் தன்னிடம் எதுவும் கேட்கவில்லை என்றும், இன்றும் (30) இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கூறினார்.

போராட்டத்தில் ஈடுபட்ட குறித்த பெண் தான் அனுப்பிய கடிதங்கள், தனக்கு கிடைத்த கடிதங்களை ஆடையில் தொங்க



விட்ட நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

# எங்கள் பிள்ளைகளுக்கு இறப்பு சான்றிதழ் தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?

யூலை 31, 2024

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று புதன்கிழமை (31) காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்தம் நிறைவடைந்த நாள்முதல் தமது உறவுகளுக்கான நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த 2017 மார்ச் எட்டாம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு இறப்பு சான்றிதழ் தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்? OMP ஒரு கண்துடைப்பு நாடகம், சர்வதேச விசாரணையே தேவை, இழப்பீடுகள் வேண்டாம், எமக்கு பிள்ளைகள் வேண்டும் போன்ற பல கோசங்களையும், பதாகைகளையும் ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.














# ரொரான்ரோ பெரும்பாகத்தில் சுமார் நூறு மில்லி மீற்றருக்கு மேல் மழை!

யூலை 16, 2024

ஒன்ராரியோ ரொரான்ரோ நகரில் பாரியளவில் மழை வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் கூடுதல் அளவிலான பாதிப்பு பதிவாகியுள்ளது.

டோன்வெலி போன்ற பகுதிகளில் பாரியளவில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக சில இடங்களில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மழை வெள்ளத்தினால் நகரின் சில அதிவேக நெடுஞ்சாலைகள் மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் நூறு மில்லி மீற்றருக்கு மேல் மழை பெய்ததாகத் கனடிய சுற்றாடல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ரொறன்ரோவின் 170000 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரையில்



கண்டறியப்படவில்லை.

இதேவேளை, கனடாவின் அநேக பகுதிகளில் கடுமையான வெப்பநிலை நிலவும் என எதிர்வுகூறப்பட்டிருந்த நிலையில் ரொரான்ரோவில் இவ்வாறு மழை வெள்ளம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் பணவீக்க வீதத்தில் சாதக மாற்றம் பதிவாகியுள்ளது!

யூலை 16, 2024

கனடாவில் பணவீக்க வீதத்தில் சாதக மாற்றம் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் வருடாந்த பணவீக்க வீதம் 2.7 வீதமாக பதிவாகியுள்ளது.

ஓராண்டு காலத்திற்கான ஒப்பீட்டின் அடிப்படையில் பணவீக்கத்தில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என எரிபொருட்களின் விலைகள், நீடித்து நிலைக்கக்கூடிய பொருட்களுக்கான விலைகள் போன்றவற்றின் மாற்றத்தினால் பணவீக்க வீதம் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஜூன் மாதத்தில் மளிகை பொருட்களுக்கான விலைகள் 2.1 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

ஓராண்டு கால ஒப்பீட்டின் அடிப்படையில் இந்த அதிகரிப்பு குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் மே மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது ஜூன் மாதத்தில் மளிகை பொருட்களின் விலை 1.5 வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த மே மாதம் ஆண்டு பணவீக்க வீதம் 2.9 வீதமாக




காணப்பட்டதுடன் கடந்த ஜூன் மாதம் இது 2.7 வீதமாக குறைவடைந்துள்ளது.

# முதியோர் வாழும் செயற்திறன் மையங்களை சமூகங்கள் பயன்பெறும் வகையில் ஒன்ராரியோ விரிவாக்குகிறது!

### பாராளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம்

யூலை 18, 2024

ஒன்ராரியோ அரசாங்கம், உடல்நலம், உடற்பயிற்சி, சமூக ஒருங்கிணைப்பு போன்ற அமைப்புகளை மேம்படுத்தி சேவைகளை வழங்குவதன் மூலம் முதியோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முதியோர் வாழும் செயற்திறன் மையங்களை (SALCs) விரிவுபடுத்துகிறது. இது தொடர்பாக அமைச்சர் விஜய் தணிகாசலம் கருத்துத் தெரிவிக்கும்போது, "முதியோர் வாழும் செயற்திறன் மையங்களை (SALC) விரிவுபடுத்துவதன் மூலம், பெருமளவு முதியவர்கள், சுறுசுறுப்பானதும் சுதந்திரமானதுமான வாழ்க்கையை வாழத் தேவையான வசதிகளை நாங்கள் ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளோம்" என்றார். மாநிலம் முழுவதும் முந்நூறுக்கும் அதிகமான முதியோர் வாழும் செயற்திறன் மையங்கள் (SALC) வெற்றிகரமான நிலையில் இயங்கிவரும் வேளையில், இம்முக்கிய திட்டங்களை இணைந்து வழங்க உள்ளூர் நிறுவனங்களையும் அரசாங்கம் அழைக்கிறது.

எமது சமூகத்தில் முதியோருக்காக மல்வேர்ன் குடும்பநல வளமையத்துக்கு (MFRC) எமது அரசாங்கம் நிதியளித்ததையிட்டு நான் பெருமை கொள்வதுடன், மேலும் இந்த ஆண்டு 1321 நீல்சன் வீதியிலுள்ள நிலையத்துக்கு 51,133 டொலர்களையும், 90 லிட்டில்ஸ் வீதியிலுள்ள நிலையத்துக்கு 51,099 டொலர்களையும் மேலதிகமாக நாம் ஒதுக்கியுள்ளோம். இதேவேளையில் இந்நாட்டைக் கட்டியெழுப்ப உதவிய ஸ்காபரோவில் உள்ள பல முதியவர்களுக்கு நான் எப்போதும் உறுதுணையாக இருப்பேன்.

மேலும் விபரங்களை அறிய, பின்வரும் இணையப் பக்கத்தை அணுகவும்: https://vijaythanigasalam.ca/salcinfo/

# சிறுவர் நலன்புரி கொடுப்பனவுத் தொகை அதிகரிப்பு!

யூலை 21, 2024

கனடாவில் சிறுவர் நலன்புரி கொடுப்பனவு தொகை அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை வழங்கப்பட உள்ள சிறுவர் நலன்புரி கொடுப்பனவுத் தொகை உறுதி அளிக்கப்பட்டதனை விடவும் அதிக தொகை என தெரிவிக்கப்படுகிறது.

ஆறு வயதுக்கு குறைந்த ஒரு பிள்ளைக்கு 7437 டாலர்கள் வழங்கப்பட்டதுடன் ஆறு முதல் 17 வயது வரையிலான பிள்ளைக்கு 6275 டாலர்கள் வழங்கப்பட்டது.

2024 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கான கொடுப்பனவு தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சிறுவர் நலன்புரித் திட்டத்தின் ஊடாக குடும்பங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கான மாதாந்த கொடுப்பனவு தொகை 648.9 டொலர்கள் எனவும், ஆறு முதல் 17 வயது வரையிலான சிறுவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுத் தொகை 547.5 டாலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் சுமார் 350 டாலர்கள் கூடுதலாக பெற்றோர் பெற்றுக் கொள்வர் என தெரிவிக்கப்படுகிறது. அதாவது கொடுப்பனவு தொகையில் 4.7 வீத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

பண வீக்கத்தை கருத்தில் கொண்டு இந்த நலன்புரி கொடுப்பனவு தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக கனடிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.




குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தை பெற்றுக் கொள்ளும் குடும்பத்தினர் பிள்ளைகளை வளர்ப்பதில் எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை கருத்தில் கொண்டு கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் இந்த கொடுப்பனவுத் தொகை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் வாடகைக் குடியிருப்பாளர்களை காக்கும் புதிய சட்டம்!

யூலை 22, 2024

ரொறன்ரோவில் வாடகை குடியிருப்பாளர்களை பாதுகாக்கும் நோக்கில் புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது.

வாடகை குடியிருப்பாளர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப் படும் சில அநீதியான விடயங்களை கருத்தில் கொண்டு இந்த புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது.

ரொரான்ரோ நகர பேரவையினால் இந்த புதிய சட்டம் குறித்து யோசனை முன்மொழிப்பட உள்ளது.
குறிப்பாக ரொரான்ரோவில் வாடகைக்கு குடியிருப்போரை, வீட்டு உரிமையாளர்கள் திடீரென வீட்டை விட்டு வெளியேற்றுவதனை தடுக்க புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது.

வீடுகளை பழுது பார்ப்பதாக அல்லது புதுப்பிப்பதாக கூறி வாடகை வீட்டில் குடியிருப்போர் வெளியேற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் தொகைக்கு வீட்டை வாடகைக்கு விடும் நோக்கின் இவ்வாறு வாடகை குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வீடுகள் புனரமைக்கப்பட உள்ளதாக கூறி ஒப்பந்த காலத்திற்கு முன்னதாகவே வீட்டு உரிமையாளர்களினால் வாடகை குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினால் வாடகை குடியிருப்பாளர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை தடுக்கும் வகையில் புதிய சட்ட



வரைவு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# வரலாற்றில் மிக இருண்ட யுகம் கறுப்பு யூலை குறித்து சிறீலங்கா அரசை சாடும் பிரதமர் ஜஸ்டின் ரூடோ!

யூலை 23, 2024

பாதிக்கப்படக்கூடிய சமூகங்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என கனடா தொடர்ந்தும் கோருவதாகக் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ தெரிவித்துள்ளார்.




இலங்கையில் தமிழர்கள் மீது சிங்கள் கடையர்களின் கட்டவிழ்த்து விடப்பட்ட கறுப்பு யூலையின் 41வது ஆண்டை நினைவுகூரும் வகையில் பிரதமர் ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கையில்,

41 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் தமிழ் பொது மக்களின் வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து தாக்குதல்கள் ஆரம்பமாகின. ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டதுடன், பல தமிழர்கள் காயமடைந்தனர்.

பலர் நாட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். கறுப்பு யூலை எனப்படும் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம், பதற்றங்களை அதிகரித்தது. அது பின்னர் பல தசாப்தகால ஆயத மோதலாகப் பரிணமித்தது.

இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக அது விளங்குகின்றது. இதனடிப்படையில் மே 18ஆம் திகதியைத் தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினமாக அங்கீகரிக்கும் தீர்மானத்தைக் கனடாவின் நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியது

இது அர்த்தமற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும்


Canada | Prime Minister of Canada Justin Trudeau — News · About · The Ministry · Connect · Photos

Statement by the Prime Minister to mark 41 years since Black July

July 23, 2024
Ottawa, Ontario

The Prime Minister, Justin Trudeau, today issued the following statement to mark 41 years since Black July:

"Forty-one years ago today, violent attacks targeting Tamil civilians and businesses started in Colombo, Sri Lanka. Thousands of innocent lives were lost, and many more Tamils were injured, subjected to sexual violence, and forced to flee the country. The anti-Tamil pogrom, known as Black July, escalated tensions in what became a decades-long armed conflict. It remains one of the darkest chapters in Sri Lanka's history.

"In 2022, the Parliament of Canada unanimously adopted a motion to make May 18 Tamil Genocide Remembrance Day – a recognition of Canada's commitment to stand in solidarity with Tamil-Canadians and Tamil communities around the world in remembering and honouring the victims and survivors of these senseless acts of violence. As a steadfast defender of human rights, the Government of Canada will continue to demand accountability for human rights violations and abuses against vulnerable communities in Sri Lanka.

"In the aftermath of Black July, Canada established a Special Measures program to help 1,800 Tamils relocate to safety in Canada and build new lives for themselves and their families. Canada now has one of the largest Tamil diasporas in the world, and we celebrate the contributions Tamil-Canadians make to our country every single day – and we will always protect them.

"On this day, I join Canadians in expressing my deepest condolences to all who have suffered and lost loved ones during Black July. Together, let us honour the victims of this tragedy and recommit to building a more inclusive and peaceful future, free of hate and violence, for people everywhere."

தப்பிப்பிழைத்தவர்களை நினைவுகூர்வதில் கனடாவின் அர்ப்பணிப்பை வெளிக்காட்டுவதாகவும் பிரதமர் ஜஸ்டின் ரூடோ தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஒன்ராரியோ மாநிலம் கறுப்பு யூலையின் 41 ஆம் ஆண்டை நினைவுகூர்கிறது!

## ஒன்ராரியோ மாகாண அமைச்சர் விஜய் தணிகாலசம்

யூலை 23, 2024

தமிழின அழிப்பின் ஒரு கட்டமாக 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போது 3000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டு, ஆயிரக்கணக்கான தமிழர்களின் வணிகங்கள், வீடுகள் அழித்தொழிக்கப்பட்டதன் 41ஆவது ஆண்டு நினைவு இவ்வாரமாகும்.

அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் இதுபற்றி நினைவு கூரும்போது, "கொடூரமான இவ்வினப்படுகொலையால், தமிழர்கள் அளப்பரிய துன்பங்களைச் சுமந்து தமது தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்தனர். தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இக்கொடுமைகளை உலகிற்கு எடுத்துரைக்கவும், அவர்களின் பாதிப்புகள் என்றும் மறக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யவும் தமிழ் இன அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 104 நிறைவேற்றப்பட்டது", என தெரிவித்துள்ளார்.

தமிழ் இன அழிப்புக் குறித்து எதிர்காலத் தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உயிரிழந்தவர்களின் நினைவைப் போற்றவும் ஏதுவாக இச்சட்டம் அமைந்துள்ளது என்பது



# அல்பேட்டா ஜாஸ்பர் தேசிய பூங்காவில் காட்டுத்தீ பரவியது!

யூலை 25, 2024

ஜாஸ்பர் தேசிய பூங்காவில் உள்ள எண்ணெய்க் குழாயில் காட்டுத் தீ பரவியதால், அதை பாதுகாக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் ஏற்கனவே அப்பகுதியில் இருந்து 25,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

புதன்கிழமையன்று கனடாவின் ஜாஸ்பர் நகரத்தை காட்டுத்தீ அடைந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பூங்கா குறிப்பிடத்தக்க இழப்பை அறிவித்தது, ஆனால் சேதத்தின் அளவை இன்னும் கணக்கிட முடியவில்லை.

டிரான்ஸ் மவுண்டன் பைப்லைன் எட்மண்டனில் இருந்து வான்கூவர் வரை ஜாஸ்பர் தேசிய பூங்கா வழியாக செல்கிறது.

இது கனடிய ராக்கீஸில் மிகப்பெரியது. 1984 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக, இந்த பூங்கா ஆண்டுக்கு இரண்டு மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்க்கிறது.

கிடைக்கும் அனைத்து தேவையான வளங்களையும் திரட்டி வருகின்றனர் பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

நாங்கள் கனேடிய ஆயுதப்படை வளங்கள், வெளியேற்ற ஆதரவு மற்றும் அவசர காட்டுத்தீ ஆதாரங்களை உடனடியாக மாகாணத்திற்கு அனுப்புகிறோம். நாங்கள் தீயணைப்பு மற்றும் விமான உதவியை ஒருங்கிணைத்து வருகிறோம். ஆல்பேர்ட்டா, நாங்கள் உங்களுடன் இருக்கிறோம் என்று அவர் கூறினார்.

அண்மைய காலமாக அமெரிக்கா மற்றும் கனடாவில் காட்டுத் தீ ஏற்படுவது வழமையாக உள்ளது . 2023 இல் பதிவு செய்யப்பட்ட காட்டுத் தீ காரணமாக கனடா முழுவதும் 235,000 க்கும் அதிகமான மக்கள்



வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் மரங்களினால் மக்களுக்கு பாதிப்பு; ஆய்வின் முடிவு!

யூலை 29, 2024

கனடாவில் மரங்கள் வளர்க்கப்படுவதனால் மக்கள் நோய் வாய்ப்படும் சாத்தியம் அதிகம் என ஆய்வு தகவல் ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

கனடியர்களில் 25 வீதமானவர்களுக்கு ஏற்படக்கூடிய பருவ கால ஒவ்வாமைக்கு மரங்களின் பால்நிலை ஓர் ஏதுவாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

ஆண் மரங்கள் பழங்கள் மற்றும் பூக்களை தருவதில்லை என்ற காரணத்தினால் நகரங்களில் அதிக அளவு ஆண் மரங்களை வளர்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

செயற்கையான முறையில் இந்த ஆண்கள் மரங்கள் உருவாக்கப்படுகின்றன.

எவ்வாறெனினும், ஆண் மரங்கள் அதிக அளவு மகரந்த துகள்களை உற்பத்தியை செய்வதாகவும் இது சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மொன்றியல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இது தொடர்பில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

சில மரங்களின் மகரந்த துகள் பரவுகை அடிப்படையில் மக்களுக்கு அது ஒவ்வாமைகளை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# ரொரான்ரோவில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் காவல் துறை எச்சரிக்கை!

யூலை 30, 2024

ரொரான்ரோவில் இடம்பெற்று வரும் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் ரொரான்ரோப் பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களை திசை திருப்பி திட்டமிட்ட அடிப்படையில் களவாடப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான இரண்டு திருட்டுச் சம்பவங்கள் சிசிடிவி காணொளி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

உதவிகள் செய்வது போன்று அருகில் வந்து கவனத்தை திசை திருப்பி பணப்பைகள் போன்றன திருடப்படுவதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

உதவுவதற்கு சென்றவர்கள் இவ்வாறு திருட்டுச் சம்பவங்களில் பாதிக்க நேரிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.



# கனடாவின் இடைத்தேர்தல்கள் தொடர்பில் கனடிய புலனாய்வுத்துறையின் விசேட கண்காணிப்பு!

யூலை 30, 2024

கனடாவில் எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய அனைத்து வகையான இடைத்தேர்தல்கள் தொடர்பிலும் விசேட கண்காணிப்பு




மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய புலனாய்வு படையணி இந்த தேர்தல்களை கண்காணிக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கம் இது தொடர்பில் அறிவித்துள்ளது.

தேர்தல்களில் வெளிநாட்டு தலையீடு மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொது தேர்தல்கள் மட்டுமின்றி இவ்வாறான இடைத் தேர்தல்களின் போதும் வெளிநாட்டு தலையீடுகளை குறித்து கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லீபிலென்க் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் மனிடோபா மற்றும் கியூபெக் ஆகிய தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த இடைத்தேர்தல்களின் போதும் தீவிர கண்காணிப்பு




மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் இறுதியாக நடைபெற்ற இரண்டு பொது தேர்தல்களின் போது வெளிநாட்டு தலையீடு மேற்கொள்ளப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்ராரியோ – ரொரான்ரோவில் வாகன தரிப்பு வீதி மீறல் அபராதம் அதிகரிப்பு!

யூலை 30, 2024

ஒன்ராரியோ – ரொரான்ரோ நகரில் வாகன தரிப்பு விதி மீறல் அபராதங்கள் அதிகரிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த அபராத தொகை அதிகரிப்பு நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



சட்டவிரோதமாக வாகனங்களை தரித்து வைத்திருத்தல், வாகனங்களை தேவை இன்றி நிறுத்தி வைத்திருத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்ற செயல்களுக்கான அபராத தொகை அதிகரிக்கப்படும் என ரொரான்ரோ நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு வாகன தரிப்பு தொடர்பிலான அபராத தொகை அதிகரிப்பு ஊடாக போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நடத்தல், சைக்கிள் ஓட்டுதல் மற்றும் பொது போக்குவரத்தை பயன்படுத்ததல் போன்றவற்றை ஊக்குவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதிக வாகன நெரிசல் காணப்படும் பகுதிகளில் வாகனங்களை தரித்து நிறுத்த வேண்டாம் என கோரப்பட்டுள்ளது.

வாகன தரிப்பு கட்டணம் செலுத்தாது வாகனத்தை நிறுத்துவோருக்கான அபராத தொகை 30 டாலர்களில் இருந்து 50 டாலர்களாக உயர்த்தப்பட உள்ளது.

வாகன தரப்பிற்கு தடை செய்யப்பட்ட சைக்கிள் பாதைகளில் வாகனங்களை தடுத்து நிறுத்துவதற்கான அபராத தொகை 60 டாலர்களில் இருந்து 200 டாலர்களாக அதிகரிக்கப்பட உள்ளது.

வாகன தரிப்பு தொடர்பான குற்றச்செயல்களுக்கான அபராத தொகையை அதிகரிக்கும் யோசனைக்கு கடந்த ஏப்ரல் மாதம் ரொரான்ரோ நகரப் பேரவை அனுமதி வழங்கியிருந்தது.



இதன் அடிப்படையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் வாகன தரிப்பு குற்றச் செயல்களுக்கான அபராத தொகை அதிகரிக்கப்பட உள்ளது.

இதேவேளை வாகன தரிப்பு குற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் குறுஞ்செய்திகள் அனுப்பப்படாது எனவும் இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் குறுஞ்செய்திகள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

**www.sangathamil.ca**

# தமிழக செய்திகள்



## தமிழ் சமுதாயத்தை ஒன்றுபடுத்த நீதிநாயகம் சந்துரு அளித்தப் பரிந்துரைகளை எதிர்ப்பவர்கள் சாதி வல்லாதிக்க வன்ம நோக்குடையவர்களே!

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

யூலை 20, 2024

பள்ளி - கல்லூரி மாணவர்களிடையே சாதி, இன உணர்வு காரணமாக உருவாகும் வன்முறைகளைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் ஏற்படுத்தவும், உரிய வழிமுறைகளை வகுக்க நீதிநாயகம் சந்துரு அவர்கள் தலைமையில், ஒரு நபர் குழுவினைத் தமிழக அரசு நியமித்து அவரும் தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து, பள்ளி - கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள், தனிநபர்கள் உள்படப் பலரிடமிருந்து கருத்துகளைத் திரட்டி சிறந்தப் பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளார்.

இந்த அறிக்கையின் தொடக்கத்திலேயே “பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்” என்ற திருக்குறளின் வாசகத்தை முன்வைத்துதான் தனது பரிந்துரைகளை நீதிநாயகம் சந்துரு அளித்துள்ளார். அந்த அறிக்கையைப் படித்துப் பார்க்காமலேயே சாதி ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்தும் வர்ணாசிரம தர்மத்தைக் காப்பாற்றும் நோக்கத்துடனும், சாதி, ஆணவ அரசியல் வன்மத்துடனும் செயல்படும் பா.ச.க.வின் மாநிலத் தலைவர் அண்ணாமலை அவர்கள், நீதிநாயகம் சந்துருவின் அறிக்கையை கண்டித்திருப்பதில் வியப்படைவதற்கு எதுவும் இல்லை.

சாதி வல்லாதிக்கத்தை நிலைநிறுத்துவதையே நோக்கமாகக் கொண்டவர்களைத் தவிர, சமுதாய நல்லிணக்கம் நிலைநிறுத்தப்பட சாதி வேறுபாடுகளை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று கருதுபவர்கள் அனைவரும் இந்தப் பரிந்துரைகளை வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. வள்ளுவர் முதல் வள்ளலார் வரை தமிழ்ச் சான்றோர் பலர் சமுதாயத்தைச் சீரழிக்கும் சாதி வேறுபாடுகளை அகற்றும் வகையில் கூறிய உயரிய கருத்துகளின் அடிப்படையில் நீதிநாயகம் சந்துரு அவர்களின் பரிந்துரைகள் அமைந்துள்ளன.

1. பல நூற்றாண்டு காலமாக சாதி வேறுபாடுகளுடனும்,



சச்சரவுகளுடனும் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழர் சமுதாயத்தை ஒன்றுபடுத்தி முன்னேற்றப் பாதையில் செலுத்துவதற்கான சிறந்தப் பரிந்துரைகளை வழங்கியுள்ள நீதிநாயகம் சந்துரு அவர்களை உலகத் தமிழர்கள் சார்பில் மனமாற பாராட்டுகிறேன்.

## பொற்பனைக்கேட்டை அகழாய்வில் செம்பு ஆணிகள் கண்டெடுப்பு!

யூலை 21, 2024

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் நடைபெற்றுவரும் 2-ம் கட்ட அகழாய்வில் செம்பு ஆணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் தமிழக அரசின் சார்பில் முதல் கட்ட அகழாய்வு நடைபெற்றது. அதில், தங்க மூக்குத்திகள், கருப்பு சிவப்பு பானை ஓடுகள், பாசி மணிகள் உள்ளிட்ட ஏராளமான தொல்பொருட்கள் கிடைக்கப்பெற்றன. அதன் பிறகு அரண்மனை மேடுபகுதியின் தெற்கில் 2-ம் கட்ட அகழாய்வு யூன் 18-ம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இதை சென்னையில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து 6 இடங்களில் குழிகள் தோண்டப்பட்டு 2-ம் கட்ட அகழாய்வு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் அகழாய்வு இயக்குநர் தங்கதுரை தலைமையிலானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஒரு குழியில் 280செ.மீ நீளமும், 218 செ.மீ அகலமும்கொண்ட செங்கல் தளம் காணப்பட்டது. மேலும், சுமார் 2 செ.மீ நீளமுள்ள 5 செம்பு ஆணிகள், செம்புஅஞ்சன கோல (மைதீட்டும் குச்சி), கண்ணாடி வளையல்கள், கண்ணாடி மணிகள் கிடைத்துள்ளன.

இதுவரை இரும்பு ஆணிகளே கிடைத்து வந்த நிலையில், தற்போது செம்பு ஆணிகள் கிடைத்திருப்பது வரலாற்று ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## விடுதலைப் புலிகள் அமைப்பு தடையை நீக்க வைகோ மனு!

யூலை 24, 2024

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சட்ட விரோத அமைப்பாக அறிவித்து அந்த அமைப்புக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டித்து மத்திய அரசு கடந்த மே 14 அன்று அரசாணை பிறப்பித்துள்ளது.

இதற்காக அமைக்கப்பட்ட டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி மன்மீத் ப்ரீத்தம் சிங் அரோரா தலைமையிலான தீர்ப்பாயம் தடை செய்வது குறித்து யூலை 23-ம் தேதிக்குள் விளக்கமளிக்க உத்தரவிட்டிருந்தது. அதன்படி இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தடையை நீக்க வேண்டும். இதுதொடர்பாக மத்திய அரசு பிறப்பித்துள்ள உத்தரவை ரத்து செய்ய கோரி மதிமுக பொதுச் செயலாளரான வைகோ தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணை ஆக.7-க்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.



## பொற்பனைக்கோட்டை அகழாய்வில் சூது பவளமணி கண்டெடுப்பு!

யுலை 25, 2024

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் 2-ம் கட்ட அகழாய்வில் சூது பவள மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து அகழாய்வு பணி இயக்குநர் தங்கதுரை கூறியது:

2-ம் கட்ட அகழாய்வில் 2 சூதுபவள மணிகளில் ஒன்று முழுமைபெற்ற நிலையிலும், மற்றொன்று முழுமை அடையாத நிலையிலும் கிடைத்துள்ளன. மற்றொரு குழியில் அக்கேட் வகை மணி ஒன்றும்கிடைத்துள்ளது. இது துளையிடதொடங்கி முழுமை அடையாமல் பாதியில் நிறுத்தப்பட்டு காணப்படுகிறது. இது, பொற்பனைக் கோட்டையில் மணிகள் செய்வதற்கான தொழிற்கூடம் இருந்ததற்கான சான்றாக விளங்குகிறது. சூது பவள மணி கிடைத்திருப்பது உள்நாட்டு வணிகத்தை குறிப்பதாக உள்ளது என்றார்.



## யாழ். சிறையில் 74 தமிழக கடற்தொழிலாளர்கள்!

யூலை 26, 2024

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 74 தமிழக கடற்தொழிலாளர்கள் நீதிமன்ற உத்தரவில், யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு கால கட்டங்களில் கைதாகி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் இவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 64பேரின் வழக்குகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கடந்த யூலை 1ஆம் திகதி 25 கடற்தொழிலாளர்களும், யூலை 16ஆம் திகதி 04 கடற்தொழிலாளர்களும், யூலை 11ஆம் திகதி 13 கடற்தொழிலாளர்களும், யூலை 22ஆம் திகதி 22 கடற் தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதாகியுள்ள 64 கடற்தொழிலாளர்களின் வழக்கு விசாரணைகளே செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.



# மின் கட்டண உயர்வால் தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன!

## பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ்

யூலை 27, 2024

கோவை விமான நிலையத்தில் பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். தமிழகத்தில் மின் கட்டண உயர்வால் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளது. கொரோனாவிற்கு பிறகு பல நிறுவனங்கள் மூடிய பிறகும், தமிழக அரசு கடந்த 23 மாதங்களில் 3 முறை மின் கட்டண உயர்வை உயர்த்தியுள்ளது.

23 மாதங்களில் கிட்டத்தட்ட 34 விழுக்காடு மின்கட்டணத்தை தி.மு.க அரசு உயர்த்தி உள்ளது.இதனால் தொழில்கள் கடுமையாக பாதிப்படைந்துள்ளன. குறிப்பாக சிறு, குறு தொழில்கள் கடுமையான பாதிப்பை சந்தித்துள்ளன. மின்கட்டண உயர்வால் கடந்த 5 ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே மின் கட்டண உயர்வை திரும்ப பெற வேண்டும்.

மின் கட்டணத்தை குறைக்க வேண்டும். தி.மு.க. கடந்த சட்டமன்ற தேர்தலின் போது, ஆட்சிக்கு வந்ததும் மாதம், மாதம் மின் கணக்கீடு செய்யப்படும் என அறிவித்தது. எனவே தாங்கள் தேர்தல் அறிக்கையில் கூறியது போன்று மாதம், மாதம் மின் கட்டணம் கணக்கீடு பணியை மேற்கொள்ள வேண்டும். கோவையில் கனிமவள கொள்ளை மிகப்பெரிய அளவில் நடைபெற்று வருகிறது. பாமக சார்பில் எத்தனையோ போராட்டங்கள் நடத்தப்பட்டது.

நீதிமன்ற தீர்ப்பு காரணமாக ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அரசு இதில் மெத்தனம் காட்டி வருகிறது. இதிலிருந்து தான் பலருக்கும் வருமானம் செல்கிறது. மின் கட்டண உயர்வுக்கு காரணம் மின்சாரத் துறையில் சரியான நிர்வாகம் இல்லாததும், ஊழலும் தான் காரணம். கோவை மாநகரில் 80 விழுக்காடு சாலைகள் பழுதடைந்துள்ளது. கோவை மேயர் ஏன் பதவி விலகினார் என விசாரணை நடத்த வேண்டும். வெள்ளலூர் குப்பை கிடங்கில் ஏற்பட்ட தீயை அணைக்க பல லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சனைகளில் உரிய விசாரணை செய்து தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் கஞ்சா கிடைக்கிறது. மதுவை கொடுத்து 3 தலைமுறை நாசப்படுத்தியது போல கஞ்சாவை கொடுத்து இந்த தலைமுறையை நாசப்படுத்தி வருகின்றனர். தமிழக அரசு ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும். இதற்கான அனைத்து அதிகாரமும் தமிழக அரசுக்கு இருக்கிறது. பீஹார், ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, ஒரிசா, ஜார்கண்ட் மாநிலங்களில் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இவ்வளவு மாநில முதல்வர்களுக்கும் அதிகாரம் இருக்கும்போது தமிழக முதல்வருக்கு இல்லை என சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் காரணமாக இந்த விவகாரத்தில் முதல்வர் தயங்குகிறார்.

இதுவரை நடந்த ஒவ்வொரு பட்ஜெட்டிலும் எல்லா மாநிலத்தின் பெயரை கூறியுள்ளனரா? காங்கிரஸ் எல்லா மாநிலத்தின் பெயரையும் பட்ஜெட்டில் சொல்லியுள்ளதா. திட்டங்கள் வரும். தமிழ்நாட்டிற்கு கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பட்ஜெட்டில்



கூடுதல் திட்டங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அவை என்னென்னவென்று தெரியவரும். பெயர் சொல்லவில்லை என புறக்கணிக்கிறார்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழகத்தின் உரிமைகளை எந்த விதத்திலும் விட்டுக் கொடுக்க முடியாது. கோயம்புத்தூர் மெட்ரோவிற்கு நிதியை சண்டை போட்டு கட்டாயம் வாங்குவோம். நீட் தேர்வு இருக்கக்கூடாது அது தேவையில்லாத தேர்வு என்பதுதான் எங்களின் நிலைப்பாடு. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஏற்ப அதன் கொள்கைகளை விட்டு விட வேண்டும். நீட் தேர்வு என்பது கிராமப்புற மாணவர்களுக்கு எதிரானது, சமூக நீதி மற்றும் ஏழை மாணவர்களுக்கு எதிரானது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் அவலம்: அப்பட்டமான மனித உரிமை மீறல்!

## அமமுக பொது செயலாளர் டிடிவி தினகரன்

யூலை 27, 2024

அமமுக பொது செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பாதாளச் சாக்கடைகளில் ஏற்பட்ட அடைப்புகளை, எந்தவித பாதுகாப்பு உபகரணங்களுமின்றி தொழிலாளர்கள் சுத்தம் செய்வது போல வெளியாகியிருக்கும் வீடியோ காட்சிகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

நாட்டு மக்கள் அனைவரும் நவீன விஞ்ஞான உலகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்திலும் மனிதக் கழிவுகளையும், பாதாள சாக்கடைகளையும் மனிதர்களே இறங்கி சுத்தம் செய்யும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் மட்டும் தொடர்ந்து கொண்டே இருப்பது வேதனையளிக்கிறது.

இந்திய அளவில் மனிதக் கழிவுகளை சுத்தம் செய்யும் தொழிலாளர்களின் மரணத்தில் தமிழகம் முதலிடம் வகித்து வரும் அவல நிலையிலும், அதனை தடுக்கவோ, மாற்றுவழிகளை கண்டறியவோ எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத திமுக அரசின் அலட்சியப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது. மாநில அரசின் மூலம் கொண்டுவரப்பட்ட மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் தடைச் சட்டம் முறையாக பின்பற்றப்படவில்லை என்பதையும், அதனை அமல்படுத்த அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவும் வெறும் காகித அளவில் மட்டுமே இருப்பதையும் அடிக்கடி நடைபெறும் இதுபோன்ற அவலச் சம்பவங்கள் வெளிச்சம் போட்டு காட்டுகின்றன.

எனவே, இனியாவது மனிதக் கழிவுகளை மனிதர்களே சுத்தம் செய்வதற்கு விதிக்கப்பட்ட தடைச்சட்டத்தை தீவிரப்படுத்துவதோடு, அப்பாவி தொழிலாளர்களை இதுபோன்ற செயல்



களில் ஈடுபடுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசை வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார்.

# தமிழ்நாடு தொல்லியல்துறை பணிக்கு சமஸ்கிருதம் ஏன் தெரிந்திருக்க வேண்டும்? இது தான் திராவிட மாடலா?

## நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான்

யூலை 27, 2024

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள தொல்லியல்துறை தொழில்நுட்பப் பணியாளர் தேர்வுக்கான புதிய அறிவிக்கையில் 'சமஸ்கிருதம்' தெரிந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. சமஸ்கிருதம் தெரிந்திருப்பதுதான் தமிழ்நாட்டின் தொல்லியலை அறிய ஒரே தகுதியா? தமிழ்நாடு தொல்லியல் துறைக்கும் சமஸ்கிருதத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? தமிழ்நாட்டின் தொல்லியலை அறிய தமிழில் புலமை பெற்றிருக்க வேண்டுமா அல்லது சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டுமா? தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இத்தகைய அறிவிக்கை யாருடைய உத்தரவின் பேரில் வெளியிடப்பட்டுள்ளது? மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் ஐயா ஸ்டாலின் அவர்களின் ஒப்புதலின் பேரில்தான் இத்தகைய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதா? அப்படியென்றால் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கூறியதுபோல் உண்மையிலேயே ராமரின் ஆட்சியின் நீட்சிதான் தற்போது நடைபெறும் திமுக ஆட்சியா? திராவிட மாடல் என்பது உண்மையிலேயே சமூகநீதியா? அல்லது மனுநீதியா?

அதுமட்டுமின்றி தொல்லியல் பணிக்கு திராவிட மொழி தெரிந்திருக்க வேண்டுமென்று தேர்வாணையம் அறிவித்துள்ளது. அப்படி ஒரு மொழி இருக்கிறதா? தமிழ்மொழி என்று குறிப்பிடுவதில் தமிழ்நாடு அரசிற்கு என்ன தயக்கம்? என்ன தடை? திராவிட மொழி என்றால் அது எந்த மொழி என்பதை திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் முதலில் விளக்க வேண்டும். தமிழ்நாட்டில் திமுக 6 முறை ஆட்சிக்கு வந்து, 54 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதுதான் தமிழ்நாட்டின் 'தமிழ்த்தெருக்களில் தமிழ் இல்லையென்று யாரும் கூறக்கூடாது' என்று ஒரு வெற்று அறிவிப்பை முதல்வர் வெளியிட்டுள்ளார்கள். தமிழ்த்




தெருக்களில் தமிழ் வரவே இத்தனை ஆண்டுகாலம் ஆகியுள்ளது, அதுவும் இன்னும் முழுமையாக நிறைவேறிய பாடில்லை. அதற்குள் தமிழ்நாடு அரசுப் பணிகளிலிருந்து அன்னைத்தமிழை அகற்ற திமுக அரசு முனைவது பெருங்கொடுமையாகும். இதுதான் திமுக அரசு தமிழை வளர்க்கும் முறையா? "எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!", 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்!" என்பதெல்லாம் தமிழர்களை ஏமாற்றும் வெற்று முழக்கங்கள் என்பது இதன்மூலம் மீண்டும் ஒருமுறை நிறுவப்பட்டுள்ளது.

ஆகவே, தமிழ்நாடு தொல்லியல்துறை பணிக்கு சமஸ்கிருதம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்ற அறிவிக்கையை உடனடியாகத் திரும்பப்பெற்று, தமிழில் புலமை பெற்றிருக்க வேண்டுமென்ற அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

# உலக செய்திகள்

## யூரோ கோப்பை கால்பந்து சாம்பியன் பட்டத்தை நான்காவது முறையாக கைப்பற்றிய ஸ்பெயின்!

யூலை 15, 2024

யூரோ கோப்பை கால்பந்து தொடரின் சாம்பியன் பட்டத்தை ஸ்பெயின் அணி நான்காவது முறையாக கைப்பற்றி சாதனை படைத்திருக்கிறது.

ஜெர்மனி தலைநகர் பெர்லினில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஸ்பெயின் அணியும், இங்கிலாந்து அணியும் பலப் பரிட்சை நடத்தியது.



இதில் இங்கிலாந்து அணி தொடர்ந்து இரண்டாவது முறையாக யூரோ கோப்பை இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றிருக்கிறது. அது மட்டுமில்லாமல் கடந்த 58 ஆண்டுகளாக இங்கிலாந்து அணி யுரோ கோப்பை சாம்பியன் பட்டத்தை வெல்லவில்லை.

இதனால் இந்த 58 ஆண்டு கனவை இங்கிலாந்து வீரர்கள் நினைவாக்குவார்கள் என அந்த நாட்டு ரசிகர்கள் எதிர்பார்த்தனர். இதில் விறுவிறுப்பான இந்த போட்டியில் இரண்டு அணிகளுமே ஆக்ரோஷமாக விளையாடினர். ஆட்டத்தின் பத்தாவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் பெல்லிங்காம் தமக்கு கிடைத்த ப்ரீ கிக் வாய்ப்பை வீணடித்தார்.

இதேபோன்று ஆட்டத்தின் 11 வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் தமக்கு கிடைத்த பிரீ கிக் வாய்ப்பையும் வீணடித்தார். இப்படி பரபரப்பாக முதல் பாதி முடிந்தது. இதனை அடுத்து இரண்டாவது பாதி தொடங்கிய உடனே ஆட்டத்தின் 47-வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் நிக்கோ வில்லியம்ஸ் முதல் கோல் அடித்தார்.

இதனால் ஸ்பெயின் ஒன்றுக்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இந்த நிலையில் ஸ்பெயின் எளிதில் வென்றுவிடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் பால்மர் அபாரமாக கோல் அடித்து ஸ்கோரை சமன் செய்தார். இதனால் போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது. கடந்த முறை போல் இம்முறையும் போட்டி சமனில் முடிந்து பெனால்டி சூட் அவுட் முறையில் தான் வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அப்போதுதான் ஆட்டத்தில் ஒரு ட்விஸ்ட் ஏற்பட்டது. சப்ஸ்டியூட் வீரராக களத்திற்கு வந்த ஸ்பெயின் வீரர்களுக்கு போட்டியின் 86வது நிமிடத்தில் கோல் அடித்தார். இதன் மூலம்



ஸ்பெயின் அணி இரண்டுக்கு ஒன்று என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இதனை அடுத்து ஆட்டத்தின் கடைசி நிமிடங்களில் கோல் அடிக்க இங்கிலாந்து வீரர்கள் கடும் முயற்சி செய்தனர்.

ஆனால் ஸ்பெயின் அணி தங்களுடைய உத்திகள் மூலம் அதனை எளிதாக எதிர்கொள்ள போட்டியின் முடிவில் ஸ்பெயின் இரண்டுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது இதன் மூலம் நான்காவது முறையாக யூரோ கோப்பையை ஸ்பெயின் அணி கைப்பற்றி இருக்கிறது. அது மட்டும் இல்லாமல் சர்வதேச அளவில் 2012 ஆம் ஆண்டுக்கு பிறகு ஸ்பெயின் வெல்லும் முதல் சர்வதேச தொடர் இதுவாகும்.

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினராக உமா குமரன் பதவியேற்பு!

யூலை 17, 2024

பிரித்தானிய பொதுத்தேர்தலில் தொழில் கட்சி சார்பில் போட்டியிட்ட உமா குமரன் ஸ்டராட்ஃபோர்ட் தொகுதியில் 19,145 வாக்குகளை பெற்று மாபெரும் வெற்றிப் பெற்றார்.



இந்நிலையில், கிழக்கு பிரித்தானியாவில் புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதியான Stratford மற்றும் Bow இன் முதல் உறுப்பினராக நேற்று (16) பதவியேற்றுக்கொண்டார்.

உறுப்பினராக பதவியேற்றுக்கொண்ட பின் அவர் தனது எக்ஸ் தளத்தில் “இன்று, நான் ஸ்ட்ராட்ஃபோர்ட் மற்றும் போவின் முதல் எம்.பி.யாக பதவியேற்றுள்ளேன். எங்கள் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துவது எனது வாழ்க்கையின் பெருமை ஆகும்.

நான் கிழக்கு பிரிட்டனில் பிறந்தேன், கிழக்கு பிரிட்டன் மக்களுக்காக போராடுவேன். பாராளுமன்றில் நான் எப்போதும் உங்கள் குரலாக இருப்பேன்.” என்று பதிவிட்டுள்ளார்.



## ஜெமனின் துறைமுக நகரம் மீது இசுரவேல் தாக்குதல்!

யூலை 20, 2024

ஜெமனின் ஹொடெய்டா நகரின் மீது இசுரவேல் வான்வெளி தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக ஹெளத்தி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜெமனின் செங்கடல் துறைமுக நகரான ஹொடெய்டா மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக ஜெமன் கிளர்ச்சியாளர்களின் அல்மஷிரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பெருமளவு உயிர்த்சேதங்கள் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக அல்மஷிரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை இசுரவேலின் விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக இசுரவேலின் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை இசுரவேல் தலைநகர் மீது ஹெளத்தி கிளர்ச்சியாளர்கள் ஆளில்லா விமானதாக்குதலை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இசுரவேலிய பிரஜைகளிற்கு தீங்கு விளைவித்ததை தொடர்ந்து ஜெமனின் ஹௌத்தி கிளர்ச்சியாளர்களிற்கு செய்தியொன்றை தெரிவிப்பதற்காகவே இந்த தாக்குதல் இடம்பெற்றதாக இசுரவேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ்கலன்ட் தெரிவித்துள்ளார்.

ஹெடெய்டாவில் தற்போது பற்றி எரிந்கொண்டிருக்கும் தீ மத்திய கிழக்கு முழுவதும் தெரிகின்றது அதன் முக்கியத்துவம் தெளிவானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஹௌத்திகள் எங்களிற்கு எதிராக 200 தடவை தாக்குதல்களை மேற்கொண்டார்கள் முதல் தடவை அவர்கள் எங்கள் பொதுமக்களை தாக்கினார்கள் நாங்கள் தாக்கினோம் தேவைப்பட்டால் எந்த இடத்திலும் இதனை செய்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# மைக்ரோசப்ட் நிறுவனத்தின் வின்டோஸ் இயங்குதளம் உலகம் முழுவதும் முடங்கியது!

யூலை 19, 2024




மைக்ரோசப்ட் நிறுவனத்தின் வின்டோஸ் இயங்குதளம் உலகம் முழுவதும் இன்று முடங்கியது. விண்டோசை பயன்படுத்தும் பெரும்பாலான பயனர்களின் கம்ப்யூட்டர் திரையில் புளூ ஸ்கிரீன் ஆப் டெத் (Blue Screen of Death) என்ற எரர் தோன்றியது. அதில், "உங்கள் கணினியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே ரீஸ்டார்ட் செய்ய வேண்டும். நடந்த தவறு தொடர்பான தரவுகளை சேகரித்து வருகிறோம். அதன்பின்னர், ரீஸ்டார்ட் செய்வோம்" என குறிப்பிடப்பட்டிருந்தது.

உலகளாவிய ரீதியாகத் தகவல் தொழில்நுட்பத் துறை முடங்கியதன் விளைவாக, பல நாடுகளில் விமானச் சேவைகள், ஊடகங்கள் மற்றும்வங்கிகள் உள்ளிட்ட பல துறைகள் இடையூறுகளைச் சந்தித்தன.

சைபர் செக்யூரிட்டி நிறுவனமான CrowdStrike ஒரு தீர்வை வெளியிட்டுள்ளதாகக் கூறியது.

விமானச் சேவை கணினி கட்டமைப்பு பாதிக்கப்பட்டதன் காரணமாக, பல நாடுகளின் விமான நிலையங்கள் மூடப்பட்டு பல விமானங்கள் தரையிறக்கப்பட்டுள்ளன.

பிரித்தானியாவின் ஸ்கை தொலைக்காட்சி உட்பட சில ஊடகங்கள் செயலிழந்துள்ளன.

லண்டன் பங்குச் சந்தையும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் தொலைத்தொடர்புகள் துறை பாதிக்கப்



பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமைக்கான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்கப் படவில்லை.

எனினும் நிலைமையைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

# கறுப்பு யூலை கலவரங்களில் உயிரிழந்தோருக்கு சிறீலங்கா தலைநகர் கொழும்பில் நினைவுகூரல்; பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தல்!

யூலை 23, 2024

தமிழர்களுக்கு எதிரான கறுப்பு யூலை கலவரங்கள் அரங்கேறி 41 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இன்னமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை எனவும், தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழமுடியாத அச்சுறுத்தல் நிலை தற்போதும் தொடர்கிறது எனவும் நேற்றைய நாள் சிறீலங்கா தலைநகர் கொழும்பில் நடைபெற்ற நினைவுகூரல் நிகழ்வில் கலந்துகொண்ட சிவில் சமூகப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட 'கறுப்பு யூலை' கலவரங்கள் அரங்கேறி நேற்றுடன் (23) 41 வருடங்கள் கடந்திருக்கின்றன. தமிழர்கள் மத்தியில் மிகமோசமான தாக்கத்தையும், தமிழர் வரலாற்றில் முக்கிய திருப்பங்களையும் ஏற்படுத்திய இக்கலவரங்கள் தொடர்பில் இன்னமும் நீதியோ, பொறுப்புக்கூறலோ உறுதிசெய்யப்படவில்லை.







இந்நிலையில் கறுப்பு யூலை கலவரங்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதுடன், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதி நிலைநாட்டப்படவேண்டும் என வலியுறுத்தி வடக்கு - தெற்கு சகோதரத்துவம் எனும் அமைப்பினால் நேற்று செவ்வாய்கிழமை கொழும்பு, பொரளை கனத்தை பொதுமயானத்துக்கு முன்பாக உள்ள சுற்றுவட்டத்தில் 'மீண்டுமொரு கறுப்பு யூலை வேண்டாம்' எனும் தொனிப்பொருளில் நினைவுகூரல் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த வடக்கு - தெற்கு சகோதரத்துவம் அமைப்பின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் 'தமிழ்மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை மறவோம்', 'இனப்படுகொலைக்கு நீதி வழங்கு' எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இங்கு கருத்து வெளியிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஸ்ரீநாத் பெரேரா, வடக்கில் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டமையை அடுத்து, கொழும்பில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக்கொடூரமான வன்முறைகளை நினைவுகூர்ந்தார். அத்தோடு இந்நாட்டில் மீண்டுமொரு கறுப்பு யூலை கலவரங்கள் ஏற்படக்கூடாது என்பதை முன்னிறுத்தியே இந்த நினைவுகூரல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட அவர், ஆனால் தற்போதும் தமிழர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடரும் நிலையில், அவற்றைக் களைந்து அவர்கள் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு இடமளிக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

அதேபோன்று கறுப்பு யூலை கலவரங்கள் ஆரம்பமான தினத்தில் வெலிக்கடை சிறைச்சாலையில் பெரும் எண்ணிக்கையான தமிழ் கைதிகள் கொல்லப்பட்டமை குறித்து சுட்டிக்காட்டிய அவர், தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி நிலைநாட்டப்பட்டு, பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படவேண்டியது அவசியம் எனத் தெரிவித்தார்.

அதேவேளை அங்கு கருத்துரைத்த அரசியல் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், சிவில் செயற்பாட்டாளருமான அருட்தந்தை சக்திவேல், யாழ் நூலக எரிப்பு, கறுப்பு யூலை கலவரங்கள் உள்ளடங்கலாக தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் குறித்து சுட்டிக்காட்டியதுடன், இன்னமும் இந்நாட்டில் தமிழ்மக்கள் அமைதியாக வாழ்வதற்கான சூழல் உறுதிசெய்யப்படவில்லை என விசனம் வெளியிட்டார். அது மாத்திரமன்றி ஞானசார தேரருக்கும், ஹிருணிகா பிரேமசந்திரவுக்கும் பிணை வழங்கமுடியுமெனில், பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்கமுடியாது? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதனைத்தொடர்ந்து நினைவுகூரலில் கலந்துகொண்டவர்கள்



அச்சுற்றுவட்டத்தில் உள்ள நினைவுக்கல்லில் மெழுகுதிரிகள் மற்றும் விளக்குகளை ஏற்றி, அகவணக்கம் செலுத்தி கறுப்பு யூலை கலவரங்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்ததுடன், பின்னர் அங்கிருந்து அமைதியாகக் கலைந்து சென்றனர்.

www.sangathamil.ca

# கறுப்பு யூலை கலவரம்: நீதிக்கான போராட்டம் தொடரும்!

## பித்தானியா பாராளுமன்ற உறுப்பினர் உமா குமாரன்

யூலை 23, 2024

கறுப்பு யூலை கலவரங்களால் ஏற்பட்ட உளவியல் ரீதியான பாதிப்பு அடுத்தடுத்த தலைமுறைகளாகக் கடத்தப்படுவதாகவும், அவற்றை ஒருபோதும் மறக்கடிக்க முடியாது எனவும் சுட்டிக் காட்டியுள்ள பிரித்தானியா பாராளுமன்ற உறுப்பினர் உமா குமாரன், இவ்விடயத்தில் நீதிக்கான தமது போராட்டம் தொடரும் என உறுதியளித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட 'கறுப்பு யூலை' கலவரங்கள் அரங்கேறி இன்றுடன் (23) 41 வருடங்கள் கடந்திருக்கின்றன. தமிழர்கள் மத்தியில் மிகமோசமான தாக்கத்தையும், தமிழர் வரலாற்றில் முக்கிய திருப்பங்களையும் ஏற்படுத்திய இக்கலவரங்கள் தொடர்பில் இன்னமும் நீதியோ, பொறுப்புக்கூறலோ நிலைநாட்டப் படவில்லை.

இதுகுறித்து அண்மையில் பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான முதலாவது தமிழ்ப்பெண் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்ட உமா குமாரன் அவரது உத்தியோக பூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கின்றார்.

அப்பதிவில் அவர் கறுப்பு யூலை கலவரங்களை அடுத்து தமிழ் மக்கள் உலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்ததாகவும், அவர்கள் இன்னமும் நீதிக்காகக் காத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கிழக்கு லண்டனில் பிறந்த உமா குமாரனின் பெற்றோர் யாழ்ப்பாணத்தைப் பூர்விகமாகக்கொண்டவர்கள் என்ற போதிலும், போரின் விளைவாக பிரிட்டனுக்குப் புலம்பெயரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அதன்படி கறுப்பு யூலை கலவரங்களின்போது இடம்பெற்ற கொடுமைகள் குறித்து தனது பெற்றோர் தனக்குக் கூறியிருப்பதாக எக்ஸ் தளப்பதிவில் தெரிவித்துள்ள உமா குமாரன், அக்கலவரங்களினால் ஏற்பட்ட உளவியல் ரீதியான பாதிப்பு அடுத்தடுத்த தலைமுறைகளாகக் கடத்தப்படுவதாகவும், அவற்றை ஒருபோதும் மறக்கடிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் இன்றைய தினத்தில் கறுப்பு யூலை கலவரங்களில் உயிரிழந்த அனைத்து உயிர்களையும் நினைவுகூருவதாகவும், இவ்விடயத்தில் நீதிக்கான தமது போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உலகப் பரப்பெங்கும் 'கறுப்பு யூலை' 41ஆம் ஆண்டு நினைவேந்தல்! 23.08.2024






























# எத்தியோப்பியா நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500 ஆக அதிகரிக்கலாம்!

யூலை 25, 2024



தெற்கு எத்தியோப்பியாவின் மண்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 257 ஆக அதிகரித்துள்ளது. இதே வேளை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500 ஆக அதிகரிக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பலத்த மழையினால் எத்தியோப்பியாவில் கோஃபா மண்டலத்தின் தொலைதூர மலைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை மற்றும் திங்கட்கிழமை காலை மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

மண்சரிவுகள் ஏற்பட்ட கெஞ்சோ ஷாச்சா கோஸ்டி பகுதியில் சடலங்களையும் உயிர்பிழைத்தவர்களையும் மீட்பதற்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. 24 ஆம் திகதி வரை 257 பேர் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ளது.

எனினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500 ஆக அதிகரிக்கலாம் என மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால் மேலும் மண்சரிவு ஏற்பட ஆபத்து இருப்பதால் ஐந்து வயதுக்குட்பட்ட 1,320 குழந்தைகள் , 5,293 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தை பிரசவித்த தாய்மார்கள் உட்பட 15,000 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

காயங்களுக்குள்ளான 12 பேர் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், குறைந்தது 125 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

காணாமல்போனவர்களின் எண்ணிக்கை இன்னும் கணக்கிடப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியோ குட்டெரெஸ் இந்த பேரழிவு குறித்து தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

# பிரான்சில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பம்: பாதுகாப்பு அதி உச்சம்!

யூலை 26, 2024



இன்று யூலை 26, வெள்ளிக்கிழமை பிரான்சில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின்றன. ஒலிம்பிக்கின் ஆரம்ப நாள் நிகழ்வுகள், ஒலிம்பிக் போட்டிகள் இடம் பெறும் இடங்கள், தலைநகர் பரிஸ் என ஒட்டுமொத்த இல் து பிரான்ஸ் மாகாண மும் மிகுந்த விழிப்புடன் உள்ளது. தலைநகர் உட்பட பிரான்சு முழுவதும் பலத்த பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இன்றைய நாளில் காவல் துறையினர், ஜொந்தாமினர், சிறப்பு அதிரடிப்படையினர், இராணுவத்தினர் உட்பட 45,000 பாது காப்பு பிரிவினர் இன்று கடமையில் ஈடுபட உள்ளனர். அவர்கள் தவிர, மருத்துவக்குழுவினர், நோயாளர் காவு வண்டிகள் என



அனைத்தும் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறும் நாட்களில் 30,000 பாதுகாப்பு பிரிவினர் கடமையில் ஈடுபடுவார்கள்.

அதேபோல் இந்த ஒலிம்பிக் போட்டிகளுக்காக பல்வேறு நாடுகளில் இருந்து சிறப்பு பாதுகாப்பு படையினர் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் நாட்டு சீருடையுடன் கடமையில் ஈடுபடுவார்கள்.



முதலில் ஆரம்ப நாள் நிகழ்வுக்கு 600,000 பேர் வரை கலந்து கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பின்னர் அவை 326,000 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

# ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் ஸ்மாயில் ஹனியே வான்வழிப் தாக்குதலில் ஈரான் மண்ணில் படுகொலை!

யூலை 31, 2024

ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் இஸ்மாயில் ஹனியே ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள அவரது இல்லத்தின் மீது நடத்தப்பட்ட வான்வழிப் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இவர் ஈரானின் புதிய அதிபரின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக இஸ்மாயில் ஹனியே ஈரான் சென்றார். பின்னர் அவர் அங்குள்ள தனது வீட்டில் தங்கியிருந்தார். உள்ளூர் நேரப்படி அதிகாலை 2 மணியளவில் அவர் இருந்த வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அவர் தங்கியிருந்த வீட்டின் மீது ரொக்கெட் தாக்கியதில் அவரும் அவரது மெய்ப்பாதுகாவலரும் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்மாயில் ஹனியே சியோனிஸ்ட் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்று ஹமாஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இஸ்மாயில் ஹனியே ஹமாஸின் அரசியல் தலைவராக இருந்து வந்தார்.

இந்த தாக்குதலுக்கு இசுரவேல் தான் காரணம் என பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியது.

இந்த தாக்குதலுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என ஈரான் உறுதியளித்துள்ளது.

பாலஸ்தீன நிர்வாகம், துருக்கி, ரஷ்யா, கத்தார் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

இசுரவேலுக்கு கடுமையான தண்டனை காத்திருக்கிறது என்று ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி சபதம் செய்தார்.

ஹனியே உட்பட ஹமாஸின் பெரும்பாலான அரசியல் தலைமைகள் கத்தாரில் நாடுகடத்தப்பட்டு வாழ்கின்றனர்.



தலைவரின் மறைவுக்குப் பிறகு ஹமாஸுக்கு லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பும் இரங்கல் தெரிவித்தது.

இதேபோலவே ஹமாஸின் உயர்மட்ட தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதற்கு ஜெமனில் இயங்கும் ஹூதி போராளிகளும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.









சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சியடைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும், அயலவருக்கும், அளமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ சேதம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இன்று எமது தாயகத்தின் பெருநிலப் பரப்பில் எமது தன்னாட்சி நடைபெறுகிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடைவெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளிவீசிப் பறக்கிறது. இந்த மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது தேசிய விடுதலப் போராட்டம் என்றுமில்லாதவாறு இன்று உலக மயமாகியுள்ளது. பல தசாப்தங்களாகப் பாராமுகம் காட்டி வந்த உலகம் இன்று தனது முழுக் கவனத்தையும் எமது போராட்டத்திற்ன் மீது திருப்பியுள்ளது. ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம். தர்மத்தின் வழி தழுவி, ஒரு சத்திய இலட்சியத்திற்காச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண்போவதில்லை. எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகதம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சாதி, மதம், வர்க்கம் என்று வேறுபாடுகளுக்கப்பால், ஒரு வீடுதலை இயக்கத்தின் கீழ், ஒரு விடுதலை இலட்சியத்தின் கீழ், ஒன்றுபட்ட சமூகமாக எமது மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கிறார்கள். வீரம் செறிந்த எமது விடுதலைப் போராட்டமும் அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது போராளிகள் ஈட்டிய அபாரமான சாதனைகளும் அவர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களுமே எமது மக்களை எழுச்சியூட்டி, உணர்வூட்டி ஒரே அணியில், ஒரே இனமாக, ஒரே தேசமாக ஒன்றதிரள வைத்திருக்கின்றன. எமது மாவீர்களின் மகத்தான தியாகங்களும் அர்ப்பணிப்புகளுமே எமது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஆதாரசக்தியாக விளங்குகின்றன.

*(2003 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.)*



மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000




Build Your Dream Home
SABESAN
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour Wind resistance
Termite Proof
Compare Traditional Building Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்தபடி மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# வெள்ளைக் கொடி கட்டிய வீட்டிலிருப்பது விடுதலை அல்ல...!

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்,
பத்ந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந்த திழிவுற்றாலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!"

பாரதி!
சுதந்திர தேவியின் பாதங்களை வருடி
ஆயிரம் வரிகளால் அர்ச்சித்த பாவலனே!
எட்டயபுரத்து அரசே!
எங்களுக்காகவா எழுதினாய் இப்பாட்டு?
கைதொழத் தக்க கவிஞனே!
காலம் கடந்தாலும் நீளும் உன்குரல்
இன்றுமெம் காதில் ஒலிக்கிறது.
நெருப்பிற் புதைத்து பழுக்கக் காய்ச்சிய சொற்களால்
பொய்யில்லாப் பாடல் புனைந்தவனே!
விடுதலையை விருப்புறும் எவருக்கும்
உன்பாடல் உருவேற்றும்
விடுதலை! விடுதலை!! விடுதலை!!! என்று
உன் இதயக்குகையெங்கும் இருந்தது விடுதலை.
எம் தேசத்திசை யெங்கும் எழுவதும் விடுதலை.
விடுதலை என்பதின் விளக்க மென்ன?
சுதந்திரத்தின் சுருதிப் பொருள் யாது?
அனுபவித்தறியாததுக்கு உவமை கூறமுடியாது.
கற்பனையிற்தான் கொஞ்சம் கண்டு கொள்ளலாம்
விடுதலையை விரித்துரைக்க முடியா தெனினும்,
அது காற்றைப் போலவும் ஒரு உல்லாசம்.
கட்டளையற்றுப் பொழியும் மழை போன்ற சல்லாபம்.
சிட்டுக்குருவியின் சிறகசைப்பைப் போல ஆனந்தம்.
அதிகாலை இதழ்விரிக்கும் மல்லிகைப் பூவின் பரவசம்.
மலைதழுவும் கருமுகிலின் மகிழ்ச்சி.
இரு என்று சொல்லவும்
எழு என்று உத்தரவிடவும்
எஜமானர்களற்ற இருப்பு.
என்னை நானே தீர்மானிக்கும் வாழ்வு.
இதுவே விடுதலை.
அதற்காகவே போராட்டம்
அப்படியா?
கற்பனையிற்கூட எத்தனை ஆனந்தம்
கைவிலங்குகளற்ற கைதிகளாக வாழ்வதிலும்
மூச்சைத்துறந்து முடிந்துவிடுவது மேலானது.
எம் ஊரில்
எம் வீட்டில்
சுற்றம் சூழ இருப்பது மட்டும் சுதந்திரமல்ல
எம் வாழ்வை இன்னொருவன் தீர்மானிப்பது
விடுதலையுமல்ல.
பட்டிமாடுகளின் கழுத்தில் கயிறில்லை என்பதற்காக
மாடுகள் சுதந்திரமானவை என்று சொல்லமுடியுமா?
கூண்டுக்கிளியைக் கொஞ்சி மகிழ்வார்கள்.
பறந்து செல்லப் பார்த்திருப்பார்களா?
இன்னொருவனுக்குக் கீழே இருந்துகொண்டு
என்னைநானே தீர்மானிக்கின்றேனென்பது
எவ்வளவு வேடிக்கையானது?
வீட்டுநாய் விறாந்தையில் ஏற முடியுமென்பதற்காக
நான் சுதந்திரமானவனென்று
நாயெப்படிக் கூறமுடியும்?
இன்று ஊருக்குப் போன உறவுகளெல்லாம்
"ஆனந்தசுதந்திரம்" அடைந்து விட்டோமென்று
பாட்டுக்கள் பாட பகைவன் விடுவானா?
சின்னத்திரையில் வண்ணப்படம் பார்ப்பதும்
"சீமைச்சரக்கில்" வாய்நனைத்துக் கொள்வதும்
பள்ளிக்குப் போவதும்
பரீட்சை எடுப்பதும்
வெள்ளைக் கொடி கட்டிய வீட்டில் இருப்பதும்
விடுதலையல்ல.

விளக்கேற்றாதே,
வீதிக்கு வராதே
ஆறுமணிக்குள்ளே அடங்கிப்போ என்றதும்,
கூனிக் குறுகிக் கிடப்பதும்
சுதந்திரமல்ல...

எம் வீட்டில்,
எம் ஊரில்,
தும்மவும், இருமவும் அனுமதிபெற வேண்டுமென்றால்
அந்த வாழ்வு யாருக்கு வேண்டும்?
எந்தையர் பூமியில் உலாவரும் உரிமம் கூட
எமக்கில்லை என்றான பின்பு
சும்மா மூச்சுவிடுவதற்குப் பெயர் சுதந்திரமென்றால்
சொன்னவன் மனிதனல்ல... சோற்றுப்பிண்டம்.
கைகட்டிச் சேவகம் செய்பவனுக்கு
காற்சட்டை வேண்டியதில்லை
வெட்கமென்ன வெட்கம்?
நிர்வாணமாகவே நிற்கலாம்.
அடிமைவாழ்வில் அழுந்திக் கிடப்பவனுக்கு
தோலின் துவாரத்தில் வியர்வை கசிவதில்லை.
நாயாய் கிடப்பவனுக்கெதற்கு கோயிலும், குளமும்?
சுதந்திரமற்ற ஊரில் திருவிழா எதற்கு?
நான் நானாக இல்லை யென்றான பின்னர்
தேனென்ன? திரவியமென்ன?
உன்னுடலுக்கெதற்கு உணவென்று,
நாக்குக்கூட நகைத்துக் கொள்ளும்.
ஊரிருத்தல் உன்னதம் தான்.
ஆனால், அடிமையற்று இருந்தல் வேண்டும்.
ஏவல்செய்துகொண்டு இந்திரபுரியில் இருப்பதிலும்
சுதந்திரமாக வனாந்திரத்தில் வாழ்வது சுகமானது.
அச்சத்தோடு அரியணையில் இருந்தலிலும்
பயமேதுமின்றி தரையிலிருந்தல் தாழ்வன்று,
மீளா அடிமையென ஊரிருத்தலிலும்
கைவீசிக் கொண்டு காட்டிலிருத்தலே ஆனந்தம்.
வாய்பொத்திக் கொண்டு வலிகாமத்தில் வாழ்வதிலும்
வாய்திறந்து பாடி வன்னியிலிருத்தல் மேலானது.
ஊர்வந்த பகை தொலைத்தெம் பிள்ளைகள் வருவர்.
தலைவன் கொடியேற்றினானெனும் செய்தியும் வரும்.
"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே" என்று மகிழ்ந்து
பரந்தன் வீதியில் பாடிக்கொண்டும்
ஆனையிறவால் ஆடிக்கொண்டும்
நாமுமெம் ஊர்புகுவோம் ஓர்நாள்.
அன்று வலிகாமம் மட்டும் மீட்டதாய் இராது.
தேசம் முழுமையும் எம்வசமானதாய்
"தமிழீழம்" எல்லையிடப்பட்டு தனிநாடானதாய்
விடுதலையின் மெய்ப்பொருள் உணர்ந்தாய் இருக்கும்.
உறுதிகுலையாது ஒருவனுள்ளான்
அவனெம் தலைவன்.
மானம் பெரிதென்ற மகுடம் அவன் தலையில்
ஈனம் துடைக்கின்ற இறுமாப்பு அவன் நெஞ்சில்.
வானம் இடிந்தாலும் வளையாத மனமுண்டு.
வரிவேங்கைப் படைவென்று வருமென்ற திடமுண்டு.
அடிமைத்தளத்தில் உழலும் உறவுக்கு
சுதந்திரதேவி!
உன் கண்ணின் ஒளி கொடு.
நிமிர்ந்தெள நெஞ்சில் உரம்கொடு.
விடுதலை எம் மூச்சு.
விடுதலை எம் வாழ்வு.
அடிமை நரகில் அழுந்திக் கிடப்பதிலும்
விடுதலைக்காக எழுந்து வீழ்ந்துமடிந்தாலும்
அது பெருவாழ்வெனப் பெருமை கொள்வோம்.
ஒன்றே தேசம்!
ஒருவனே தலைவன்!
வென்றே வருவோம்!
விடுதலை பெறுவோம்!

- உலைக்களம் - வியாசன், 10.07.1996, களத்தில்




# 13.02.1985 கொக்குளாய் முகாம் தாக்குதல்!

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஒரு நாளாக இன்றைய நாள் அமைகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய்ப் பிரதேசம் இன்றைய நாளின் பெருமையைத் தாங்கி நிற்கிறது. நம்மில் பலருக்கு "கொக்குளாய்" என்னும் இடம் தமிழீழத்தில் இருப்பது தெரியாமற்கூட இருக்கலாம். காரணம் 1984ம் ஆண்டிலிருந்து சுமார் 35 ஆண்டுகளாக அந்நிலத்திற்குச் சொந்தக்காரர்களான எமது தமிழ் உறவுகள் அங்கே தமது வாழ்க்கையைத் தொலைத்து விட்டிருந்தனர் .

சற்றுப் பின்னோக்கிப் பார்த்தோமானால் சில விடயங்கள் வெட்ட வெளிச்சமாகப் புரிந்துவிடும் என்று நம்புகிறேன்.

முல்லைத்தீவிலிருந்து திருகோணமலை செல்லும் பாதையில் சிலாவத்தை, அளம்பில், செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்குளாய், புல்மோட்டை ஊடாக திருகோணமலை என்ற வகையில் தமிழரின் பாரம்பரிய வளங்கள் நிறைந்த நிலப்பரப்புகளை நோக்கலாம். இப் பிரதேசங்களின் ஒரு பக்கம் இந்து சமுத்திரத்தின் ஒரு பகுதியாகவும் மற்றய பக்கம் மணலாற்றின் பெரிய காடுகளைக் கொண்டதாகவும் நடுவிலே மக்கள் வாழ்விடங்களான மேலே குறிப்பிட்ட பிரதேசங்கள் அமைந்திரப்பதாகவும் இருக்கிறது.

இது தவிர நாயாறு மற்றும் கொக்குளாய் நீரேரிகள் அப் பிரதேசங்களின் அழகான அம்சங்களாகவும் விளங்குகின்றன. கடல்வளம், நெற்பயிர்ச் செய்கைக்கான நிலவளம், தென்னை பனை வளங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய நிலப்பரப்புகள் முல்லை மாணாலாறு மாவட்டமென தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெயர் பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வேளையில் கொக்குளாய் பற்றி பார்க்குமிடத்து, அது ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவே காணப்படுகிறது. காரணம் வடக்கையும் கிழக்கையும் நேரடியாக இணைக்கும் ஒரு இணைப்பு நிலமாக கொக்குளாய் இருப்பது தான்.





1984ம் ஆண்டுக் காலப்பகுதியில் கொக்குளாய்ப் பாடசாலையில் சிறீலங்கா சிங்கள இராணுவம் பாரிய படைமுகாம் ஒன்றை அமைத்தது மட்டுமல்லாது, கொக்குளாய் தொடக்கம் அளம்பில் வரையிலும் ஒரு படைநடவடிக்கையை மேற்கொண்டு பலவந்தமாக மக்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றியது. இதன் மூலம் புலிகளின் தாக்குதல் வீச்சைக் கட்டுப்படுத்தலாம் எனவும் பகற்கனவு கண்டுகொண்டிருந்தது சிங்கள அரசு. இது இவ்வாறிருக்க இடம்பெயர்ந்த மக்கள் அளம்பில் ஐந்தாம் கட்டை, சிலாவத்தை, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு மற்றும் யாழ்ப்பாணம் வரைக்கும் அகதிகளாகச் சென்று தங்குவதற்கு இடமின்றி அல்லலப்பட்டனர். இருந்தபோதும் முல்லை மணலாறு மாவாட்ட மக்கள் திடமான தேசப்பற்றையும் விடுதலை உணர்வையும் விட்டுவிடவில்லை. மாறாக விடுதலைப் புலிப் போராளிகளுக்கு பக்க பலமாக தோளோடு தோள் நின்ற அவர்களது அசாத்தியத் துணிச்சல் என்றென்றும் போற்றத்தக்கது.

கொக்குளாயிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வடக்குக்கிழக்கைத் துண்டாடுவதே கொக்குளாய் முகாம் அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கமாக இருந்தது. மேலும் விடுதலைப் புலிகளின் கடல்வழி மற்றும் காட்டுவழி நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதும், ஏற்கனவே முல்லைத்தீவின் நகர்ப்பகுதியில் முகாம்மிட்டிருந்த இராணுவத்தினருக்கு பலம் சேர்ப்பதும்கூட காரணங்களாயிருந்தன.

இவ்வேளையில் இறுமாப்போடு முகாமிட்டிருந்த இராணுவத்தினருக்கு தக்கப்பாடத்தைப் புகட்ட வேண்டி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இந்தியாவில் பயிற்சிகளை நிறைவு செய்து தாயகம் திரும்பியிருந்த போராளிகளின் அணியொன்றைத் தயார்ப்படுத்தி கொக்குளாய் முகாம் தகர்ப்பிற்காக சிறப்புப் பயிற்சிகளை வழங்கி நெறிப்படுத்தினார் தலைவர் அவர்கள். அதுநாள் வரையிலும் கெரில்லாப் போர் முறையினைக் கைக்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் முதன் முதலாக மரபுவழியிலே கொக்குளாய் முகாமைத் தாக்கியழிக்க முடிவெடுத்தார்கள். சரியான முறையில் வேவு பார்க்கப்பட்டு காட்டுவழியாக தாக்குதலுக்கான அணி நகர்த்தப்பட்டது. இன்று மாவீரர்களாகிவிட்ட தளபதிகள், போராளிகள் பலர் அன்றைய அத் தாக்குதலில் களமிறங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. லெப். கேணல் புலேந்திரன், பிரிகேடியர் சொர்ணம், கப்டன் ஆனந்தன், கப்டன் லோரன்ஸ், லெப். சபா, லெப். ஜீவன் போன்றோர் இவர்களில் சிலராவர்.

கொக்குளாய் முகாம் தாக்குதலுக்கான வழிகாட்டிகளாகவும், உணவு ஒழுங்கமைப்பாளர்களாகவும், முதலுதவிகளை மேற்கொள்பவர்களாகவும் மக்களே செயற்பட்டனர். 13.02.1985 அன்று கொக்குளாய் இராணுவத்தினர் எதிர்பாராத ஒரு நிகழ்வாக புலிகளின் தாக்குதல் அமைந்தது. துணிச்சல் மிகுந்த போரளிகள் முகாமிற்குள் நகர்ந்து சண்டையிட்டனர். அங்கே நிலைகொண்டிருந்த 200 வரையிலான படையினரில் பலர் கொல்லப்பட்டதுடன் அதிகளவானோர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் 16 புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.கொக்குளாய்க் கடல் வழியாக இராணுவத்தினருக்கான உதவிகள் வரத் தொடங்கவே, காயமடைந்த போராளிகளை தோளிலும் கையிலுமாய்த் தாங்கியபடி விடுதலைப் புலிகளின் அணி பின்வாங்கியது. இத் தாக்குதலானது போராளிகளுக்கு மிகப்பெரியதோர் அனுபவப்பாடத்தைக் கற்றுக் கொடுத்தது என்றால் மிகையாகாது. அதேவேளை இராணுவம் திகிலடைந்து நிலைகுலைய காரணமாகவும் இத் தாக்குதல் அமைந்தது. பிந்நாளில் நடந்த பல வெற்றிகரமான தாக்குதல்களுக்கு கொக்குளாய் முகாம் தாக்குதலே முன்னுதாரணமாய்த் திகழ்ந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை.

அன்று தம்மை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவு கூருகின்றோம்.

லெப்டினன்ட் சைமன்

லெப்டினன்ட் பழசு

வீரவேங்கை கெனடி

வீரவேங்கை காந்தரூபன்

வீரவேங்கை ஜெகன் (இடிஅமீன்)

வீரவேங்கை காந்தி

வீரவேங்கை ரவி

வீரவேங்கை வேதா

வீரவேங்கை ரஞ்சன் மாமா

வீரவேங்கை காத்தான்

வீரவேங்கை மயூரன்

வீரவேங்கை சொனி

வீரவேங்கை தனபாலன்

வீரவேங்கை சங்கரி

வீரவேங்கை மகான்

வீரவேங்கை நிமால்

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

- கலைமகள்



# கொக்குளாய் சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலில் 13.02.1985 அன்று வீரச்சாவடைந்த மாவீரர்கள்






















































# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# சாம்பல்தீவு படுகொலை 04,09.08.1985

திருகோணமலையிலிருந்து தமிழ்மக்களை விரட்டும் நோக்கத்துடன் 04.09.1985க்கும் 09.09.1985க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரிய எடுப்பில் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சிறீலங்கா அரசின் முப்படைகளும் பொதுமக்கள் மீதான இந்நடவடிக்கையில் ஈடுபட்டன.

ஊர்காவற்படையும், சிறீலங்கா இராணுவத்தினரும் கனஆயுதங்களுடன் மத்திய வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, 3ம் கட்டை, நாவலர் வீதி ஆகிய இடங்களில் இறங்கித் தமிழரை தாக்கத் தொடங்கினர். 1500 வரையான வீடுகளும், சிவானந்தம் தபோவனம் எனப்படும் 200 சிறுவர்களை பராமரித்து வந்த சிறுவர் இல்லமும், பல கடைகளும் அழிக்கப்பட்டன. தமிழ் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள் சூறையாடப்பட்டது. 25க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஊடகவியலாளர்கள் எவரும் இவ்விடங்களுக்குச் செல்ல அநுமதிக்கப்படவில்லை.

அப்போது பிரஜைகள் குழுத் தலைவராக இருந்த பாடசாலை அதிபர் ஒருவர் எழுதிய அறிக்கையின்படி யூன் 1985இல் மட்டும் 311 பொதுமக்கள் திருகோணமலையில் கொல்லப்பட்டுள்ளனர். செப்டம்பர் மாதத்தில் 383 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவ்வறிக்கைபற்றி யாழ்பாணத்திலிருந்து அக்காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த 21.12.1985 சற்றடேரிவ்யூ பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பூந்தோட்டச்சந்தி படுகொலை 10.08.1985

வவுனியா நகரிலிருந்து கிழக்கே மூன்று கி.மீ. தூரத்தில் பூந்தோட்டம் அமைந்துள்ளது. வயல்களாற் சூழப்பட்ட இக்கிராமத்தில் அதிகமானவர்கள் விவசாயிகளாவர்.

10.08.1985 அன்று காலை 7மணியளவில் வழமைபோல் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சந்தைக்குப் பொருட்கள் வாங்க மற்றும் விற்கச்செல்வோர், வைத்தியசாலைக்குச்செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பூந்தோட்டம் வீதியால் அதிகளவான மக்கள் பயணம் செய்தனர். அந்த நேரம் அவ்வீதியால் வாகனத்தில் வந்த காவற்றுறையினர் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர்காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 வெள்ளையன் தேவதாஸ் - லொறி கிளினர் - 20
02 பொன்னம்பலம் வில்வராஜ் - வியாபாரம் - 22
03 கதிரேசு சுந்திரசேகரம் மருந்துத் - தொழிலாளர் - 25
04 சிங்காரம் நாகலிங்கம் - தொழிலாளி - 33
05 முனியாண்டி மூக்கன் - தொழிலாளி - 34
06 வீரமாரெட்டியார் கோவிந்தராஜ் - வியாபாரம் - 38
07 சின்னக்கருப்பன் கிட்ணசாமி - தொழிலாளி - 40
08 துரைராஜா நடேசபிள்ளை - உதவி முகாமையாளர் - 43
09 கறுப்பையா ராமராஜ் - வியாபாரம் - 48
10 கோவிந்தசாமி சிங்காரவேலு - கமம் - 63



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கள்ளம்பற்றைச் சந்தி படுகொலை 10.08.1985

திருகோணமலை மாவட்டத்தின் புகழ் பெற்ற இடங்களில் ஒன்றான திரியாய்க் கிராமம். திருகோணமலையிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிப்படைந்த மக்கள் அகதி முகாம்களிற் தஞ்சமடைந்திருந்தனர்.

முகாமிற்கு வந்த இராணுவத்தினர் வன்முறைகளால் இடம் பெயர்ந்து வந்திருந்த மக்கள் ஒன்பது பேரைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். இவ்வாறு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட மக்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக கள்ளம்பற்றைச் சந்தியிலிருந்து மீட்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்து வந்த தமிழர்கள் ஆவர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 நாராயணன் ஜெகநாதன் - கல்லுடைத்தல் - 48
02 சுப்பிரமணியம் நாராயணபிள்ளை - கிராமசேவகர் - 45
03 மாணிக்கம் கிருஸ்ணமூஉத்தி - -
04 நாகேஸ் --



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# வல்வைப் படுகொலைகள்








# 02, 03, 04. 08.1989

தமிழர் உரிமைப் போராட்டத்தின் திருப்பு முனையாக ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் (யூலை 29.1987) விளைவாக இலங்கைக்கு வந்த இந்தியப் படைகள் (IPKF) ஏற்கனவே திட்டம் இட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுத களைவு என்ற பெயரில் ஒரு முழு யுத்தத்தினையே நடத்தத் தொடங்கின. வேறு வழிவகை அறியா தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்கள் ஆதரவினை மட்டும் நம்பி உலகின் நாலாவது பெரிய இராணுவத்தினை எதிர்த்து போர்புரிந்துவெற்றியும் பெற்றனர்.

இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் முடிந்து அந்தப் பிரதேசத்தை விட்டு இராணுவம் முகாம்களுக்குத் திரும்பிய பின் வல்வெட்டித்துறைக்குச் சென்று பார்த்தவர்களால், அங்கு நடைபெற்று முடிந்த கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.

இந்தப் படுகொலைகளின் பொழுது, ஆண், பெண், முதியோர், குழந்தைகள் என்ற வேறுபாடுமின்றி அங்குமிங்குமாக 71 பொதுமக்கள், சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர். இதில் பலர் நிலத்தில் முகங் குப்பறப் படுக்கவைக்கப்பட்ட நிலையில் முதுகில் சுடப்பட்டிருந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்திருந்தனர்.

ஒரு நாளில் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றுவோம் என சொன்ன இந்திய அமைதிப்படையினர் யாழ்பாணத்தினைக் கைப்பற்ற 1 மாதம் எடுத்தது.

யாழ்ப்பாணத்தினை கைப்பற்றிய பின்பு ஏனையபகுதிகளையும் கைப்பற்றிய இந்தியப் படைகள் 200 மீட்டருக்கு ஒன்று என்று ரீதியில் முகாம்களை அமைத்தது. புலிகளும் தமது பிரதான முகாம், தலைமை என்பனவற்றை வன்னிக்கு மாற்றிவிட்டு மற்றைய பகுதிகளில் தமது குறிப்பிட்டளவு போராளிகளை நிறுத்தியிருந்தனர். தினமும் எதாவது ஒரு பகுதியில் போராளிகளைத்தேடும் இந்திய இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்ற வண்ணமே இருக்கும்.

இப்படி தான் 1989 ம் ஆண்டு ஒகஸ்ட் 2ந் திகதி வல்வெட்டித்துறையில் இருக்கும் ஊரிக்காடு, பொலிகண்டி இராணுவ முகாம்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் புறப்பட்டனர் இந்தியப் படையினர். இந்த இந்திய இராணுவவீரர்களுக்கு தலைமை தாங்கியது. முறையே மேஜர் சுதர்சன் சிங், கப்டன் கோபாலகிருஸ்ன மேனன், கப்டன் கபூர் என்போராவார். இவர்களை எதிர் கொண்டு புலிகள் நடத்திய தாக்குதலில் 09 சீக்கிய சிப்பாய்கள் கொல்லப்பட ஆயுதம் தாங்கிய புலிகளை அழிக்க திராணியற்ற இந்திய படைகள் அப்பாவி மக்கள் மீது தனது வெறியாட்டத்தினை வழமை போல தொடங்கியது.

ஒகஸ்ட் 2 ந் திகதி இச் சம்பவம் நடைபெற 3,4 திகதிகளில் வல்வெட்டித்துறையிலும் அதைச் சூழ உள்ள பகுதிகளிலும் ஊரடங்கு சட்டத்தினை பிரகடனப்படுத்திவிட்டு வெறியாட்டம் ஆடினர். யாருமே வல்வெட்டிதுறைக்குள் போகவே, அங்கிருந்து தப்பி வரவோ முடியவில்லை. வெறியாட்டம் முடிந்து இந்திய இராணுவம் முகாம்களுக்கு திரும்பிய பின் வல்வெட்டித்துறைக்கு சென்றுபார்த்தவர்களால் நடைபெற்ற கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.





63 பொதுமக்கள் சுட்டும் ,வெட்டியும், எரித்தும் கொல்லப் பட்டிருந்தனர்.இதில் பலர் நிலத்தில் கிடத்தி முதுகில் சுடப்பட்டிருந்தனர்.ஆண்,பெண்,முதியோர் வேறுபாடு இன்றி.

100 பேர் அளவில் காயமடைந்திருந்தனர்.

123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன.

45 கடைகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன.

வல்வை சனசமூக நிலையம் (நூலகம்) தீயிடப்பட் டிருந்தது. பல ஆயிரக்கணக்கான நூல்கள். தளபாடங்கள் கொழுத்தப்பட்டிருந்ததுடன் நூலகத்தில் இருந்த காந்தி, நேரு, நேதாஜி, இந்திராகாந்தி போன்ற தலைவர்களின் படங்கள் கூட நொருக்கப் பட்டு தீயிடப்பட்டு இருந்தன.

176 மீன்பிடி வள்ளங்கள் எரிக்கப்பட்டன.

இக்கோர தாண்டவம் பற்றி எந்த ஒரு இந்திய ஊடகமும் செய்தி வெளியிடவில்லை. இன்று கூட எத்தனை இந் தியருக்கு இது பற்றி தெரியும் என்பது கேள்விக் குறியே?

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய படு கொலைகள் பற்றி பழ. நெடுமாறன் அவர்களால் எழுதப் பட்டவை கீழ் வருமாறு :
தம்பி பிரபாகரன் அவர்களையும் மற்றும் பல புலிகளையும் பெற்றெடுத்த ஊர் என்பதனாலும், இவ்வூர் மக்கள் அனை வருமே புலிகளுக்கு முழுமையாக ஆதரவு தந்தவர்கள் என்பதனாலும் வல்வெட்டித்துறை மீது இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு மிகுந்த கோபம் இருந்தது. அந்தக் கோபத்தை அவர்கள் தீர்த்துக் கொண்ட விதம் மிகக் கொடூரமானது.

1919ம் ஆண்டு, ஏப்ரல் 13ம் நாள் இந்தியாவில் அமிர் தசரஸ் நகரத்தில் ஜாலியான்வாலாபாக் படுகொலை நடந் தது. மைதானத்தில் கூடியிருந்த அப்பாவிப் பொது ஜாலியான் வாலாபாக் படுகொலை இந்திய மக்களை அன்று கொதித்தெழ வைத்தது. ஆனால், அதே இந்திய நாட்டைச் சேர்ந்த இராணுவம் வல்வெட்டித் துறையில் மற்றொரு ஜாலியன் வாலாபாக்கை நடத்திக் காட்டியது.

இந்திய இராணுவம் நடத்திய படுகொலைகளை இந்திய அரசு திட்டமிட்டு மறைத்தது. இந்தியப் பத்திரிகைகளுள் பெரும்பகுதி இச் செய்தியை மறைப்பதில் ஒத்துழைப்புக் கொடுத்தன.

ஆனால், வல்வெட்டித்துறையில் இச்சம்பவம் நடந்த 13 நாள்களுக்குப் பிறகு அங்கு சென்ற இலண்டன் "பெர்னாண்டஸியல் டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவத்தைப் பற்றிய விவரங் களை முதன் முதலாக ஆகஸ்ட் 17ம் நாளன்று அவரது பத்திரிகைகளில் இச் செய்தி வெளிவந்தது. பரபரப்பாக வெளி வந்த பிறகு செப்டம்பர் 3ம் நாள் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" சிறிய அளவில் இச் செய்தியை வெளியிட்டது.



## இந்திய இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு பலியான 63 பொதுமக்கள்

எங்கும் சடலங்கள், அவல ஓலங்கள், தீக்கொழுந்துகள், காயமடைந்த ,கொல்லப்பட்ட உறவினர்களின் அவலக் குரல்கள். காலங்கள் பல சென்றாலும் இன்றும் வல்வெட்டி துறை மக்களின் மனங்களில் இரண வடுவாக அச்சம் பவம் இருந்து வருகிறது. ஒரே குடும்பத்தில் 3 பேர் கூட கொல்லப்பட்டிருந்தனர். வல்வெட்டிதுறையில் நடைபெற்ற மக்களைப் பிரித்தானிய இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டுப் படுகொலை செய்தது. அந்தப் படுகொலையைத் தலைமை தாங்கி நடத்திய பிரித்தானிய ஜெனரல் டையர் "சுட்டேன், சுட்டேன் குண்டுகள் தீரும் வரை சுட்டேன்" என்று கொக்கரித்தான்.

இந்த முறை வல்வெட்டித் துறைக்கு நான் சென்ற போது இந்தப் படுகொலைகள் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ள முயற்சி செய்தேன். வல்லவை மக்கள் குழுவின்தலைவர் எஸ்.செல்வேந்திரா, செயலாளர் ஆனந்தராஜ், பொருளாளர் நடன சிகாமணி உட்பட பலரை



இந்திய இராணுவத்தினால் கண்மூடித்தனமான
தாக்குதலுக்கு பலியான பொதுமக்கள்.













# The IPKF in Thamileelam



நான் சந்தித்துப் பேசினேன். இப்படுகொலைகள் நடை பெற்று ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பிறகு கூட அந்த அதிர்ச்சியில் இருந்து வல்வை மக்கள் மீளாததை நான் பார்த்தேன்.

1989ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் நாள் வல்வெட்டித் துறை சந்தைச் சதுக்கத்தில் காலை 11 மணிக்கு யாரும் எதிர் பாராத விதமாக விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் 6 இந்தியப் படை வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயம் அடைந்தனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து வல்வெட்டித் துறையைச் சுற்றி இருந்த மூன்று இராணுவ முகாம்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வந்து வல்வெட்டித் துறையைச் சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை வீட்டுக் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து பதறப் பதறச் சுற்றுக் கொன்றார்கள். மொத்தம் 63 பேர் இவ்விதம் படுகொலை செய்யப்பட்டனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதற்கு முன் வந்த பிரான்சு மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இந்திய இராணுவம் அனுமதிக்கவில்லை. தொடர்ந்து மூன்று நாள்களாக இராணுவத்தினர் ஊரைச் சுற்றி முற்றுகையிட்டு இருந்ததால் இறந்து போனவர்களின் பிணங்களைக் கூட அப்புறப்படுத்த முடியவில்லை. பிணங் கள் அழுகிப் போன நிலையில் அந்தந்த வீடுகளுக் குள்ளேயே வைத்து உறவினர்களால் எரிக்கப்பட்டனர். கணவர் உடலை மனைவியும், மனைவியின் உடலைக் கணவரும் பெற்றோர் உடலைப் பிள்ளைகளும் பிள்ளைகளின் உடலைப் பெற்றோரும் எரிக்க வேண்டிய அவலத்திற்கு ஆளாயினர்.

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராஜலிங்கம் சதீஸ்குமாபர் - மாணவன், 18
02 இராசையா இராஜரட்ணம் - கடற்றொழில், 33
03 இராமச்சந்திரன் நவரத்தினம் - வியாபாரம், 26
04 இராசகுரு யவனராஜ் - மாணவன், 13
05 இராசகுரு புஸ்பராணி - வியாபாரம், 45
06 இராசா ஜெயமயில் - வியாபாரம், 20
07 இராசமாணிக்கம் நடராசா - தபாலதிபர், 62
08 ஈஸ்வரமூர்த்தி இராசலட்சுமி - 24
09 நாகராசா ஞானகுலசிங்கம் - கடற்றொழில், 22
10 நாகலிங்கம் பவப்பிருந்தா - மாணவி, 14
11 நடராசா நல்லமுத்து - வீட்டுப்பணி, 72
12 நடராசா சிவகுமாரன் - மாணவன், 25
13 நடராசா ரவீந்திரன் - கடற்றொழில், 31
14 நல்லரெத்தினம் பானுகோபால், - இரும்பு வேலை, 23
15 கந்தசாமி தங்கராசா - வியாபாரம், 70
16 கந்தசாமி வேலும்மயிலும் - தொழிலாளி, 45
17 கதிர்காமத்தம்பி சிவநேசராசா - வியாபாரம், 36
18 குமாரவேல் செல்வானந்தவேல் - மாணவன், 18
19 கணேசலிங்கம் சசி - குழந்தை, 01
20 குழந்தைவடிவேல் சண்முகவடிவேல் - தொழிலாளி, 37
21 குணரட்ணம் ,ராசசேகரம் - கடற்றொழில், 18
22 பாலகிருஸ்ணன் பிரேமதாஸ் - சாரதி, 20
23 பாலசுப்பிரமணியம் மகேந்திரதாஸ் - மாணவன், 15
24 பாலசுப்பிரமணியம் யோகேந்திரராசா - மீன்பிடித்தல், 28
25 பீற்றர் விஜயராஜன் கிருஸ்ணவதனா - வீட்டுப்பணி, 33
26 தளையசிங்கம் ஜெயமோகன் - கடற்றொழில், 18
27 தளையசிங்கம் சிவகுமார் - கடற்றொழில், 21
28 துரைராசா நாகதாஸ் - மின்னியலாளர், 28
29 தங்கவேலாயுதம் ஜெயக்குமார் - மெக்கானிக், 20
30 தங்கவேலாயுதம் சாம்பசிவம் - கடற்றொழில், 18
31 தணிகாசலம் ரவிச்சந்திரன் - வியாபாரம், 28
32 முருகேசு செல்லத்துரை - சாரதி,
33 அப்பாத்துரை மதிவாணன் - வியாபாரம், 18
34 ஆதிஅருணாசலம் பராசர் - வியாபாரம், 20
35 ஆதிஅருணாசலம் பரம்சோதி - வியாபாரம், 18
36 ஆதிஅருணாசலம் சுந்தரேஸ்வரன் - மாணவன், 12
37 அமிர்தலிங்கம் உமாதேவி - 26
38 அருள்பிரகாசம் சுவர்ணதாஸ் - கடற்றொழில், 19
39 அருளப்பு இலங்கைநாதன் - கடற்றொழில், 22
40 அருணாச்சலம் இளையபெருமாள் - துறைமுக ஊழியர், 76
41 ஆறுமுகநாதன் இராமச்சந்திரன் - மேசன், 41
42 பொன்னுத்துரை இராசேந்திரம் - மீனவர், 23
43 பொன்னுத்துரை சண்முகலிங்கம் - சாரதி, 43
44 பொன்னம்பலம் றஞ்சிதகுமார் - கடற்றொழில், 25
45 பொன்னையா காளிதாஸ் - இரும்பு வேலை, 26
46 செந்திவேல் சக்திவேல் - கடற்றொழில், 24
47 சோதிலிங்கம் றமேஸ்குமார் - கடற்றொழில், 18
48 செல்லையா யோகராசா - கமம், 19
49 செல்வக்கதிரமலை மயில்வாகனம் - பரிசோதகர், 55
50 செல்வசுந்தர் தவசீலன் - மாணவன், 07
51 வெங்கடாச்சலம் சுப்பிரமணியம் - நிலஅளவை அதிகாரி,
52 வேலும்மயிலும் செல்வச்சந்திரன் - மாலுமி, 26
53 சுந்தரமூர்த்தி  உமாசங்கர் - வியாபாரம், 22
54 சுந்தரலிங்கம் ஞானவேல் - கடற்றொழில், 21
55 சுப்பிரமணியம் அமுதன் - வர்த்தகர், 28
56 சுப்பிரமணியம் பேரின்பம் - மாணவன், 20
57 சின்னத்துரை தம்பித்துரை - கடற்றொழில், 60
58 சின்னத்தம்பி கணேசலிங்கம் - தொழிலாளி, 25
59 சின்னத்தம்பி சிவலிங்கம் - சீவல், 50
60 சின்னவன் கந்தன் - தொழிலாளி, 30
61 சிவப்பிரகாசம் சபாநாயகம் - வியாபாரம், 77
62 சிவபாக்கியம் கந்தசாமி - சலவைத்தொழில், 42
63 சிவலிங்கம் இராமநாதன் - சாரதி, 35
64 வடிவேலு குமாரசாமி - தொழிலாளி, 89
65 விஜயரட்ணம் முரளிதரன் - கடற்றொழில், 20
66 வினாயகமூர்த்தி அருள்சோதி - ஊழியர், 29







# திராய்க்கேணிப் படுகொலை 06.08.1990

1954ஆம் ஆண்டு அமரர் தர்மரட்ணம் என்பவரின் தென்னந் தோட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமம் திராய்க் கேணியாகும். திராய்க்கேணிக்கு கிழக்குப் பக்கத்தில் ஒலுவில் கிராமமும் தெற்குப் பக்கத்தில் பாலமுனையும் அமைந்துள்ளது. இக்கிராமம் அட்டாளைச்சேனை உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் கீழும் அக்கரைப்பற்று நீதிமன்று நியாதிக்கத்தின் கீழும் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முன்நூற்றெழுபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் முன்நூற்றைம்பது வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.

05.08.1990அன்று திரியாய்க்கேணியில் வசித்து வந்த முசுலிம்களில் ஒருவர் காட்டுக்குச் சென்றவேளை மர்மமான முறையில் உயிரிழந்ததனைத் தொடர்ந்து 06.08.1990அன்று அக்கிராமத்திலிருந்த நூறு-நூற்றைம்பது பேர் கொண்ட முசுலிம் குழு திரியாய்க் கேணியிலிருந்த தமிழர்களைத் தாக்கினார்கள்.

தாக்கக் கத்தி, வாள், பொல்லு போன்ற ஆயுதங்களைப் பயன் படுத்தியதுடன், வீடுகளையும் அவர்களின் உடைமைகளையும் தீயிட்டு எரித்தார்கள். முசுலிம்களின் தாக்குதல் தீவிரமடைய கிராமமக்கள் அருகிலிருந்த பிள்ளையார் கோயிலில் அடைக்கலம் புகுந்தார்கள். கோயிலுக்குள் நுழைந்த முசுலிம் குழுக்கள் அடைக்கலம் புகுந்த மக்களை வாள்களால் வெட் டியும் கத்தியாற் குத்தியும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு முசுலிம்கள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் போது கோயிலுக்கு வெளியில் சிறீலங்கா இராணுவத்தினர் பவள் கவச வாகனத்தில் தாக்குதல் நடத்துபவர்களிக்குப் பாதுகாப்பினை வழங்கிக்கொண்டிருந்தார்கள். எஞ்சியிருந்த நூற்றிஐம்பது குடும்பத்தினர் அகதி முகாமுக்குச் சென்றனர்.

தாக்குதலில் தொண்ணூறிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். முன்நூற்றுநாற்பதிற்கும் மேற்பட்ட வீடுகளும், எழுபது மில் லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான சொத்துக்களும் எரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி மயிலாப்பொடி - -
02 இராமக்குட்டி மயில்வாகனம் - தொழிலாளி 18
03 இராசதுரை பிரகலா - -
04 நாகலிங்கம் தம்பிராசா - -
05 நல்லதம்பி புலேந்திரன் - தொழிலாளி 27
06 கனகரத்தினம் அழகையா - ஊழியர் 35
07 கனகரட்ணம் சுப்ரமணியம் - -
08 கந்தக்குட்டி பூபாலப்பிள்ளை - தொழிலாளி 19
09 கந்தக்குட்டி வேலாயுதம் - -
10 கா.பாஸ்கரலிங்கம் - தொழிலாளி 39
11 கா.சாமித்தம்பி - விவசாயம் 43
12 காந்தன் நவரட்ணம் - -
13 காளிக்குட்டி பாக்கியராசா - -
14 காளிக்குட்டி தம்பிப்பிள்ளை - -
15 கதிரன் கணபதி - -
16 கதிரன் பாக்கியராசா - தொழிலாளி 34
17 கணபதி காளிக்குட்டி - ஊழியர் 50
18 கணபதி காளிமுத்து - வைத்தியர் 45
19 கணபதிப்பிள்ளை கிருஸ்ணன் - -
20 கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம் - -
21 பூபாலப்பிள்ளை புலேந்திரன் - தொழிலாளி 30
22 பூபாலப்பிள்ளை ஏகாம்பரம் - தொழிலாளி 24
23 தம்பியப்பா கோபால் - தொழிலாளி 50
24 தம்பிமுத்து ஆனந்தராசா - -
25 மு.கணபதி - தொழிலாளி 76
26 மா.குஞ்சித்தம்பி - தொழிலாளி 50
27 மா.ஜெயசீலன் - தொழிலாளி 24
28 மார்க்கண்டு கிருபை - தொழிலாளி 30
29 மார்க்கண்டு மயில்வாகனம் - -
30 மார்க்கண்டு ஜெயக்குமார் - -
31 முருகன் இளையதம்பி - தொழிலாளி 39
32 முருகேசு நாகேந்திரன் - தொழிலாளி 28
33 பொன்னன் அழகையா - தொழிலாளி 29
34 செல்லையா பாக்கியராசா - தொழிலாளி 26
35 செல்வம் சீனித்தம்பி - -
36 செல்லத்துரை கிருஸ்டியன் - -
37 செல்லத்துரை பாலச்சந்திரன் - -
38 செல்லத்துரை அமிர்தலிங்கம் - -
39 வேலன் கதிரேசப்பிள்ளை - தொழிலாளி 44
40 வேலுப்பிள்ளை குணராசா - -
41 வேலுப்பிள்ளை பாஸ்கரலிங்கம் - தொழிலாளி 35
42 சாமித்தம்பி நாகராசா - -
43 சாமித்தம்பி சௌந்தராஜன் - -
44 சின்னத்தம்பி கன்னி - -
45 சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை - -
46 சின்னத்தம்பி சிவசிதம்பரம் - -
47 சற்குணம் இளையதம்பி - -
48 சற்குணம் விஜயலட்சுமி - -
49 வ.பாக்கியராசா தொழிலாளி 26
50 விஸ்வலிங்கம் அழகை - -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சேவியர்புரம் படுகொலை 07.08.1990

குறவர் பழங்குடியினர் 1950ல் குடியமர்த்தப் பட்ட இடத்தின் பெயர்தான் அம்பாறையில் உள்ள சேவியர்புரம்.

7ம் தேதி ஆகஸ்ட் மாதம், 1990ல் குறவர் பழங்குடியினரின் வீடுகள் கொழுத்தப்பட்டு, அந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களும் கொல்லப்பட்டனர். இவர்களது கோயில்கள், பாடசாலைகள், சமூகப் பொதுமண்டபங்கள் யாவும் இடிக்கப்பட்டதோடு, இச்சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என அனை வரையும் மனிதவதைக்கு இந்த நாளில் உள் ளாக்கப்பட்டனர். குறவர் சமூகத்தின் மீது எவ் வித காரணங்களுமின்றி வன்முறை கட் டவிழ்த்து விடப்பட்டது. இச்சமூகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இஸ்லாமிய ஊர்க் காவல் படையைச் சேர்ந்தவர்கள் என பின்னர் தெரியவந்தது. விடுதலைப்புலிகள் இச்சமூகத் தோடு உறவு வைத்திருந்தார்கள் என்னும் குற்றச்சாட்டோடு இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. மினியக்கா என்ற பெண்மணி சேவியர் புரம் தாக்குதல் குறித்து சொல்லிய போது,

“1990 ஆகஸ்ட் 07ம் தேதி முற்பகல் 1 மணிக்கு அன்றைய முதல்வேளை உணவை சிலர் உட்கொண்டும், வேறு சிலர் சமைத்துக் கொண்டு இருந்த சமயத்தில், வன்முறை யாளர்கள் அங்கு வந்தனர். நீதை சாலை வழியாக 18 டிராக்டர்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்தது. வந்தவர்களிடம் கத்தி, குண்டாந்தடிகள், அரிவாள், துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் இருந்தன. வன்முறையாளர்கள் எங்கள் கிராமத்தின் நடுவில் நின்று கொண்டு, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனை வரையும் ஒன்றாய் கூடும்படி கட்டளை யிட்டனர். வன்முறையாளர்கள் கொண்டு வந்த ஆயுதங்களை யார்க்கும் போது ஏதோ இராணுவ படை போன்று தெரிந்தது. வன் முறையார்கள் எங்களிடம் நடந்து கொண்ட முறையும் பயத்தை வரவழைத்தது. சேவியர் புரம் மக்கள் அனைவரும் இந்த நடவடிக் கையை பார்த்து திகைத்துப் போய் செய்வ தறியாது நின்றனர். சாப்பிட்டுக் கொண்டிருந்த மக்கள் அனைவரும், அவசரமாய் கைகளை கழிவிக் கொண்டு, வன்முறையாளர்களின் முன் கூடினர். நானும், எனது கணவர் மற்றும் என்னுடைய மகன், மகள் எல்லோரும் அங்கு நின்றோம். சீருடையணிந்த வன்முறை யாளர்கள் இஸ்லாமிய ஊர் காவல் படையினர் என்றும் அவர்களுடன் வந்த ஏனையோர் அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் எங்களால் அடையாளம் காண முடிந்தது.”

சம்பவந்தை நேரில் பார்த்த ஒருவர் கூறினார், “வந்திருந்த இஸ்லாமிய ஊர்காவல் படை யினர் மற்றும் வன்முறையாளர்களின் முன் நாங்கள் கூடியிருந்த போது, என்னுடைய ஒரே மகனை எங்கள் முன்னேயே மனித வதைக்கு உட்படத்தி, கொடுமைப் படுத்தினர். அதே போல், ஜெயராஜ் என்ற எங்களது சமூகத்தைச் சேர்ந்த வேறோரு இளைஞரையும் தொடர்ந்து மனிதவதைக்குட்படுத்தினர்.

எனது கணவரால் எங்களது கண் முன்னே எங்களது ஒரே மகனை கொடுமைப்படுத்தியது பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனது கணவர், துள்ளியெழுந்து தனது எதிர்ப்பை தெரியப்படுத்தினர். நானும் சத்தமிட்டுக் அழு தேன். வன்முறையாளர்களில் ஒருவன், ஒரு மரக்கட்டையை எடுத்து எனது கணவரது நெஞ்சை நோக்கி கொடுத்த அடியினால், அவர் சுயநினைவை இழந்து கீழே விழுந்தார். அவர் கீழே விழுந்தது, ஏதோ ஒரு பெரிய மரம் சாய்ந்தது தோன்றியது. நான் அவசர அவசர மாய் அங்கு ஓடிச் சென்ற எனது கணவரின் தலையை தூக்கி பார்த்தேன். அப்போது, மற்றொரு வன்முறையாளன், அயுதத்தைக் கொண்டு எனது தலையில் பலமாய் அடித் தான். இதனால், எனது தலையிலிருந்து இரத்தம் கொட்டியது மட்டும் உணர்ந்து கொண்டிருக்கும் போதே மயக்கமுற்றேன்.

இத்தாக்குதலிருந்து தப்பிய அனைவரும் காயம்பட்டோரையும் தூக்கிக்கொண்டு திருக் கோயிலுக்கு ஓடினோம். அவர்கள் அனை வரும் தங்களது முதுகில் உடுத்த துணி மட்டும் எடுத்துக் கொண்டு ஓடினர். இதில் சிலர் முந்திய நாள் உணவு கூட உண்ணா திருந்தனர்.



நான் கண் திறந்து பார்த்தபோதுதான், ஒரு மருத்துவமனை படுக்கையில் இருப்பதை உணர்ந்தேன். அங்கு என்னுடன் கிராமத் தைச் சேர்ந்த பலரும் இருந்தனர். அப்போது மாலை சுமார் 4 மணி இருக்கும். நான் என்ன நடந்தது என யூகிக்க முயற்சித்த போதும், முடியாமல் போனது. கவலையும் அதிர்ச்சியும் அடைந்த உறவினர்கள் எனது குடும்பத்தாரை பார்க்க வந்திருந்தனர். இஸ்லாமிய ஊர் காவல் படையினர் பெட்ரோலையும், மண் ணெண்ணையையும் ஊற்றி எனது கிராம வீடுகளை எரியூட்டியதையும், அங்கு பலர் கொல்லப்பட்டதையும் சொன்னார்கள். எல்லா மக்களும், கிராமத்திலிருந்து ஓடிவிட்ட போதும். சிலர் மட்டும், இறந்தவர்களுக்கு கடைசி மத சடங்குகளை செய்ய சேவியர்புரம் சென்றனர்.

என்னையும் ஏதோ ஒன்று அவர்களுடன் சேவியர்புரம் செல்ல தூண்டியது. என்னுடைய உடல்நிலை மிக மோசமாய் இருந்தபோதும், என்னைப் போல வலியால் துடித்துக் கொண் டிருந்த எனது கணவரையும் கண்டுபிடித்து, எங்களது கிராமத்தை சேர்ந்த ஒருவருடைய டிராக்டர் வண்டியில் சுமார் 20 பேர்களை ஏற்றிக் கொண்டு எனது கிராமத்தை நோக்கி சென்றோம். அங்கு என்னுடைய மகன் துப்பாக்கி குண்டுகளால் சிதைந்து கிடந்ததைப் பார்த்து கல்லானேன். அருகே மேலும் இரு வரது உடல்கள் கிடந்தது.

அழித்து ஒழிக்கப்பட்ட அந்த கிராமத்தின் மயான அமைதி என்னுள் ஒரு அச்சத்தை உண்டு செய்தது. சிதைந்து கிடந்த வீடுகள் பேய்களை நினைவுபடுத்தியது. நாங்கள் உடனடியாக திருக்கோவில் ஊருக்கு திரும்பினோம்.”

மாசன்னா என்ற வயதான பெண்மணி குறவர் பழங்குடியினர் வாழ்ந்து வந்த சேவியர் புரத்திலிருந்த மற்றொரு பாதிக்கப் பட்ட நபராவார். அந்த வயதான பெண்மணி தாக்குதல் நடத்தியவர்கள் எல்லோரையும் தனக்கு தெரியும் என்று கூறினார். இப்பெண் மணி வாழ்ந்து வரும் இடத்தின் அருகிலே இருந்த நெல் உற்பத்தியாளர்கள்தான் அன்று தாக்குதல் நடத்திய வன்முறையாளர்கள். அந்த இஸ்லாமிய நெல் உற்பத்தியாளர்களின் வயல்களிலேயே அந்த குறவர் சமூகத்தினர் வேலை செய்து வந்தனர். அம்மாதிரியான உறவுள்ள மக்களின் கிருத்துவகோயில், பாட சாலை, வீடுகள் என அனைத்தையும் நிர் மூலம் ஆக்கினது மட்டுமல்லாது அம்மக் களையும் அன்று கொன்று குவித்தனர்.

வீடுகளை இழந்து தமது வாழ்வாதரங்களை தொலைத்து அன்று கண்ட கொடுமைகளை தாங்க முடியாத அம்மக்களில் சிலர் பின்னர் தற்கொலை செய்து மாண்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கல்முனைப் படுகொலை 11.08.1990



மட்டக்களப்பு நகரத்திலிருந்து 40கி.மீ தொலைவில் கல்முனை உள்ளது. இதனைச்சுற்றி பண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, நிலாவணை ஆகிய கிராமங்கள் உள்ளன.

11.08.1990 அன்று பண்டிருப்பு, கல்முனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் இராணுவச் சுற்றிவழைப்பினால் அச்சமடைந்து தத்தம் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். இராணுவம் வீடுகளுக்குள் குறிவைத்துச் சுட்டு மக்களை வெளியே வரும்படி செய்தது. இளம் ஆண்கள் தமது தேசிய அடையாள அட்டையை கையில் வைத்தபடி வெளியே வந்தனர். தாய்மார் தங்கள் குழந்தைகளை இறுகப் படித்தபடி வெளியே வந்தனர். 25 இளம் ஆண்களை இராணுவம் கல்முனைக் கிராமத்திலிருந்து காரைதீவு இராணுவ முகாமிற்குக் கூட்டிச் சென்றது. தமது பிள்ளைகளைத் தொடர்ந்து சென்ற தாய்மார் துவக்கினால் தாக்கப் பட்டனர். பல தாய்மார் மயக்கமுற்று விழுந்தனர்.

அடுத்த நாள் கூட்டிச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கல்முனை நகருக்கூடாக காரைதீவு முகாமை நோக்கி நடந்து சென்றனர். கல்முனை நகரில் இராணுவம் இவர்களை வீதியருகே நிற்க வைத்தது. பெரும் தொகையான இராணுவம் அவ்விடத்திற்கு வந்து உறவினர்கள் மத்தியிலிருந்த இளம் பெண்களைத் தெரிவு செய்து அருகே இருந்த கட்டடத்திற்குள் கூட்டிச்சென்று அவர்களை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியது. உறவினர்கள் மத்தியிலிருந்த ஆண்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கொலைசெய்யப் பட்டனர். மொத்தமாக இரண்டு மணித்தியாலங்களில் 37 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
முதல் நாள் காரைதீவுக் குக் கூட்டிச் செல்லப்பட்ட 25 இளம் ஆண்களும் பின்னர் காணப்பட வில்லை. இரண்டு நாட் களில் 62 பொதுமக்கள் இராணுவத்தால் கொல் லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)

# துறைநிலாவணை படுகொலை 12.08.1990

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை உதவி அரசாங்க அதிபா் பிரிவில் துறைநிலாவணைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயத்தினையும், மீன்பிடியினையும் தமது பிரதான தொழிலாகக் மேற்கொண்டு வருகின்றாா்கள்.

12.08.1990 அன்று காலை நீலாவணை, கல்லாறு இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினா் துறைநிலாவணைக் கிராமத்தினைச் சுற்றிவளைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டாா்கள். இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வயது வேறுபாடின்றி வீடுகளிலிருந்தவா்களும் வீதியாற் சென்றவா்களுமாக அறுபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தாா்கள். பல பொதுமக்கள் காயமடைந்தாா்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இளையதம்பி மனோகரன் -
02. இராசதுரை சிவானந்தராஜா - 27
03. நவரட்ணகா சுமதி - 28
04. நல்லதம்பி செல்வராசா - 35
05. கந்தையா சிவானந்தன் -
06. கந்தக்குட்டி சுப்பிரமணியம் - 40
07. கந்தக்ளகுட்டி திலகநாதன் - 20
08. கணேஸ்தாஸ் சதாசிவம் - 25
09. கண்மணி கிருபாகரன் - 21
10. பூபாலப்பிள்ளை நிமலநாதன் - 21
11. பாக்கியவதி அப்புத்துரை - 35
12. பழனிவேல் பாக்கிராசா - 28
13. வைரமுத்து உதயராஜா - 20
14. வைரமுத்து செல்வராசா - 15
15. வைரமுத்து சுதாகரன் - 20
16. தம்பியப்பா நவரத்தினமூர்த்தி - 28
17. தம்பிமுத் து அழகம்மா 33
18. தட்சணாமூர்த்தி சுதாகரன் - 20
19. தினேஸ்குமாா் உதயகுமாா் - 18
20. தங்கராசா ஆறுமுகம் - 40
21. மகாலிங்கம் தம்பியப்பா - 35
22. மாணிக்கம் குழந்தைவேல் - 38
23. மகேஸ்வரன் சுதாகரன் - 24
24. அ.ரவிச்சந் திரன் -
25. அழகுதுரை கிருஸ்ணபிள்ளை - 40
26. அழகையா கமலநாயகி - 23
27. பொன்னம்பலம் சின்னவன் - 28
28. பெரியதம்பி இராசலட்சுமி - 20
29. செம்பன் கதிரேசு -
30. வேலுப்பிள்ளை பாக்கியநாதன் - 28
31. ச.சிவமோகன் - 18
32. சுந்தரம் கனகசபை - 38
33. சாமித்தம்பி சிவஞானமூர்த்தி -
34. சதாசிவம் சுகுமாா் - 22
35. சின்னத்தம்பி மகேஸ்வரி - 28
36. சின்னத்தம்பி செல்லத்துரை -
37. சின்னமுத்து அன்னம்மா - 45
38. சிவஞானமூர்த்தி சரோசினி - 14
39. சிறிதரன் சிறிகாந்தராஜ் -
40. வடிவேல் சந்திரகுமாா் - 28



41. விஜயபால குணபால -
42. விஸ்வலிங்கம் லூத்துமேரி - 21
43. வீரமலை சுவீராஜன் - 23
44. வீரமலை சண்முகதாசன் - 25
45. ரத்தினம் சுவேந்திரன் - 20
46. ரவிக்குமாா் ராஜபுத்திரன் - 18
47. வேலுப்பிள்ளை பேரின்பநாயகி - 21

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# ஏறாவூர் வைத்தியசாலை படுகொலை 12.08.1990

11.08.1990 அன்று இராணுவத்தினா் செங்கலடி, கிரான் போன்ற கிராமங்களைச் சுற்றிவளைத்து மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தாா்கள். இராணுவத்தினரின் துப்பாக்கி பிரயோகத்தினால் காயமடைந்தவா்களில் பத்துப் பேரிற்கும் மேற்பட்டவா்கள் ஏறாவூா் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தாா்கள்.

12.08.1990 அன்று இரவு 11.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து ஏறாவூா் வைத்தியசாலையிற் சிகிச்சைபெற்று வந்த பொதுமக்கள் பத்துப் பேரையும் வைத்தியசாலையினுள் வைத்தே வெட்டியும் சுட்டும் படுகொலை செய்தாா்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கோராவெளி, ஈச்சையடித்தீவு படுகொலை 14.08 1990

கோராவெளி, ஈச்சையடித் தீவுக் கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் இயற்கை வளம் நிறைந்த விவசாயக் கிராமங்களாகும். மக்கள் நெற்செய்கை மரக்கறிப் பயிர்ச்செய்கை போன்றவற்றில் ஈடுபட்டு வந்ததுடன், தங்களது கிராமத்திற்குரிய தனித்துவமான கலைகளையும் வளர்த்து வந்தாா்கள். கோராவெளிக் கிராமத்தில் இந்து மதத்தவா்களின் பிரசித்திபெற்ற கோராவெளி அம்மன் ஆலயமும் அமைந்துள்ளது.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. இராணுவத்தினரும் சிங்கள-முசுலிம் குழுக்களும் மக்கள் மீதான தாக்குலை நடத்தி வந்தனா்.

14.08.1990அன்று நண்பகல் செங்கலடி, கல்லடி இராணுவ முகாம்களிலிருந்து வந்த இராணுவத்தினா் கோராவெளி, பச்சையடித் தீவு கிராமங்களைச் சுற்றிவளைத்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினாா்கள். இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீடுகளிலிருந்தவா்கள், வீதிகளிற் சென்றவா்கள், வயல்களில் வேலை செய்துகொண்டிருந்தவா்கள் எனப் பதினைந்து போ் உயிரிழந்தாா்கள். இருபத்தைந்து போ் காயமடைந்தாா்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மைலந்தனைப் படுகொலை 09.08.1992



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாக மைலந்தனை, புனானைக் கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்கின்ற மக்கள் பிரதான தொழிலாக விவசாயத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள்.

புனானை, மைலந்தனை போன்ற கிராமங்கள் புனானை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் அடிக்கடிசுற்றிவளைக்கப்படுவதும், பொதுமக்கள் தாக்கப்படுவதும் வழக்கமாக இருந்தன.

09.08.1992அன்று அதிகாலை புனானை, மைலந்தனைக் கிராமங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுப் பொதுமக்கள் மிக மோசமான முறையில் கத்தி, வாள், பொல்லு போன்றவற்றினாற் தாக்கப்பட்டார்கள். இராணுவத்தினர் துப்பாக்கிகளினாலும் சுட்டார்கள்.
இவ்வாறு இராணுவத்தினரின் தாக்குதலால் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# அக்சன் பார்ம் தன்னார்வ நிறுவனப் படுகொலை 05.08.2006




இலங்கையின் கிழக்குமாகாணத்திலுள்ள திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேசங்களில் ஒன்றே மூதூர் ஆகும். இங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை அரசு இப்பிரதேசத்திலுள்ள மாவிலாறு அணையைத் திறப்பதற்கான யுத்தம் ஒன்றை 2006ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ஆரம்பித்திருந்தது. இலங்கை அரசு தமிழர் பகுதிகள் மீது விதித்து வந்த பல்வேறு பொருளாதாரத் தடைகள், நெருக்கடிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களையும் நடாத்திய மக்கள் இறுதியில் மாவிலாறு அணைக்கட்டை பூட்டிவிட்டார்கள். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாத இலங்கை அரசு தனது படைகளை ஏவி மாவிலாறு அணைக்கட்டை திறக்க முயற்சித்தது. இலங்கைத்தீவில் 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் கவனத்திற்கொள்ளாது தமிழர் பிரதேசம் மீது யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டது. இதற்கு பதில் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப் புலிகளும் மூதூர் பகுதி இராணுவ நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். விடுதலைப்புலிகள் மூதூர் பகுதி இராணுவ நிலைகளை தகர்த்துவிட்டு தமது பழைய நிலைகளில் மீண்டும் நிலைகொண்டனர். இதன பின்னர் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05ஆம் நாள் மூதூர் பகுதிக்குள் நுழைந்த இலங்கை அரச படைகள் அப்பகுதி மீது தமது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டனர். அங்கு மக்கள் பலர் இராணுவத்தினராற் கொல்லப்பட்டனர். இதன் ஓர் அங்கமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான பல்வேறு உதவிகளையும் செய்து வந்த. "Action Contre La Faim" எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் பணியாளர்கள் 17பேரை அப்பிரதேசத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் கோரமான முறையில் படுகொலை செய்தனர்.

"Action Contre La Faim" நிறுவனமானது பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டது. இந்நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை வழங்கும் நோக்கில் திருகோணமலை, மூதூரில் தமது அலுவலகத்தை அமைத்துச் செயற்பட்டுவந்தது. மூதூர்ப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிக் கொண்டிருந்த வேளை அவர்களது அலுவலகத்திற்குள் வைத்தே, அவர்களது நிறுவனச் சீருடையில் இருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்களில் நான்கு பேர் பெண்களாவர். ஒருவர் முஸ்லிம சமூகத்தைச் சேர்ந்தவர். இச்சம்பவத்தில் 17 பணியாளர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை இராணுவத்தினர் குழிதோண்டிப் புதைத்துள்ளனர். சடலங்களை மீட்டு பரிசோதித்த போது இப்பணியாளர்கள் ஒவ்வொருவரது உடலிலும் 20 வரையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இப்படுகொலையுடன் இலங்கை அரசே தொடர்புபட்டுள்ளது என்பதற்கு அப்பகுதி மக்களும், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் அறிக்கையும் சாட்சியங்களாகும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)
01. றிச்சட் அருள்ராஜ், 24
02. சிவபாலன் றோமிலா, 25
03. சிங்கராசா பிறீமஸ் ஆனந்தராசா, 34
04. சக்திவேல் கோணேஸ்வரன், 24
05. செல்லையா கணேஸ், 54
06. கணேசு சிறிதரன், 36
07. யோகராசா கோடீஸ்வரன், 31
08. அம்பிகாபதி ஜெயசீலன், 31
09. அப்துல் லத்தீன் மொகமட் ஜப்பா, 31
10. முத்துலிங்கம் நர்மதன், 24
11. கணேசு கவிதா, 27
12. மாதவராசா கேதீஸ்வரன், 36



13. ஐ.முரளிதரன்,35
14. வைரமுத்து கோகிலவதனி, 29
15. கனகரட்ணம் கோவர்தனி, 28
16. பி.பார்த்தீபன், 27
17. ரவிச்சந்திரன் றிசிகேசன், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)
















**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.**
**நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்**
**உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு**
**தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 15 பொதுமக்கள் படுகொலை 08.08.2006

திருகோணமலை மாவட்டத்தின் தெற்கில் உள்ள மூதூர் கிழக்கில் உள்ள நல்லூர் மற்றும் ஊபுரல் கிராமங்கள் மற்றும் தெற்கில் உள்ள ஒவ்வொருசிலம்பத்து கிராமங்கள் மீது ஞாயிற்றுக்கிழமை சிறீலங்கா இராணுவம் மற்றும் சிங்கள கடற்படையினர் நடத்திய பீரங்கி குண்டுகள் தாக்கியதில் குறைந்தது 15 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 20 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15 மணியளவில் இடம் பெற்றது.







திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் உள்ள பல கரையோர கிராமங்களில் ஊபுரல் மற்றும் நல்லூர் ஆகியவை அடங்கும்.

சிவில் சமூகத்தினர் இந்தக் கிராமங்களுக்குச் சென்று சிறிலங்கா அரச படையினரின் பயங்கர பீரங்கித் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களை சேகரித்துள்ளனர்.

மேலும் விவரங்கள் தெரியவில்லை.

# கதிரவெளி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் சிறீலங்கா படைகளின் தாக்குதலில் 50 பொதுமக்கள் படுகொலை – 10.08.2006

கதிரவெளி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில், ஆயிரக்கணக் கான பொதுமக்கள் இன்னும் அப்பகுதிகளை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த நிலையில், வியாழன் காலை, இலங்கைப் படைகளின் வான்வழி குண்டு வீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் குறைந்தது 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சிறீலங்கா இராணுவம் கல்லாறு முகாமில் இருந்து மாவிலாறு மதகு நோக்கி ஆயிரக் கணக்கான துருப்புக்களை உள்ளடக்கிய ஒரு புதிய தாக்குதலை ஆரம்பித்தது, அதே நேரத்தில் ஈசிலம்பத்து மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கண்மூடித்தனமான வான்வழி மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியது.

மட்டக்களப்புக்கு வடக்கே சுமார் 70 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கதிரவெளி பகுதியில் குறைந்தது பதினைந்து பொதுமக்களின் சடலங்கள் காணப்படுவதாக சிவில் வட்

# முகமாலையில் 8 பொதுமக்கள் சிறீலங்கா படையினரின் பீரங்கித் தாக்குதலில் படுகொலை – 12.08.2006

கதிர்காமம் இந்து கோவிலுக்கு மத யாத்திரை சென்று திரும்பிய 7 யாழ்ப்பாணப் பொதுமக்கள் முகமாலை சோதனைச் சாவடியிலிருந்து வடக்கே பின்வாங்கிய சிறீலங்கா இராணுவத்தின் படையினரின் பீரங்கித் தாக்குதலில் கொல்லபபட்டனர் - யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் சமூக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெள்ளிக்கிழமை மாலை கதிர்காமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த 48 சிவிலியன் யாத்திரீகர்களுடன் சென்ற பேருந்தை சிறீலங்கா இராணுவத்தினர் தடுத்துள்ளனர். நான்கு பயணிகள் தங்கள் சோதனைச் சாவடிகளில் இருந்து வெளியேறும் போது சிறீலங்கா துரப்புக்களின் பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதல்களில் இருந்து தப்பினர். காயமடைந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் சனிக்கிழமை மீட்டனர்.

"சண்டை வெடித்ததால் நாங்கள் எல்லா திசைகளிலும் பரவினோம்," என்று உயிர் பிழைத்தவர் சுப்பிரமணியம் பாக்கியலட்சுமி, 65, கூறுகிறார்.

துருப்புப் படையினர் விடுதலைப் புலிகளுடன் பீரங்கி சண்டையில் ஈடுபட்டதால் பயணிகள் சாலையோரம் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்னர் செக்போஸ்ட்டில் இருந்த சிப்பாய்கள் செக்போஸ்ட்டில் இருந்து வெளியேறினர், செக்போஸ்ட்டில் சிக்கித் தவித்த பொதுமக்களை கவனிக்காமல் விட்டுவிட்டனர் என்று உயிர் பிழைத்தவர்களில் ஒருவர் கூறினார்.

பாக்கியலட்சுமி மற்றும் 3 பேர் அருகில் உள்ள கழிவறைக்கு பின்னால் சென்று மறைந்தனர். பின்னர், அந்தப் பகுதியிலிருந்து வெளியேறும் போது இலங்கைப் படையினர் துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் குண்டுகளை வீசினர்.

"இன்று காலை புலிகள் வரும் வரை இரவு முழுவதும் நாங்கள் அங்கேயே சிக்கிக் கொண்டோம்," என்று அவர் கூறுகிறார்.

பாக்கியலட்சுமியின் கூற்றுப்படி, ஷெல் தாக்குதலில் குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டனர். மற்றவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை, என்கிறார்.

கைதடியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவசுப்பிரமணியம், 61, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நடராசா இந்திரன், 51, மற்றும் துரைராஜா தவமணி, 68, ஆகிய மூவர், முகமாலை சோதனைச் சாவடியில் உள்ள கழிவறைக்குப் பின்னால் சிக்கி, சனிக்கிழமை மீட்கப்பட்டனர்.



சுப்பிரமணியம் பாக்கியலட்சுமி, 64



துரைராஜா தவமணி, 68



ஆறுமுகம் சிவசுப்பிரமணியம், 61



நடராசா இந்திரன், 51

# நெடுங்கேணி – சமளங்குளம் படுகொலை 08.08.2006






இலங்கையின் வடபகுதியில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேசமே நெடுங்கேணி ஆகும். இப்பகுதிகளில் அண்மைக்காலத்தில் இலங்கை இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினரால் பல்வேறுபட்ட தாக்குதல்கள் பொதுமக்கள்மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதியினை நொடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையே வழங்கிவருகின்றது. பெரிதளவிலான வசதிகளைக் கொண்டிராத இம்மருத்துவமனை பாரியளவில் பாதிப்பிற்குள்ளான நோயாளர்களை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றமை வழமையானதே.

அவ்வாறே 2006 ஒகஸ்ட் 08ஆம் நாள் இரவு 7.00மணியளவில் நெடுங்கேணி வைத்திய சாலையிலிருந்து கர்ப்பிணித்தாய் ஒருவரை ஏற்றிச்சென்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு இரவு 10.00மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலை நோக்கி நோயாளர் காவுவண்டி என்ற தகவலை வழங்கும் ஒலியுடனேயே திரும்பிக் கொண்டிருந்தது. இவ்வாறு நோயாளர் காவுவண்டி நெடுங்கேணி வீதியில் உள்ள சமளங்குளம் பகுதியில் இரவு 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்த சமயம் இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் படையினரால் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் அவ்வாகனத்தில் பயணம் செய்துகொண்டிந்த வைத்தியர் ஜெயபாலினா அவரது மனைவி, தாதியர் இருவர் மற்றும் சாரதி ஆகிய ஐவரும் உயிரிழந்தனர்.

வைத்தியர்கள் மிகவும் பற்றாக்குறையான சூழ்நிலைகளிலேயே வன்னி வைத்திய சாலைகள் இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதுடன், நெடுங்கேணி சுற்றியல்கூறு வைத்தியசாலையில் ஒரேயொரு வைத்தியர் தான் கடமையாற்றுகின்றமையும் மிகவும் கவலைக்கிடமானதே.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. கதிர்காமத்தம்பி ஜெயபாலினா, 60
02. ஜெயபாலினா பொன்னம்மா, 52
03. ஜெகாநந்தன் நகுலேஸ்வரி, 32
04. இராஜலிங்கம் ஞானேஸ்வரி, 23
05. கோபாலசுந்தரம், 57

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)







# அல்லைப்பிட்டி செல்வீச்சு 13.08.2006

யாழ்ப்பாணத்தின் கரையோரமாக அமைந்திருக்கும் தீவுகளில் அல்லைப்பிட்டியும் ஒன்றாகும் சிறீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே அல்லைப் பிட்டிக்கு சமீபமாக சண்டை ஆரம்பித்ததும் மக்கள் அடைக்கலம் புகுந்த பிலிப்நேரி தேவாலயப் பக்கமாக இராணுவத்தினர் கண்ட படி சுட்டார்கள். இதில் பல எண்ணிக்கையானோர் இறந்ததாக கூறப்படுகின்றது.

இது இன்றுவரை பதிவுக்குட்படுத்தப்பட வில்லை. இந்த செல்தாக்குதல் சம்பவத்தைக் கண்ட பில்ப்நேரி தேவாலய பங்குத்தந்தை ஜிம் பிறவுணும் இராணுவத்தினரால் காணாமல் போகச் செய்யப்பட்டார். இந்தச் செல்தாக்குதலுக்கு ஆளான தன்னை இனம் காட்ட விரும்பாத இளம் பெண் ஒருவர் பின்பு இந் நிகழ்வு தொடர்பான தமது அனுபவம்பற்றி எழுதியுள்ளார்.

அந்த இரவின் நிகழ்வு தொடர்பாக வேறு பதிவுகள் இல்லாததால் அவரது பதிவு மிகவும் முக்கியமானது. அவரது கூற்றுப்படி எல்லா இடத்தையும் சுற்றி செல் விழுந்து வெடித்த வண்ணம் இருந்ததால் தாங்கள் மாட்டிக் கொண்டதாகநினைத்தார்கள். அவர்கள் பிலிப் நேர் தேவாலயத்தில் அடைக்கலமடைந்தனர். பின்பு சிறீலங்கா இராணுவத்தினர் தேவாலயத்திற்கு வந்து அவர்களை யாழ்ப் பாணத்திற்கு அழைத்துச் செல்வதாக வாக் குறுதி அழித்தனர். சிறீலங்கா இராணுவத் தினர் மக்களை கேடயமாக பாவித்து தமது முகாமுக்கு அண்மித்தும் அவர்களை கைவிட்டனர். எனவே மக்கள் செல்தாக்குதலுக்கு மத்தியில் மீண்டும் தேவாலயத்தை நோக்கிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இராணுவத்தின் நோக்கை மக்கள் உணர்ந்து கொள்ளும் வரை பலமுறை இராணுவத்தினர் இவ்வாறு நடந்துகொண்டனர். சில மணித்தியாலங்களுக்கு பிற்பாடு செல்தாக்குதல் நேரடியாக தேவாலயத்துக்கு வந்தது.

கடலிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இந்தநேரத்தில் பலர் இறந்துவிட்டார் கள். பெற்றோரை பிள்ளைகள் இழந்தனர். இந்த அக்கிரமத்தின் பின்பு உடல்களை மீட்பதற்கு அருட்தந்தை ஜிம் பிறவுணும் முயன்றபோது இராணுவம் அதையும் தடுத்தது. இன்றுவரை கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை பதிவுக்குட்படுத்தப படவில்லை. இந்தப் புத்தகத்தின் 71ம் பகுதியல் குறிப்பிடப்பட்ட 1990இல் இடம்பெற்ற பெரும் தொகையானோர் காணாமல் போன சம்பவத்தின் மையமாக இதே பிலிப்நேரி தேவாலயம் விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. யோகன் றொபேற், 41
2. மேரிமஞ்சுளா, 45
3. மெனிஸ், 19
4. மைக்கல், 55
5. நடராஜா, 60
6. தேவகுமார், 28
7. உதயகுமார், 35
8. டு.ஞானப்பிரகாசம், 70
9. ரமேஸ், 26
10. தேவநாயகி, 30

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வள்ளிபுனம் செஞ்சோலைப் படுகொலை 14.08.2006











முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பிரிவில் உள்ள வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 10ஆம் நாள் முதல் நடைபெற்ற பாடசாலை மாணவஉகளுக்கான அனர்த்த முகாமைத்துவ முதலுதவிப் பயிற்சி நெறியில் வன்னிப்பிரதேச கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். மாணவர்கள் பயிற்சி நெறியில் பங்குபற்றிக்கொண்டிருந்த வேளை இலங்கை வான்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 14 அன்று காலை 7.30 மணியளவில் காலைக் கடன்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவிகள் மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலினை மேற்கொண்டன. இக் குண்டுத்தாக்குதலில் 52 மாணவிகள் மற்றும் இரு பணியாளர்கள் உட்பட 54பேர் உயிரிழந்தனர். 130 மாணவிகள் படுகாயமடைந்ததுடன் பல மாணவிகள் சிறு காயங்களுக்குமுள்ளாகினர்.

படுகாயமடைந்தவர்களில் மூன்று மாணவியர்களுக்கு கால்கள் துண்டிக்கப்பட்டதுடன் மாணவி ஒருவர் கண் ஒன்றை இழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் மேலும் காயப்பட்ட மூன்று மாணவிகள் முல்லைத்தீவு வைத்தியசாலையினால் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.



சிறீலங்கா பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் உடனடியாக காயப்பட்ட மூன்று மாணவிகளையும் கைதுக்குள்ளாக்கினர். இறுதியாக மூன்று மாணவிகளும் விடுவிக்கப்பட்டு வன்னியிலுள்ள தமது வீட்டுக்குச்செல்ல விடுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களுள் காயமடைந்த ஒரு மாணவி வவுனியாவில் இறந்துவிட்டார். மற்றைய இரு மாணவிகளும் உடனடியாக கண்டி வைத்திய சாலைக்கு திரும்ப எடுத்துச் செல்லப்பட்டனர். சில மாதங்களின்பின் இரு மாணவிகளும் எங்கே தங்குகின்றார்கள் என்பதே மர்மமாக மாறியது அவர்களது பெற்றோர்கள் மட்டும் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப் படுகின்றனர். ஏறத்தாழ இரு வருடங்களாக எதுவித குற்றச்சாட்டுக்களுமின்றி இந்த இரு மாணவிகளது தடுத்துவைத்தலானது அவர்களது பெற்றோருக்கு விளங்கிக்கொள்ள முடியாததாகவே இருக்கிறது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. அருளம்பலம் யசோதினி, 18
02. பாலகிருஸ்ணன் மதினி, 18
03. சந்திரமோகன் நிவேதிகா, 17
04. சந்திரசேகரன் விஜயகுமாரி, 29
05. கனகலிங்கம் நிருபா, 17
06. கனகலிங்கம் நிருஷா, 17
07. கணபதிப்பிள்ளை நந்தினி, 18
08. கந்தசாமி குமாரசாமி, 48
09. கிரிதரன் டயானி, 16
10. குபேந்திரச்செல்வம் லிகிதா, 19
11. மகாலிங்கம் வசந்தராணி, 18
12. மகாலிங்கம் வென்சிடியூலா, 17
13. மார்க்குப்பிள்ளை கெலன்சுதாயினி, 18
14. முருகையா அருட்செல்வி, 18
15. முத்தையா இந்திரா, 18
16. நாகலிங்கம் கோகிலா, 19
17. நாகலிங்கம் தீபா, 19
18. நகுலேஸ்வரன் நிஷாந்தினி, 19
19. நல்லபிள்ளை நிந்துஜா, 18
20. நவரட்ணம் சாந்தகுமாரி, 18
21. நீலாயினார் நிவாகினி, 17
22. பத்மநாதன் கலைப்பிரியா, 18
23. புவனசேகரம் புவனேஸ்வரி, 17
24. இராசமோகன் கம்சனா, 19
25. இராசேந்திரச்செல்வம் மகிழ்வதனி, 18
26. இரவீந்திரராசா றம்ஜா, 18
27. ச. ஜெயரூபி, 20
28. சாந்தகுமார் சுகிர்தா, 19
29. சந்தனம் சத்தியகலா, 20
30. செல்வம் நிறோஜினி
31. சண்முகராசா பாவேந்தினி
32. சிவமயஜெயம் கோகிலா
33. சிவமூர்த்தி கார்த்திகா, 18
34. சிவானந்தராசா திவ்வியா
35. சிவசுப்பிரமணியம் வட்சலாமேரி, 20
36. சொலமொன் சிங்கராசா, 65
37. சுந்தரம் அனோஜா, 17
38. தம்பிராசா லக்சியா, 17
39. தம்பிராசா சுகந்தினி, 18
40. தம்பிராசா தீபா, 19
41. தமிழ்வாசன் நிவேதிகா, 18
42. தனபாலசிங்கம் பகீரதி, 19
43. தணிகாசலம் தனுசா, 19
44. தர்மகுலசிங்கம் கேமாலா, 18
45. தர்மராசா பிருந்தா, 17
46. தேவராசா சர்மினி, 17
47. திருநாவுக்கரசு நிரஞ்சுலா, 18
48. துரைசிங்கம் சுதர்சினி, 17
49. துரைசிங்கம் திசானி, 18
50. உதயகுமாரன் கௌசிகா, 19
51. வைரமுத்து கிருத்திகா, 19
52. வரதராஜா மங்களேஸ்வரி, 17
53. வீரசிங்கம் றாஜிதா, 18
54. விஜயபவன் சிந்துஜா, 18
55. விவேகானந்தம் தட்சாயினி, 18
56. தம்பிமுத்து தயாழினி, 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)




















வைத்தியசாலை
HOSPITAL
PUTHUKKUDIYIRUPPU






JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# தொல்லியல் சுவடுகள்...

# இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள்!

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களால் வரையப்பட்ட ஓவியங்களே வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களாகக் கருதப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களை உலகெங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையிலும் பல பிரதேசங்களில் இதுவரை வரலாற்றுக்கு முற்பட்ட (54) இடங்களில் ஓவியங்கள் உள்ளன. இவை பாறை ஓவியங்கள் அல்லது கல் ஓவியங்கள் (Rock Art) எனப்படுகின்றன. இவ்வகை ஓவியங்கள் உள்ள முக்கியமான இடங்களாக...



## பில்லாவ வரலாற்றுக்கு முற்பட்ட கால பாறை ஓவியங்கள்.



கொனத்தேகொட கல்கே, பில்லேவ, ஆண்டியாகல, தந்திரிமலைக் குகைகள், தொரவக்கந்த குகை, கதுருபொக்குண குகை, பிகில்லேகொட, திம்புலாகல, அரங்கொட கல்கே, ரஜகல கன்த, கொனாகொல்ல தொறவக்க, பிஹில்லே கொட, கொனத்தேகொட கல்கே, புஞ்சிகிரி அம்மா கல்கே, உமாகே கந்த, ஹுலன்னுகே, அலுகல்கே, புது கல்கே, குடிம்பிகல, லிகினியாகல, மகுல் மகாவிகாரை, ஹக்பெலிகந்த, வெட்டம்பிகல, பியன்கல, ரஜகல, ஹுலுகல்கே, தொவக்கந்த, ஊராகந்த போன்ற இடங்களாகும்.

## தொரவக்கை வரலாற்றுக்கு முற்பட்ட கால பாறை ஓவியங்கள்



## கதுறுப்பொக்குண, ஆண்டியாகலை, பில்லாவை, தந்திரிமலை வரலாற்றுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள்.

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்களை தொல்பொருள் ஆய்வாளர் எச்.சீ.வீ. பெல் என்பவரே முதன் முதலில் கண்டுபிடித்தார். இவர் 1897 இல் கொனத்தேகொட கல்கேயில் வேடுவர்களால் வரையப்பட்டவை என்று கூறியுள்ளார். 1910 ஆம் ஆண்டு ஜோன் ஸ்டீல் அவர்களால் வட மத்திய மாகாணத்தில் பில்லேவ, ஆண்டியாகல, தந்திரிமலைக் குகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1917 இல் P.F.R.பிறெளனின் என்பவரால் தொரவக்கந்த குகைகளில் உள்ள கற்பாறையைக் குடைந்து வரையப்பட்ட ஓவியங்களும் (Engraving) பல்வேறுபட்ட குறியீடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. சிரான் தெரணியகல என்பவரால் 1950 இல் கதுருபொக்குண குகையில் பலவித விலங்குருவங்கள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி ஆய்வாளர்களின் கருத்துகளுக்கு அமைவாக இவை கற்கால வேடுவர்களால் அல்லது வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்களால் வரையப்பட்டவையாகும். பெல் மற்றும் இசெட் செலிக்மான் அம்பாறை மாவட்டத்தில் பிகில்லேகொட வேடுவர்களுடனும் 1910 இல் ஜோன் ஸ்டீல் தந்திரிமலை பகுதி வேடுவர்களுடனும் கலந்துரையாடி இவ் ஓவியங்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்துள்ளனர்.



Figure 1

A scene of the painted cave at *Konattegodagalge* (*after* Bell 1907).

அதிகளவான குகைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய ஓவியங்கள் காணப்பட்டதாகப் பதிவாகியுள்ள போதிலும் தற்போது பெரும்பாலான ஓவியங்கள் சிதைவடைந்ததுமுள்ளன. அல்லது மனிதர்களின் செயற்பாடு காரணமாக சிதைவடைந்த வண்ணமுள்ளன. அவற்றுள் நல்ல நிலையில் உள்ள ஓவியங்கள் ஒரு சில இடங்களில் அதாவது பில்லேவ, தந்திரிமலை, தொரவக்கந்த, வெட்டம்பிகல ஆகிய இடங்களில்

# தந்திரிமலை வரலாற்றுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள்.



காணப்படுகின்றது.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் (01) இயற்கை தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்தும் உருவங்கள், (02) இயற்கை தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்தாத உருவங்கள் ஆகியவையாகும். இவற்றுள் முதலாம் வகையைச் சேர்ந்த உருவங்களாக யானை, மரை, மான், சிறுத்தை, உடும்பு போன்ற விலங்குகளின் உருவங்கள் காணப்படுகின்றன. குறித்த உருவினால் காட்டப்படுவது யாது எனத் தெளிவாக இனங்காண முடியாத குறியீட்டு ரீதியான உருவங்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவையாகும். இந்த உருவங்கள் மூலம் ஆதி மனிதனின் வாழ்க்கை முறை தொடர்பான விடயங்கள் காட்டப்படுகின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியங்களுள் கதுறுப்பொக்குண, ஆண்டியாகலை, பில்லாவை, தொரவக்கை, தந்திரிமலை போன்ற ஓவியங்கள் முக்கியம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பில்லாவ பாறை ஓவியமானது வட மத்திய மாகாணத்தில் அனுராதபுர மாவட்டத்தில் பில்லாவ கற்குகை அமைந்துள்ளது. சிராண் தெரணியகல என்பாரால் 1951 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இக்குகையின் ஓவியங்கள் வர்ணங்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட கோட்டுச் சித்திரங்களைக் காணலாம். கலப்பு ஊடகங்களைக் கொண்டு வரையப்பட்ட சில சித்திரங்கள் காணப்படுகின்றன. ஜோன்ஸ்டில் என்பவரின் கருத்துப்படி இங்கு காணப்படும் முக்கியமான படைப்பு கட்டிடமொன்றினுள் (வீடொன்றினுள்) உள்ள இரண்டு மனித உருவங்களைக் கொண்ட ஓவியமாகும். இக்குகை ஓவியங்களில் யானை, மரை, மயில் உருவங்களும் சிறப்பானவை கேத்திரகணித குறியீடுகளைக்கொண்ட உருவங்களும் இவற்றில் அடங்கியுள்ளன.

அடுத்து, தொரவக்கைக் குகை கேகாலை மாவட்ட பெலிகல் கோரளையில் வரக்காப்பொளை நகரை அண்டிய மல்தெனியா எனும் பெருந்தோட்டத்தில் அமைந்துள்ளது. இது ஒன்றை மற்றொன்று தங்கியுள்ளது போன்று ஏறத்தாழ 1500 அடி உயரமான பாரிய மலைக்குன்றுகளிரண்டினாலான இயற்கையான ஒரு கற்குகையாகும். G.M.R.புரோவியனர் என்பவர் 1919 இல் கண்டுபிடிக்கையில் நிலத்திலிருந்து 61/2 அடி உயரத்திலேயே ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்தது. இவ் ஓவியங்கள், கோடுகளால் வரைந்தும், கரண்டியும் ஆகிய இரண்டு முறைகளிலும் வரையப்பட்டவையாகின்றன. இந்த குகைச் சித்திரங்களுள் சிறப்பான படைப்பாக யாளையும், யானைக் குட்டியும் எனும் படைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. மீனும், மனித வடிவும், உடும்பு எனும் என்னும் முக்கியமான ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது. அத்தோடு சூரிய சந்திரனைக் காட்டும் சித்திரமொன்றும் உள்ளது.

அடுத்து, தந்திரிமலை குகை ஓவியங்கள் இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை எனக் கருதப்படுகின்றன. இப்படைப்புக்களும் வில்வித்தைக்காரன், ஒரு மிருகத்தின் முதுகின் மீது செல்லும் மனித உருவமும். கட்டிடமொன்றினுள் (வீடொன்றினுள்) மனித உருவங்களைக்கொண்ட சித்திரமும் வரலாற்றுக்கு முந்திய முக்கியமான படைப்புக்களாகக் கருதப்படுகின்றது, விலங்கு உருவங்களுள் உடும்பு“ எனும் உருவமும் சிறப்பானது.

நன்றி: தொகுப்பு- நெடுங்கேணி சானுஜன்



Figure 12

A cluster of 'man & elephant' compound in triplicated by different hands at the cave in *Hulannuge* (pic. by *author*).



Figure 5

Two parallel dotted lines drawn in the *Alugalge* cave in the Ampara District, probably signifying a meandering water flow (pic. by *author*).



Figure 6

A creature identified as a crocodile and a color patch painted in close proximity seen in the cave at *Hulannuge* in the Ampara District (pic. by *author*).



Figure 7

A rectangular structure filled with dots, probably depicting a natural water pool painted on the interior wall of *Alugalge* in the Ampara District (pic. by *author*).



Figure 8

A herd of elephants painted on the interior wall of the cave in *Vettambugala* (pic. by *author*).



Figure 9

A human figure depicting as carrying water drawn at the cave in *Hulannuge* (pic. by *author*).



Figure 11

A figure of a fish engraved at the cave in *Dorawakakanda* (pic. by *author*).



Figure 13

Some of the intricate designs painted on the interior wall at *Streepura* cave in Panama (pic. by *author*).



Figure 10

A man standing behind an animal, painted in cave number 1 in *Tantirimale* (pic. by *author*).




# அர்ஜுனாவும் இரும்பு மோதிரமும்!

20.07.2024

ஒரு கனேடிய நண்பர், அவர் ஒரு பொறியியலாளர், இரும்பு மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். அதற்குப் பின்னால் உள்ள கதையைச் சொன்னார். கனடாவில், கியூபெக் பாலம் 1907ஆம் ஆண்டு மனிதத் தவறுகளால் நொறுங்கி விழுந்தது. அதில் 75 தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள். அப்படி ஒரு தவறு இனிமேலும் நடக்க கூடாது என்ற சங்கல்பத்தோடு பொறியியலாளர்களுக்கான சத்தியப்பிரமாணம் ஒன்றைக் குறித்துச் சிந்திக்கப்பட்டது. ரொரான்டோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான பொறியியலாளர் Haultain ஹோல்டேய்ன் 1922ஆம் ஆண்டு பொறியியலாளர்களுக்கான தொழில்சார் சத்தியபிரமாணத்தை அறிமுகப்படுத்தினார். 1925ஆம் ஆண்டு அவருடைய மேற்பார்வையின் கீழ் பொறியல் பட்டதாரிகள் இரும்பு மோதிரம் அணிந்து சத்தியபிரமாணம் செய்து கொண்டார்கள். முதலாவது தொகுதி இரும்பு மோதிரங்கள் உடைந்து விழுந்த கியூபெக் பாலத்தின் இரும்புத் தூண்களில் இருந்து தயாரிக்கப்பட்டன.



இது கனேடியப் பொறியியலாளர்களுக்கான பொறுப்புக்கூறல் சம்பந்தப்பட்ட ஒரு விடயம். மருத்துவர்களுக்கும் அவ்வாறு உலகளாவிய "ஹிப்போகிரடிஸ் ஒத்" என்று அழைக்கப்படும் சத்தியப்பிரமாணம் உண்டு.



பொறுப்புக்கூறல் எனப்படுவது மருத்துவத் துறைக்கும் பொறியியல் துறைக்கும் மட்டுமல்ல எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். ஒரு சமூகப் பிராணியாக இருக்கும் மனிதர்கள் அனைவருக்கும் அது பொருந்தும். மருத்துவர் தவறுவிட்டால் உயிர் போகும் உறுப்புகள் போகும். பொறியியலாளர் தவறுவிட்டால் பாலம் இடிந்து விழும் அல்லது கட்டடம் இடிந்து விழும் உயிர் போகும் உறுப்புகள் போகும் சொத்துக்கள் போகும். ஆசிரியர் தவறுவிட்டால் ஒரு தலைமுறையின் எதிர்காலம் நாசமாகும். தலைவர்கள் தவறு விட்டால் ஒரு நாடு அழிந்து போகும். எனவே மனிதத் தவறுகளுக்கு மனிதர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

சமூகத்தின் மிகச்சிறிய அலகாகிய குடும்பத்துக்குள் குடும்ப அங்கத்தவர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். நிறுவனங்களுக்குள் கட்டமைப்பு சார்ந்து, தொழில் தர்மம் சார்ந்து, பதவிவழி சார்ந்து, பொறுப்புக்கூற வேண்டும். தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். ஆகக் குறைந்தது எல்லா மனிதர்களும் தங்களுடைய மனச் சாட்சிக்காவது பொறுப்புக் கூற வேண்டும்.

மருத்துவர் அர்ஜுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பை அதிகப்படுத்தியுள்ளார். மருத்துவத் துறை சார்ந்தவர்கள் சமூகத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிர்ப்பந்தங்களை அவர் அதிகப்படுத்தியுள்ளார். அவர் எப்பொழுதும் நேரலையில் தோன்றினார். அப்பாவித்தனமாகவும் வெகுளித்தனமாகவும் தனக்குச் சரியெனப்பட்டதை நேரலையில் கூறினார். அவரிடம் உள்ள அப்பாவித்தனமும் தன்னைத் தற்காத்துக் கொள்ளாத துணிச்சலும் கலகக் குணமும் அவரை மக்களுக்கு நெருக்கமானவர் ஆக்கின. அதேசமயம் அந்த அப்பாவித்தனமும் அவசரமும் நிதானமின்மையும் பக்குவமின்மையும் ஊடகங்கள் முன் அவரை சிலசமயம் பலவீன மானவராகவும் காட்டின.



சுகாதாரத்துறை தொடர்பாக அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை வெவ்வேறு ஊடகவியலாளர்கள் ஏற்கனவே முன்வைத்திருக்கிறார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த மு.தமிழ்ச்செல்வன் அதுதொடர்பாக கட்டுரைகள் எழுதியிருந்தார். ஆனால் அர்ஜுனா இதில் எங்கே வேறுபடுகிறார் என்றால், அவர் அந்த சிஸ்டத்துக்குள் இருந்துகொண்டே அந்த சிஸ்டத்தைக் கேள்வி கேட்கின்றார் என்பதுதான். அதுதான் அவருக்கு கிடைத்த கவர்ச்சி.

அந்தக் கவர்ச்சியை அவர் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வாரா இல்லையா அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை எத்தகையது; அவருடைய தனிப்பட்ட சுபாவம் எத்தகையது... போன்ற எல்லா விடயங்களுக்கும் அப்பால், அவர் எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு துறைசார் உயர் அதிகாரிகள் பதில் கூறுவதே பொருத்தமானது. ஏனெனில் அர்ஜுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். மருத்துவத்துறைக்கு அது தொடர்பில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்ச் சமூகத்தில் கிராமவாசிகள் அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகள் என்று அழைப்பார்கள். அங்கு மருந்தும் சிகிச்சையும் இலவசமாக தரப்படுகிறது என்று பொருள். ஆனால் அவை மெய்யான பொருளில் தர்மாஸ்பத்திரிகள் அல்ல. அங்கே வேலை செய்யும் மருத்துவர்கள் உட்பட அனைவரும் சம்பளம் வாங்குகிறார்கள். அந்தச் சம்பளம் மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் இருந்து திரட்டப்படுவது. அங்கு வழங்கப்படும் இலவச மருந்தும் சிகிச்சையும் கூட மக்களுடைய வரிப் பணம் தான். எனவே அங்கே யாரும் யாருக்கும் தானம் செய்ய வில்லை. யாரும் யாரிடமும் தானம் பெறவும் இல்லை.






ஆனால் வாங்கும் சம்பளத்துக்கு மேலதிகமாக தமது தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்கள் அநேகர் உண்டு. தாம் பொறுப்பேற்ற நோயாளியை காப்பாற்றுவதற்காக ஊண் உறக்கமின்றி சேவை புரியும் மருத்துவர்கள் உண்டு. தனியார் மருத்துவமனைக்குப் போகக்கூடாது என்பதனை ஒரு தவம் போல கடைப்பிடிக்கும் மருத்துவர்கள் உண்டு. தனியார் மருத்துவத் துறைக்கு போனாலும் அங்கே நோயாளியின் நிதி நிலைமையைக் கருத்தில் எடுத்து காசு வாங்காத மருத்துவர்கள் உண்டு. வாங்கிய காசை உண்டியலில் சேகரித்து தானம் செய்யும் மருத்துவர்கள் உண்டு. எனவே அர்ஜுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் மருத்துவர்களுக்கும் பொருந்தாது. போர்க்காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கு அது பொருந்தாது. பெருந்தொற்றுநோய் காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கு அது பொருந்தாது. இப்பொழுதும் தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்களுக்கு அது பொருந்தாது.

அரச மருத்துவமனையை தர்மாஸ்திரியாக பார்க்கும் மக்கள் அங்கு மருத்துவர்கள் தாதியர்களும் தாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு தர்மமாக இல்லை எனும் பொழுது அதிருப்தி அடைகிறார்கள், கோபமடைகிறார்கள். குறிப்பாக தனியார் மருத்துவத் துறை மீதான விமர்சனங்கள் அந்தக் கோபத்தை அதிகப்படுத்துகின்றன. அந்தக் கோபங்களை கேள்விகளை அதிருப்தியை அர்ஜுனா குவிமயப்படுத்தினார். அதனால்தான் சாவகச்சேரியில் அத்தனை மக்கள் திரண்டார்கள். சில நாட்களுக்கு முன் சம்பந்தரின் அஞ்சலி நிகழ்வில் திரண்டதைவிட அதிக தொகையினர் ஒரே நேரத்தில் திரண்டார்கள்.

அர்ஜுனா எப்பொழுதும் நேரலையில் தோன்றினார் அதுதான் அவருடைய பலம். பின்னர் அதுவே அவருக்கு பலவீனமாகவும் மாறியது. அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகளாக கருதும் ஒரு சமூகத்தின் மத்தியில் மருத்துவர்களுக்கு உயர்வான பவித்திரமான ஒரு இடம் உண்டு. பொதுவாக மருத்துவர்கள் அந்த பவித்திரமான ஸ்தானத்தை விட்டு வெளியே வர

விரும்புவதில்லை. ஆனால் அர்ஜூனா வெளியே வந்தார். பல மாதங்களுக்கு முன் கண்டாவளையைச் சேர்ந்த ஒரு பெண் மருத்துவர் வெளியே வந்தார். இப்பொழுது முகநூலில் சில மருத்துவர்கள் அவ்வாறு வெளியே வருகிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் விதிவிலக்கு. பொதுவான மருத்துவர் குணம் என்பது தனக்குரிய பவித்திரமான ஸ்தானத்தைப் பேணுவதுதான்.

ஆனால் அர்ஜூனா அப்படியல்ல. அவர் மருத்துவர்கள் தொடர்பாக தமிழ்ச் சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்ட பொதுவான பிம்பத்துக்கு வெளியே நிற்கிறார். நேரலை மூலம் அவர் சமூக வலைத் தளங்களில் கட்டியெழுப்பியிருக்கும் பிம்பமும் திடீர் வீக்கமாக இருக்கலாம். அவர் தன்னுடைய தனிப்பட்ட தவறுகளை, பலவீனங்களை சிஸ்டத்தின் மீதான விமர்சனங்களாக மாற்றுவதில் வெற்றி கண்டு விட்டார் என்ற ஒரு விமர்சனமும் உண்டு.

எனினும், அவர் சார்ந்த சிஸ்டத்தின் மீது அவர் எழுப்பியிருக்கும் கேள்விகள் விசாரணைக்குரியவை. திணைக்களம் சார்ந்த உள்ளக விசாரணைகள் உண்மைகளை வெளியே கொண்டு வரலாம். அல்லது ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அதை மணந்து கண்டுபிடிக்கலாம்.அர்ஜூனா எழுப்பிய கேள்விகள் தொடர்பாக உண்மைகளை புலனாய்ந்து வெளியே கொண்டு வர வேண்டிய துறைசார் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. அது ஊடகத்துறை சார்ந்த பொறுப்புக் கூறல்.

அதேசமயம் துறைசார் அரச உயர் அதிகாரிகள் அவர் எழுப்பிய கேள்விகள் தொடர்பாக மக்களுக்கு பதில்கூற வேண்டும். அதை விட முக்கியமாக அர்ஜூனா ஒரு பொறியைத் தட்டிப்போட்டதும் அது எப்படி சாவகச்சேரியில் தீயாகப் பரவியது என்பதற்குரிய சமூக உளவியலையும் தொகுத்து ஆய்வுசெய்ய வேண்டும். அர்ஜூனாவின் கலகம் வெற்றிடத்தில் இருந்து தோன்றவில்லை. அது ஏற்கனவே சமூக மட்டத்தில் பரவலாகக் காணப்பட்ட அதிருப்தி, கோபம், பயம், சந்தேகம் போன்றவற்றின் தொகுக்கப்பட்ட விளைவுதான். ஏற்கனவே பொதுப் புத்திக்குள் இருந்த பயங்களையும் கோபத்தையும் அதிருப்தியையும் அர்ஜூனா ஒருங்குவித்தார் என்பதுதான் சரி.

அர்ஜூனாவின் விமர்சனங்கள் விவகாரம் ஆகிய பின் சில நாட்கள் கழித்து யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஒரு குறிப்பை முகநூலில் போட்டார். அது போதனா வைத்தியசாலை மீதான விமர்சனங்களுக்குப் பதில் கூறும் நோக்கிலானது. ஆனால் அதற்கு கீழே வந்த கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், 500க்கும் அதிகமான கருத்துக்களில் 90 விகிதத்துக்கும் அதிகமானவை மருத்துவத் துறைக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைப்பவை. அதில் ஒரு செய்தியுண்டு. பொதுசன மனோநிலை ஏன் அவ்வாறு அதிருப்தியோடும் கோபத்தோடும் காணப்படுகின்றது?




ஒரு சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு துறைசார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பு அதிகரிப்பது நல்லது. ஒவ்வொருவரும் தொழில் சார்ந்தும் அறம் சார்ந்தும் குறைந்தது மனச்சாட்சிக்காவது பொறுப்புக்கூற வேண்டும். ஒரு மருத்துவர் கூறியது போல, பொது வைத்தியசாலைகளில் கழிப்பறைகளை பயன்படுத்துவதிலும் பொதுச்சொத்தை நுகர்வதிலும் பொதுமக்கள் எவ்வளவு தூரம் பொறுப்போடு காணப்படுகிறார்கள்? எல்லாப் பொது மருத்துவமனைகளிலும் கழிப்பறைகள் மோசமாகக் காணப்படுகின்றன. ஏன் அதிகம் போவான்? முருகண்டியில் கழிப்பறைக்குக் காசு வாங்கப்படுகின்றது. ஆனால் அந்தக் கழிப்பறையின் சுகாதாரச்சூழல் எப்படியிருக்கிறது? மேற்கத்திய சமூகத்தின் சமூகப் பொறுப்பை கண்டுபிடிக்கக் கூடிய இடங்களில் ஒன்று கழிப்பறைகள் ஆகம். அங்கே பொதுக் கழிப்பறைகள் சுத்தமாக இருக்கும். அது நலன்புரி அரசுக் கட்டமைப்பு. தவிர அங்கே கழிப்பறைகள் உலர்ந்தவை. ஆனால் நமது கழிப்பறைகளோ ஈரமானவை. எனவே எமது சூழலுக்கு ஏற்ப வித்தியாசமாகச் சிந்தித்து கழிப்பறைகளில் சுத்தத்தைப் பேண வேண்டும். ஆனால் பொதுக் கழிப்பறைகளை வைத்து ஒரு சமூகத்தின் பொறுப்புணர்ச்சியை மதிப்பிடலாம். எனவே பொறுப்புக்கூறல் எல்லாத் தளங்களிலும் உறுதி செய்யப்பட வேண்டும். பொது மக்களில் தொடங்கி அரசாங்கம் வரை அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை பொறுப்புக்கூறல் என்ற வார்த்தைக்கு அதிகம் பிரயோக அழுத்தம் உண்டு. அரசியல் அடர்த்தி உண்டு. 2015 ஆம் ஆண்டு ஜநாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலைமாறு கால நீதிக்கு உரியது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது. இனப்படுகொலைக்கு யாருமே இதுவரை பொறுப்புக் கூறவில்லை. இவ்வாறு அரசியல் அர்த்தத்தில் பொறுப்புக் கூறப்படாத ஒரு நாட்டுக்குள், அல்லது பொறுப்புக்கூற யாருமற்ற ஒரு நாட்டுக்குள், பொறுப்புக் கூறலை பன்னாட்டு நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டம், தனக்குள்ளும் அந்தந்தத் துறை சார்ந்து அல்லது ஆகக் குறைந்தது அவரவர் தமது மனச்சாட்சிக்காவது பொறுப்புக் கூறத்தானே வேண்டும்?

நன்றி: நிலாந்தன்



# கூட்டமைப்பை மீள் உருவாக்க வேண்டும்!

## கூட்டணியின் மாநாட்டில் சிவஞானம் சிறீதரன்!

21.07.2024



கூட்டமைப்பினை மீள உருவாக்க வேண்டும். அது தேர்தலுக்கான கூட்டமைப்பு என்பதைத் தாண்டி தேசத்துக்கான கூட்டமைப்பாக கட்டியெழுப்பப்பட வேண்டும், அதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் என சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றுகையில்.

கடந்த எட்டுத் தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்தமிழர்களின் சுதந்திரத்துக்காக, அவர்களின் இறையாண்மையை நிலைநிறுத்துவதற்காக, சிங்கள பௌத்த ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராக, இரத்தமும் சதையுமாக நடைபெற்று வருகின்ற போராட்ட வலியின் நீட்சியில் உருவான, ஈழத்தமிழர்களின் சுதந்திரத்திற்கான அரசியல் இயக்கங்களில் ஒன்றாகத் தன்னைக் கட்டமைத்துக் கொண்டுள்ளது தமிழ் மக்கள் கூட்டணி.

ஈழத்தமிழினத்தின் இறையாண்மைக்கு நீதிவேண்டி நாங்கள் மேற்கொள்ளும் அறவழிப் போராட்டங்களையும், அபிலாசை வெளிப்பாடுகளையும் சிங்கள தேசம் எப்போது புரிந்துகொள்ளத் தலைப்படுகிறதோ, அப்போதுதான் அர்த்தம் மிகுந்த இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும்.

அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பினையும், இனவாத நோக்கில் கட்டமைக்கப்பட்ட அதிகார பீடங்களின் செயல்முறைகளையும் நாங்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதில் தெளிவுற்றுள்ள போதும், அடிப்படை விருப்புகளைக் கோருகின்ற எமது அரசியல் உரிமையின் மீது போர் தொடுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை, 'தமிழ்த் தேசியம்' என்னும் ஓர் குடையின் கீழ் நின்று கூட்டாய் எதிர்க்கும் திராணியை உருவாக்குவதில் தான் ஈழத்தமிழினம் இன்று பெருந்தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

எட்டு தசாப்தங்கள் கடந்தும், நீர்த்துப்போகாத அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களின், அடிப்படை மற்றும் அரசியல் உரித்துகளை அங்கீகரித்து, அர்த்தமுள்ள அரசியல் அதிகாரப் பகிர்வின் மூலம் இனச் சமத்துவத்தை அங்கீகரிக்கின்ற, பொருளாதார சுபீட்சமுள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு, இலங்கை அரசு தொடர்ந்தும் தவறி வருகிறது என்பதை பிராந்திய மற்றும் சர்வதேச அரசுகள் உணர்ந்துகொள்ளும் காலமும் நேரமும் நெருங்கி வந்திருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

இத்தகையதோர் சாதகத்தன்மை மிக்க அரசியற் சூழமைவில் ஈழத்தமிழர்களின் குரலை, தமிழ்த்தேசியம் என்னும் இயங்கு தளத்தில் நின்று கூட்டுக் குரலாக ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமானது.

தமிழ்த்தேசிய அரசியலில் குறுகிய மற்றும் நீண்ட கால இலக்குகளைத் தீர்மானித்தல், சர்வதேச உறவுகளை மெய்நிலையில் வலுப்படுத்தல், இளைய தலைமுறை அரசியலாளர்களை வலுப்படுத்தல், மக்களை அரசியல்மயப்படுத்தல், மக்களின் உணர்ச்சியையும் திரட்சியையும் ஒரு புள்ளியில் சந்திக்க வைத்தல் உள்ளிட்ட அரசியற் செல்நெறிகளை செயலுருப்பெறச் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கூறிய அத்தனையையும், இனநலன் ஒன்றையே நோக்காகக் கொண்ட நல்ல தலைமைத்துவத்தால் மட்டுமே ஏற்படுத்த முடியும். வினைத்திறனான தலைமைப் பண்புகளுக்குள் இவை அனைத்தும் அடங்கும். இப்போது நம் இனத்துக்கு இருக்கும் மிகப்பெரிய இடைவெளி ஆதர்சனத் தலைமையற்ற தன்மையே.

சனத்திரட்சியை உருவாக்கக்கூடிய, ஜனவசியம் மிக்க, மிக நேர்த்தியான தலைமைத்துவத்தை யாராலும் சரியான முறையில் கொடுக்க முடியவில்லை. அல்லது அத்தகைய அணுகுமுறைகள் குறித்து சிந்திக்கவில்லை. ஆனால் அதற்கான களச் சூழலை உருவாக்க வேண்டியது காலப் பெரும் பணியாக எம்முன் உள்ளதை நாம் உணரத் தலைப்பட வேண்டும்.

நம் எதிரிகள் ஒரு காலத்தில் நம் தலைவர்களை அழித்தார்கள். இன்று தலைவர்கள் உருவாகுவதற்கான சூழலை அழிக்கின்றார்கள். பொது எதிரியை எதிர்கொள்வதற்காக எமக்குள் உள்ள எதிர்ப்புணர்வுகளை புறம்தள்ளி ஒரு பொதுவான அரசியல் இயக்கத்துக்குள் நாம் நிலமும் புலமுமாக இணைய வேண்டும்.

இந்தப் புள்ளியில் தான் யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்தவர்களாக, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தாது இன நலன்களை முன்னிறுத்தும் ஓர் கூட்டுத் தலைமையின் உருவாக்கம் குறித்தும், அத்தகைய நேர்கோட்டில் இயங்கும் ஒவ்வொரு கட்சிகளினதும் மரபார்ந்த தனித்துவங்களைப் பேணி ஒற்றுமைக்குள் வேற்றுமையும் வேற்றுமைக்குள் ஒற்றுமையும் காணுவது குறித்தும், கூட்டமைப்பை மீள உருவாக்குவது குறித்தும், அவ்வாறு மீளுருவாக்கம் பெறும் கூட்டமைப்பு என்பது தேர்தலுக்கான கூட்டமைப்பு என்பதைத் தாண்டி தேசத்துக்கான கூட்டமைப்பாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும், அதற்கு தமிழ்த் தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த மாநாட்டின் ஊடாக நான் அழைப்பு விடுக்கிறேன்.

இன்று தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றன. இங்கு தான் உரிமை அரசியலை சலுகை அரசியல் வெல்கிறது. இந்த நிலைமையைச் சீர்செய்ய தமிழ் தேசிய அரசியல் மறுசீரமைப்பு முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டும்.

இனத்துவ அரசியலை முன்னெடுக்கும் சமநேரத்தில், தேர்தல் அரசியலையும் எதிர்கொள்ள வேண்டிய தேவை எம்மிடத்தே திணிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல்கள் என்பதில் உள்ள அதிகார சபைகள் தேர்தல் - இளைய அரசியலாளர்களுக்கான பயில்களமாகவும் மாகாண சபைத் தேர்தல்கள் என்பது அறிவும் ஆற்றலும் மிக்க துறைசார் விற்பன்னர்களை பயன்கொள்ளும் களமாகவும், பாராளுமன்றத் தேர்தல் என்பது இனத்தின் அபிலாசைகளை சர்வதேச அரங்குக்கு கொண்டு செல்லும் விரும்பும் வாண்மைத்துவமும் மிக்க தலைவர்களுக்கான களமாகவும் அமைய வேண்டும். இந்த சிந்தனைத் தெளிவு கட்சி ரீதியாக கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இவற்றைத் தாண்டி, நிலத்தையும் புலத்தையும் நாம் உணர்ச்சிகளால் மட்டுமே பிணைத்து வைத்துள்ளோம். இது அறிவுமைய பிணைப்பாக மாறவேண்டும்.

இந்த விடயத்தில் உள்ள பலம் பலவீனங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய காலத்தேவை எழுந்துள்ளது. தமிழ்த்தேசிய அரசியலின் எதிர்கால நிலைத்திருப்பு நோக்கியும் தமிழினத்தினுடைய விடுதலை வேணவாக்களை முன்கொண்டு செல்வதற்கும் நிலத்திலும் புலத்திலும், தாய்த் தமிழகத்திலும் வாழ் தமிழர்கள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஈழத்தமிழர்கள் எவ்வாறு கொள்கை வேறுபாடுகளோடும் அரசியல் சித்தாந்த வேறுபாடுகளோடும் திசைவேறாக பிரிந்திருக்கிறார்களோ அதேபோன்றதொரு பிரிவினைகள் மிகுந்த நிலைதான் புலத்திலும் வேரோடியிருக்கிறது.

விடுதலை வேண்டிப் பயணிக்கும் எங்கள் இனம், தன் இலக்கை அடைந்துகொள்ளும் எதிர்காலப் பயணங்களில் இதனால் பல்வேறு நெருக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும்.

ஆழமாக நோக்கினால் ஈழத் தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் தொடர்ந்தும் தன் வல்லமைகள் அத்தனையையும் இழந்து கொண்டேயிருக்கின்றது. மாறாக எதையும் பெறவில்லை.

அது அரசியல் தீர்வாக இருக்கலாம். நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியாகவும் இருக்கலாம். கருதத்தக்க எதையும் சுதந்திரத்துக்குப் பின் எங்கள் இனம் பெறவேயில்லை.

இனத்தின் விடுதலை குறித்த சிந்தனைகள் வலுக்குன்றத் தொடங்கியிருக்கும் எங்களின் இரண்டாம் தலைமுறையினரிடத்தே, எங்கள் அறப்போர் குறித்த புரிதல்கள் குறுகியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடிய இந்த நாட்டின் ஜனாதிபதி, நாற்பது வயதுக்கு உட்பட்ட இளைய தலைமுறையினர் அரசியல் நாட்டமற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற கருத்தை மிக நாசூக்காக பதிவுசெய்திருந்தார்.

ஒருவகையில் பார்த்தால் அரசியற் தெளிவும் கொள்கைப் பிடிப்பும் மிக்க இளையோரை வழிப்படுத்துகின்ற, அரசியல் நெறிப்படுத்துகின்ற சமூகப் பொறுப்பிலிருந்து நாம் தவறிவருகிறோம் என்பதை உணர முடிகிறது.

ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் எவை என்ற கேள்வியை எங்கள் இளைய தலைமுறையை நோக்கி எழுப்பினால், நிலப்பறிப்பு, காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை என்கின்ற மூன்று தளநிலைகளுமே அவர்களால் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

ஆனால் அந்த மூன்று பிரச்சினைகளும் இனவிடுதலைப் போருக்கான களத்தைத் திறக்கவில்லை என்கின்ற பொதுப் புரிதல் இன்று எங்களிடத்தே இல்லை.

பலாலி விளிம்பு முதல் பொத்துவில் வரை தமிழர்களின் மரபுவழித் தாயகமாக எங்கள் வசமிருந்தபோதே எங்கள் இனத்தின் அறப்போர் ஆரம்பித்திருந்தது என்பதையும், மேற்சொன்ன காரணங்கள் அந்தப் போர் சார்ந்து பின்வந்த நாட்களில் வலிந்து திணிக்கப்பட்ட துணைக்காரணங்கள் தாம் என்பதையும் உணரத் தலைப்பட்டால் தான், இனவிடுதலைப் போரின் அறநிலை சார் அடுத்த களங்களை உருவாக்க முடியும்.

ஆகவே, கொள்கைரீதியாக ஒன்றுபட்டுச் செயற்படுகின்ற ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் அரவணைத்தவாறு புலம்பெயர் தேசக் கட்டமைப்புகளுடனும் இணைந்த வகையில் தமிழர்களின் தாகம் வெல்ல உழைப்பதே இங்குள்ள ஒவ்வொருவரினதும் முதன்மைக் கடமையாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

எமது சிந்தனைகளை மீள் வடிவமைப்புக்கு கொண்டு வருவதன் மூலம் காலத்தின் வேகத்துடனும், பூகோள மாற்றங்களுடனும் எமது மக்களின் அபிலாசைத் தளங்களிலிருந்து தடம்புரளாது பயணிக்க வேண்டியுள்ளது.

இந்த நெருக்கடிமிக்க சூழலை எளிதாகக் கையாள்வதாயின், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும், புலத்திலிருந்தவாறு இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் உறவுகளும் ஒருங்குசேர தம் அரசியற் பயணத்தை முன்கொண்டு செல்வதற்கான எதிர்கால வழிவரைபடம் ஒன்றையும் அதுசார் கொள்கை வகுப்புகளையும் உருவாக்க வேண்டும்.

அத்தகையதோர் தளத்தில் நின்று எல்லாத் தரப்பினரையும் இணைத்துச் செயலாற்றுவதன் தேவையுணர்ந்த ஒருவனாக, அந்தத் தளத்தின் இணைப்புப்பாலமாக இருந்து என் எல்லா இயலுமைகளைக் கடந்தும் ஈழத்தமிழினத்தின் அரசியல் வேட்கையைச் சுமந்த பயணத்தின் பங்குதாரராக செயலாற்றுவதில் எனக்கிருக்கும் விருப்பையும், கடமையையும் நான் இவ்விடத்தில் வெளிப்படையாகவே பதிவுசெய்து நிறைவுசெய்கிறேன் என மேலும் தெரிவித்தார்.









## REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

## Merchant Benefits

- **Website Template:** Modern design for improved user experience.
- **Personalized Marketing Tools:** Push notifications, personalized gift cards, and electronic flyers.
- **Convenient Payment Options:** EV gift wallet for seamless transactions.
- **Comprehensive Analytics:** Access full reporting and tracking online.
- **Customer Engagement:** Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- **Financial Security:** Build income for future sale or retirement.
- **One-time Registration Fee:** $199 to unlock these benefits.

And more...

## Member User Benefits

- **Point Accumulation:** Earn 4% to 60% on purchases.
- **Diverse Product Range:** Access everyday essentials and a wide variety of products and services.
- **Shopping Flexibility:** Enjoy convenience with both local and online shopping options.
- **Gift Card Rewards:** Benefit from gift cards and an EV gift wallet.
- **Simple Tracking:** Easily monitor progress with our user-friendly tracking system.
- **Networking Opportunities:** Build your own shopping network effortlessly.
- **Exclusive Privileges:** Gain mining rights worth $60.

And more...

## Register Now




WWW.MYEVERYDAYSHOPPING.COM



# தடைக் கற்கள்

அவள் என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டாள். அவளின் சின்னக்கருவிழிகள், நல்ல பசுந்தான அவள் முகம், அந்த முத்தான முகத்திற்கு அழகு கூட்ட வெள்ளிப் பிரேம் போட்ட கண்ணாடி, மிடுக்கான ஜீன்ஸ், இடுப்பிலே ஒரு பட்டை, இறுக்கமான சட்டை, "பாப்" பண்ணிய தலை, தோளிலே தொங்கும் ஒரு ஏ.கே... உண்மையில் பெண்ணென்று நம்ப மறுக்கும் தோற்றம்! ஆரம்பத்திலே சில தடைவைகள் நான் ஏமாந்து விட்டேன்.

"அக்கா... அக்கா... வாங்கோ அக்கா"

வீட்டுப் படலையடியில் யாரோ ஒரு பெண்ணின் குரல் கேட்கவே, விடியற்காலையில் உறக்கமும் விழிப்பும் சேர்ந்துவர, "ஓகானிக் கெமிஸ்றி" – யுடன் போராடிக்கொண்டிந்த நான், படலையடிக்கு விரைந்தேன். அவள் தான்! அவளேதான்! இவ்வளவு நாட்களாக நான் கதைக்க வேணுமெண்டு நான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த, பெயர் தெரியாத அந்தப் பெண் போராளிதான், எனக்கெதிரே நின்று முறுவலித்தாள்.

இண்டைக்குக் கொஞ்சம் பூவேணுமக்கா, படங்களுக்கு வைக்க வேணும். ஆஞ்சிடாமை மரத்திலை விட்டிடுங்கோ, பிறகுவந்து ஆயிறோம்".

நல்ல இனிமையான குரல்... செல்லமான சிணுங்கல். பாவம் இந்தக் கொட்டும் பனியிலும் இராணுவவேலிகள் வழியே ஊர்ந்துவிட்டு வருகிறாளோ? அவள் ஒரு மெழுகுதிரியாக எரிந்து கொண்டிருக்கிறாள் என்ற உண்மை என் உள்ளத்தைச் சுட்ட போது, அவள் என்னில் உயர்ந்து நின்றாள். என் ஊரவர்களை நினைக்க எரிச்சல் எரிச்சலாக வந்தது. அரசடியிலும், அம்மன் கோயில் வீதியிலும் செம்பாட்டு மண்ணை அளைந்து விளையாடி, ஊர்ப்புழுதியில் குளித்தெழும்பியவர்களில் பலர், நாடு நாடக அகதி அந்தஸ்த்துக்கோரும் நிலையில்... எங்கள் ஊர் மண்ணில் தவழாதவர்கள் – இந்த மண்ணுக்காகத் தங்கள் உதிரத்தைச் சொரிவதற்கும், உயிரைக் கொடுப்பதற்கும் ஓடிவந்துகொண்டிருக்கும் நிலையை நினைக்க, நினைக்க நெஞ்சு வெடித்துவிடும் போல இருந்தது.

"சரக்... சரக்..." என்ற மிலிட்டரி மிடுக்குடன் நடந்து செல்லும் அந்த காவல் தெய்வங்களை பக்தி உணர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

காலையில் தலையில் நாலு வாளி தண்ணீரை வாத்துவிட்டு பூப்பறிப்பதற்காகக் கூடையுடன் வந்து நிற்கும் என்னுடைய அப்பாவைக்காண எனக்கு எரிச்சல் எரிச்சலாக இருந்தது. சிவப்பு ரோஜா ஒன்றின் காம்பை, முரட்டுத்தனமாக முறிக்க முற்பட்ட அவரை நான் தடுத்தேன்.

"அப்பா... இண்டைக்குப் பூப்பறிக்காதையுங்கோ".

அப்பா என்னை எரிச்சலுடன்பார்த்தார். சாதாரணமாகவே அவர் பார்வையில் கடுமை இருக்கும்.

"வீரமரணம் அடைந்த போராளிகளின் படங்களுக்குப் பூவைக்க வேணுமாம்; காம்ப் அக்காமார் பூ வேணுமெண்டு வந்தவை – வார்த்தைகளை விக்கி விக்கிச் சொன்னேன்.

"என்ரை அப்பன் முருகனுக்கு காலம் புறவிலை பூக்கூடையை நிரப்பாட்டா என்ரை நெஞ்சு நிறையாது". சொல்லிக்கொண்டே அழகு சொட்டி நின்ற பூக்களை முரட்டுத்தனமாகப் பிடுங்கி எடுக்கத் தொடங்கிவிட்டார்.

என்னுடைய அப்பா ஒரு "பிரின்சிப்பல்".

உண்மையான தெய்வங்கள் யார் என்பது அவருக்கு இன்னும் விளங்கவில்லை.

"அப்பா... ஒரு நாலைஞ்சு பூவையாவது விட்டுவையுங்கோ. சொல்லிப்போட்டுப் போனதுகள் நம்பி வருங்கள். இங்கை பூவுகள் இல்லாவிட்டா, அதுகளின்ரை முகங்களைப் பாக்கேலா... ப்ளீஸ்" – நான் மன்றாடுகிறேன்.

"படிக்கிற உனக்கென்னத்துக்கு அவையளோடை கதை".

அப்பா சீறிச், சினந்து வெடி சுட்டுக் கொண்டிருந்தார். அவருடைய ஆக்கிரமிப்பு அதிகளவுக்குப் போய்விட்டது.

என்னுடைய அப்பா ஒரு பிரின்சிப்பல்...! சிரிப்பாக இருந்தது. ஏனென்றால் அப்பாவுக்காகவும் அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

அப்பா கோயிலுக்குப் போனபிறகு, தட்டத்தையும் எடுத்துக் கொண்டு தாரணி வீட்டிற்குச் சென்றேன். "மலர்ந்திருந்த மலர்களெல்லாம் மரணித்தவர்களுக்காகவே" என்ற உணர்வில், பனியில் நனைந்து மொட்டவிழ்ந்து நின்ற மலர்களை, சிவப்பு ரோஜாக்களைப் பறித்தேன். தட்டுடன் விரைந்து வந்து அவர்களின் வருகைக்காக வீட்டில் காத்து நின்றேன்.

"சரக்... சரக்... சரக்..."

அவர்கள்தான், அவள்தான் முதலில்!

"நாங்கள் ஆய்வோம் தானே அக்கா, என்னத்துக்கு உங்களுக்கு சிரமம்?"

"நீங்க எங்களுக்காகப் படுகிற சிரமங்களிலும் இது எவ்வளவு எவ்வளவோ மடங்கு சின்னன்..."

பட்டம் பெற்றிருந்தும் எவ்வகையிலும் பொருத்தமில்லாமல், போராட்ட சூழ்நிலையிலிருந்து முற்றும் மாறுபட்ட நிலையில் உள்ள என் தந்தைக்குமாக, இந்த மண்ணுக்காக எந்த நிமிடமும் மரணிக்கத் தயாராக இருக்கின்ற இளம் குருத்துக்களைக் காணக்காண எனக்குக் கண்கள் கூசின.

"என்னக்கா யோசிக்கிறியள்?"

"ஒன்றுமில்லை".

"என்னக்கா படிக்கிறியள்?"

"ஏ.எல்."

"நானும் ஏ.எல். படிச்சு, "பயோசயன்சிலை" நாலு சீயும் எடுத்துப் போட்டுத்தான் இயக்கத்துக்கு வந்தனான்".

நான் திகைத்தேன். "பயோ சயன்சிலை" நாலு "சீ" எடுத்தவள், ஊண்டிப் படிச்சிருந்தா என்ன மாதிரி வந்திருப்பாள்... அவளில் அன்பு சுரந்தது.

"உங்களுக்கு என்ன பேர்?"

"தேவராணி... இயக்கப் பெயர் பாரதி".

"பாரதி என்ற பெயரிலை எனக்கு நல்ல விருப்பம்".




"எனக்கும் தான். பாரதியாரின் பாட்டுக்களெல்லாம் புரட்சியானவை. தேச விடுதலைக்காகவும், பெண் அடிமை நிலையை ஒழிக்கவும் வீறுகொண்டெழுந்தவர். என்ரை அப்பா தான் இந்த இயக்கப் பெயரை எனக்கு வைச்சவர்..."

எனக்கு அதிசயமாக இருந்தது. பாரதியின் அப்பாவையும் என்னுடைய அப்பாவையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

"பாரதி... நீ அதிர்ஸ்டக்காரி, சுதந்திரத்துக்காகப் போராடப் போறதுக்கு முதல் சுதந்திரமாச் சிந்திக்க மனசு வேணும்... உங்கடை அப்பாவும் அதிர்ஸ்டம் செய்தவர்".

"உண்மைதான். என்ரை அப்பா, அம்மா, அண்ணா எல்லாருமே போராட்டத்துக்கு ஏதோ வகையில் உதவிசெய்யினம். அண்ணா மெடிக்கல் கொலிச்சிலை இருக்கிறார். படிப்பு முடிஞ்சதும் இயக்கத்திலை இணைவார்.

"நீங்க குடும்பமா போராட்டத்திலை இறங்கியிருக்கிறியள். இப்பிடியான நிலை எல்லாம் இடமும் இல்லை".

"எல்லா வீடுகளும் முழுமையா ஆதரிக்கையுக்கைதான் எங்கடை போராட்டம் முழுமைபெறும்".

அவள் விடைபெறும்போது, அந்தச் சிவப்பு ரோஜாக்களின் அழகிலே மெய்மறந்தாள்.

"சிவப்பு ரோஜாக்களெண்டால், எனக்கு நல்லாய்ப் பிடிக்கும்".

ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை எதிர்நோக்கும் இவள் எப்படி இயல்பாக வாழ்கிறாள்? எனக்கு அவளைப் பார்க்க விசித்திர மாக இருந்தது.

நிறைய அவளிடம் கற்க வேணுமென்றிருந்து.

என்னுடைய மனம் போர்க்களமாகி விட்டது.

★★★

அப்பா சாப்பிட்டுக்கொண்டிருந்தார். வெளியே சில மாணவர் களின் குரல்கள்போல இருந்தன. அவர் சினத்துக்கொண்டு, கைகளை அவசரமாகக் கழுவிவிட்டு, வெளியே சென்றார்.

வந்திருந்த அண்ணா ஒருவர், அப்பாவைக் கைகூப்பி வணங்கி விட்டுச் சொன்னார்…

"பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி தொடர்பாக அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து, பெரிய ஊர்வலமொன்றை மாணவர்கள் ஒன்று சேர்ந்து நடத்தப் போகிறோம். எங்கடை ஸ்கூல்லை உள்ள மாணவர்களையும் இதில் கலந்துகொள்ள அனுப்ப வேணும். எங்கடை நோக்கம் வெற்றிபெற உங்கடை ஒத் துழைப்புத் தேவை" அந்த அண்ணா சொல்லி விட்டு, அப் பாவைப் பார்த்தார்.

"எங்கடை உரிமைகளுக்குக் குரல் கொடுக்கத்தான் வேண்டும். இல்லாட்டா அரசாங்கம் எங்களை இளிச்சவாயர்கள் எண்டு நினைச்சிடும். எங்கடை பிள்ளையள் எத்தினை எத்தினையோ மரணிச்சிட்டுதுகள். இவையளெல்லாம் என்னத்துக்குச் செத் தினம் எண்டதை நினைச்சுப் பாக்கவேணும். முழு ஆதரவும் ஒத்துழைப்பும் நாங்கள் தருவோம்".

அப்பா இப்படிச் சொன்னதும் மகிழ்ச்சியுடன் அவர்கள் விடை பெற்றுச் சென்றார்கள்.

அவர்கள் சென்றபின் –

"அப்பா! நாளைக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு நானும் போகத் தானே வேணும்?

"ஊர்வலமும் மண்ணாங்கட்டியும்… உவைக்கு வேறை வேலை இல்லையோ?"

"ஆரேன் கத்தித்தர உரிமையை நாங்க அனுபவிக்கவேணும், இதென்ன நியாயமெண்டு நான் கேக்கிறோன்?"

"ஊர்வலத்திலை கொண்டுவந்து குண்டைப் போட்டுவிட்டாங்க ளெண்டா".

அப்பா ஒரு நச்சுப்பல்லி.

என் மனம் போர்க் களமாகிவிட்டது.

சென்றிப் பக்கமாக வெடிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. பொழுது துயரத்துடன் விடிந்தது. சோககீதம் இதயத்தைக் கசக் கிப் பிழிந்தது. கண்களைக் கசக்கிக்கொண்டு வெளியே வந் தேன். போராளிகள் வாகனங்கள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தன. சரக்… சரக்… சரக்… சத்தங்கள் எழுப்ப,



பளபளக்கும் ஆயுதங்களுடன் சண்டைக்குப் போட்டு, பெண் போராளிகளும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களிடையே என் பாரதியைத் தேடினேன். அகப்படவில்லை.

ஒலி பெருக்கியில் அவள் வீரமரணம் பற்றிய செய்தி ஒலிபரப்பப் பட்டபோது, நான் "ஓ" என்று கதறிவிட்டேன். பாரதியின் வித் துடலைப் பார்க்க வேண்டுமென்ற உள்ளத்துடிப்புடன், காம் புக்குப் போவதற்கு முன் வீட்டிலே பூத்திருந்த சிவப்பு ரோஜாக் களை… அவள் ஆசையோடு நேசித்த அந்த ரோஜாக்களை… இன்றைய விடியலிலே அவளுக்காக மலர்ந்திருந்த அந்தப் பூக்களையெல்லாம் பறித்தேன்.

"நில்… எங்கே போறாய்?" அப்பாவின் சினத்த குரல்.

"அஞ்சலி செலுத்த".

"உனக்கென்ன விசர் பிடிச்சிட்டுதோ?"

"விசரில்லை வெறி. ஆக்கிரமிப்புகளுக்கெதிராக நாட்டிலை மாத் திரமல்ல, வீட்டுக்குள்ளேயும் போராட வேணுமெண்ட வெறி தான் எனக்குப் பிடிச்சிருக்கு".

"உளறாதை உள்ளை போ… நான் சொல்லிறதைக் கேள்…"

"எனக்கொண்டும் சொல்லவேண்டாம். உங்கடை கதை யளைக் கேட்கிற நிலையில் நான் இல்லை… உங்களைப் போலை ஆக்கள்தான் போராட்டங்களுக்கெல்லாம் தடைக் கற்கள்… போராட்டத்தைப் பின்னடையச் செய்யிற ஒவ்வொருத் தரும் எதிரிகள்தான்".

"இந்தளவைப் படிச்சுப்போட்டு சோதினை எடுக்கிற நேரத்திலை என்னடி உழுறுறாய்?"

"நோட்ஸ் எல்லாம் பத்திரமாக்கிடக்கு. உயிர் இருந்தா திரும்பி வந்து படிப்பேன்…"



# 2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# தமிழ் மக்கள் தாங்கள் யார் என்பதைக் காட்டுவார்கள்!

29.07.2024

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தின் சுவர்களில் ஓர் அனாமதேயச் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. அதில் “தேசமே பயப்படாதே” என்று வெள்ளை பேப்பரில் சிவப்பு மையால் எழுதப்பட்டிருந்தது. யார் ? யாருக்குப் பயப்படக்கூடாது? என்று யார் கூறுகிறார்கள்?

இந்த சுவரொட்டி ஒட்டப்படுவதற்கு முன்பு, ஜேவிபி ஒரு பெரிய பலவண்ணச் சுவரொட்டியை ஒட்டியது. அதில் “எங்கள் தோழர் அனுர” என்று எழுதப்பட்டிருந்தது. அனுரவின் பெரிய முகம் அதில் பதிக்கப்பட்டிருந்தது. அதற்கும் சில நாட்களுக்கு முன்பு “நாங்கள் தயார்” என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு சுவரொட்டி. அதுவும் பலவண்ணச் சுவரொட்டி. அதில் தென்னிலங்கையில் தன்னெழுச்சிப் போராட்டங்களில் ஈடுபட்ட தலைவர்கள் மூவருடைய படங்கள் காணப்பட்டன. அதற்குக் கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு முன்பு ஒரு சுவரொட்டியில் நற்செய்தி வருகிறது என்ற பொருள்பட எழுதப்பட்டிருந்தது. அது ஒட்டப்பட்ட அடுத்த அடுத்த நாள் ரணில் செய்வார் என்று இன்னொரு சுவரொட்டி வந்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் அடுத்த கட்ட கடன் உதவிக்கான பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றிருந்த ஒரு பின்னணியில் ஜனாதிபதி நாட்டுக்கு உரை நிகழ்த்தவிருந்தார். அதை முன்னிட்டு அந்தச் சுவரொட்டிகள் வெளிவந்தன. இக்கட்டுரை எழுதப்படுகையில் ஒரு சுவரொட்டி சில நாட்களுக்கு முன் ஒட்டப்பட்டது. அதில் “ரணிலை விரட்டுவோம்” என்று கறுப்பு வெள்ளையில் எழுதப்பட்டுள்ளது.

நிச்சயமாக மேற்கண்ட சுவரொட்டிகள் யாவும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி ஒட்டப்பட்டவை. இவ்வாறு யாழ்ப்பாணத்தின்



சுவர்களில் வண்ணவண்ணச் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருக்கும் தென்னிலங்கை மையக் கட்சிகள், யாழ்ப்பாணத்து மக்களின் மனங்களில் என்ன ஒட்டப்பட்டு இருக்கிறது என்பதனை அறிந்திருக்கிறார்களா? தென்னிலங்கைக் கட்சிகள் மட்டுமல்ல, அந்தக் கட்சிகளுக்கு தமிழ்மக்களின் வாக்குகளை மடைமாற்ற முயற்சிக்கும் தமிழ் முகவர்கள், தமது சொந்த மக்களின் மனங்களில் எந்தக் கனவு ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதனை அறிந்திருக்கிறார்களா?

தமிழ்மக்கள் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நிர்ணயகரமான தருணங்களில் கொள்கைகளுக்கு வாக்களித்திருக்கிறார்கள். கொலனித்துவ ஆட்சிக்காலத்தில், இலங்கை பிரஜைகளுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட பின் நடந்த முதலாவது பொதுத் தேர்தலில், 1931ஆம் ஆண்டு தமிழ்மக்கள் தேர்தலைப் புறக்கணித்தார்கள். அப்பொழுது இருந்த யாழ்ப்பாண வாலிபக் காங்கிரஸ் மகாத்மா காந்தியின் செல்வாக்குக்கு உட்பட்டு தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுத்த கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அங்கிருந்து தொடங்கி தமிழ் மக்கள் நிர்ணயகரமான தேர்தல்களில் நிர்ணயகரமாக முடிவெடுத்து வாக்களித்திருக்கிறார்கள்.

மிகப்பலமான உயர்குழாத்தைச் சேர்ந்த சேர்.பொன் இராமநாதன், பொன்னம்பலம் குடும்பத்தின் வாரிசு ஆகிய மகாதேவாவை ஜி.ஜி.பொன்னம்பலம் 1947ஆம் ஆண்டு “தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா” என்று கூறித் தோற்கடித்தார். அதே பொன்னம்பலத்தை பின்னர் கொள்கையின் பெயரால் செல்வநாயகம் தோற்கடித்தார். பின்னர் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் போதும் தமிழ்மக்கள் கொள்கைக்கு வாக்களித்தார்கள். அதன்பின் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைத் தீவில் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழ்மக்கள் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்ட ஈரோசுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்கள். இலங்கைத் தீவின் தேர்தல் வரலாற்றில் ஒரு சுயேச்சை குழு 13ஆசனங்களை வென்றது அதுதான் முதல்தடவை. அந்த வெற்றி தமிழ்மக்களின் போராட்டத்தின் விளைவு. தமிழ்மக்கள் கொள்கைக்கு வாக்களித்தார்கள்.

அதன் பின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டு உருவாக்கப்பட்ட பின் நடந்த முதலாவது தேர்தலில், தமிழ்மக்கள் திரண்டு வாக்களித்திருக்கிறார்கள். அதாவது போராட்டத்தின் விளைவாக தோன்றிய கூட்டமைப்புக்கு கொள்கை அடிப்படையில் வாக்களித்தார்கள். 22ஆசனங்களை அள்ளிக் கொடுத்தார்கள். ஏன் அதிகம் போவான்? கடந்த 15 ஆண்டுகளிலும் ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ்மக்கள் எப்படி வாக்களித்தார்கள்? தங்களைத் தோற்கடித்த குடும்பத்துக்கு எதிராக பெருமளவுக்கு ஒன்றுபட்டு வாக்களித்தார்கள்.

எனவே தமிழ்மக்கள் கடந்த ஒரு நூற்றாண்டு முழுவதிலும் ஆகக்கூடியபட்சம் ஒரு பெருந்திரளாகத் திரண்டு ஒன்றுபட்டு வாக்களித்த பல தருணங்கள் உண்டு. ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்து வாக்களித்த தருணங்கள் பல உண்டு. ஆனால், கடந்த 15 ஆண்டுகளிலும் அவர்கள் ஜனாதிபதி தேர்தல் அல்லாத ஏனைய தேர்தல்களில் வாக்காளர்களாக சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. அதனால் அவர்களை மீண்டும் ஒரு பெரிய மக்கள் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் திரண்டுவந்து வாக்களிக்க மாட்டார்கள் என்று புள்ளி விபரங்களைக் காட்டிப் புலம்புவர்களும் பயமுறுத்துவோர்களும் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். கட்சி அரசியல் என்பது ஆகக்கூடிய பட்சம் வாக்குகளைத் திரட்டுவதுதான். அதிலும் குறிப்பாக தேசியவாத கட்சி அரசியல் என்றால், மக்களை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது. அதைச் செய்யாத அல்லது செய்ய முடியாத அரசியல் வாதிகள் பொது வேட்பாளருக்கு வாக்குகள் கிடைக்காது என்று பயமுறுத்தப் பார்க்கிறார்கள். அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு மட்டுமல்ல கட்சி அரசியலுக்கே லாயக்கில்லாதவர்கள். தமிழ்மக்களை வாக்காளர்களாகச் சிதறடித்ததில் அவர்களுக்கும் பொறுப்புண்டு.

எனவே தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற நிலைப்பாடு தமிழ் மக்களை ஒன்றாக்குவது. தமிழ்ப் பலத்தை ஒன்று திரட்டுவது. தமிழ் அரசியல் சக்தியை ஒரு மையத்தில் குவித்து ஆகக் கூடியபட்சம் ஆக்க சக்தியாக மாற்றுவது.

இந்த அடிப்படையில்தான் கடந்த திங்கட்கிழமை 22ஆம் தேதி யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக கைச்சாத்திடப்பட்டது. எழு தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும், மக்கள் அமைப்பாகிய “தமிழ்மக்கள் பொதுச்சபை”க்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை அது. அந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இரண்டு முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவது முக்கியத்துவம், கட்சிகளும் மக்கள் அமைப்பொன்றும் அவ்வாறு ஓர் உடன்படிக்கையை எழுதிக்கொள்வது நவீன தமிழ் வரலாற்றில் அதுதான் முதல் தடவை.

தமிழ்மக்கள் பொதுச் சபையெனப்படுவது தமிழர் தாயகத்தில் உள்ள குடி மக்கள் சமூகங்கள்; செயற்பாட்டு அமைப்புக்கள்; மக்கள் அமைப்புக்கள் என்பவற்றின் கூட்டிணைவாக உருவாக்கப்பட்ட, ஒப்பீட்டளவில் பெரிய ஒரு மக்கள் கட்டமைப்பாகும். அந்த மக்கள் அமைப்பு, ஏழு தமிழ்த்தேசியக் கட்சிகளோடு எழுதிக்கொண்டு ஓர் உடன்படிக்கை அது.

அந்த நிகழ்வில் உரையாற்றிய விக்னேஸ்வரன் கூறினார், வாக்களித்த மக்களும் அந்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்களும் எழுதிய உடன்படிக்கை அதுவென்று. உண்மையில் இரண்டும் இரு வேறு தரப்புகள் அல்ல. இரண்டுமே, ஒன்று மற்றதை இட்டு நிரப்பிகள்தான். ஆனால் அவ்வாறான இட்டு நிரப்பிகள் தங்களுக்கு இடையில் ஓர் உடன்படிக்கை எழுதவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? ஏனென்றால் கட்டமைப்பு ரீதியாக இயங்குவது என்று முடிவெடுத்து எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை அது. ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்ட உடன்படிக்கை அது.

இரண்டாவது முக்கியத்துவம், தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற விடயம் கட்டமைப்பு ரீதியாக முன்நகரத் தொடங்கியுள்ளது என்று பொருள். கடந்த 15 ஆண்டுகளாக ஒரு கருத்துருவாக்கமாக, சில கட்சிகளின் நடவடிக்கையாக, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ்மக்கள் பேரவையின் சுயாதீனக் குழுவினால் முன்னெடுக்கப்பட்டு, இடையில் கைவிடப்பட்ட ஓர் அரசியல் நகர்வாகக் காணப்பட்ட ஒன்று, இப்பொழுது கட்டமைப்பு சார்ந்து அடுத்த கட்டத்திற்கு நகரத் தொடங்கியிருக்கின்றது. இது




மிக முக்கியமானது.

தமிழ்மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ்ப் பொது வாழ்வில் கட்டமைப்பு சார்ந்து சிந்திக்கும் பாரம்பரியம் பலவீனமாக உள்ளது. கட்சிகளுக்குள் உரிய பொருத்தமான கட்டமைப்புகள் இல்லாத பின்னணிக்குள்தான் தனிநபர் ஓட்டங்களும் தனிநபர் சுழிப்புக்களும் இடம்பெறுகின்றன. இருக்கின்ற கட்டமைப்புகள் பலவீனமாக இருப்பதினால்தான் நீதிமன்றம் ஏற வேண்டியிருக்கிறது. கட்டமைப்புக்கு பொறுப்புக்கூறும் ஒரு நிலைமையை ஏற்படுத்தினால் முடிவுகள் கூட்டாக எடுக்கப்படும். அதில் ஒரு கூட்டுப் பொறுப்பும் இருக்கும்.

தமிழ் அரசியல் பரப்பில் விடயங்களை கட்டமைப்புக்கூடாக விளங்கிக் கொள்ளும் தன்மையும் குறைவு. அதனால்தான் யார் ஜனாதிபதி வேட்பாளர்? அவருடைய தேர்தல் விஞ்ஞாபனம் எது? யாரையாவது மனதில் வைத்துக் கொண்டு ஒரு வேட்பாளரைத் தேடுகிறோம் என்று பொய் சொல்லப்படுகிறதா? போன்ற கேள்விகள் அடிக்கடி வருகின்றன. அதற்கு ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும்; அந்தக் கட்டமைப்பு கூட்டாக முடிவு எடுக்கும்; அந்த முடிவுகளின் அடிப்படையில் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார்; அவருக்குரிய தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒரு கட்டமைப்பு எழுதும்… என்றெல்லாம் கூறப்பட்ட போதிலும், இதுபோன்ற கேள்விகள் திரும்பத் திரும்ப கேட்கப்படுகின்றன.

இப்பொழுது ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அது கட்சிகளுக்கும் மக்கள் அமைப்புக்கும் இடையிலானது. இரண்டு தரப்பையும் சேர்ந்த ஏழு, ஏழு பேர் அதில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் 14 பேர். இந்த 14 பேர்களும் உபகுழுக்களை உருவாக்குவார்கள். ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்க ஒரு உபகுழு, தேர்தல் விஞ்ஞாபனத்தை எழுத ஒரு உபகுழு, நிதியை முகாமை செய்ய ஒரு உபகுழு… என்று உபகுழுக்கள் உருவாக்கப்படும் என்று அப்பொதுக் கட்டமைப்பு கூறுகின்றது.

நவீன தமிழ் அரசியலில் இது ஒரு புதிய நகர்வு. ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் தமிழ்த்தேசிய அரசியல் போக்கை கூட்டாக தீர்மானிப்பது என்பது. இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குள் ஏழு கட்சிகள் உண்டு. எதிர்காலத்தில் இணையக்கூடிய கட்சிகளுக்காக அந்த உடன்படிக்கை திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்று அந்த நிகழ்வில் கூறப்பட்டது.

அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியமானவற்றில் இருந்துதான் சாத்திய மற்றவற்றை அதாவது அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்யலாம். சாத்தியமானவற்றிலிருந்துதான் அதைத் தொடங்கலாம். வானத்தில் எவ்வளவு உயரக் கோபுரத்தைக் கட்டுவதாக இருந்தாலும் நிலத்தில் கிடைக்கும் நிலப்பரப்பில்தான் அத்திவாரத்தைப் போட வேண்டும். அப்படித்தான் இந்த உடன்படிக்கையும். சாத்தியமான வற்றுக்கிடையிலான ஒரு உடன்படிக்கை. எதிர்காலத்தில் இது விரிந்தகன்ற தளத்தில், பரந்தகன்ற பொருளில் ஒரு தேசத் திரட்சியாகக் கட்டி எழுப்பப்படும் என்று இரண்டு தரப்பும் எதிர்பார்க்கின்றன.

கடந்த 15 ஆண்டுகால தமிழரசியல் எனப்படுவது எதிர்த் தரப்புக்கு அல்லது வெளித் தரப்புக்கு பதில்வினை ஆற்றும் “ரியாக்டிவ் பொலிடிக்ஸ்” ஆகத்தான் இருந்து வந்துள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது, அதை “ப்ரோஆக்டிவாக” மாற்றும். அதாவது செயல் முனைப்புள்ளதாக மாற்றும். தமிழ்த்தரப்பு இப்பொழுது ஒரு புதிய நகர்வை முன்னெடுக்கின்றது. இதற்கு இனி வெளித் தரப்புகளும் தென்னிலங்கைத் தரப்புக்களும் பதில்வினையாற்ற வேண்டிவரும். அதாவது வெளித் தரப்புகள் தமிழ்த் தரப்பை நோக்கி வரவேண்டியிருக்கும். இவ்வாறு தமிழரசியலை “ப்ரோ ஆக்டிவாக” - செயல் முனைப்புள்ளதாக மாற்றும்பொழுது, தமிழ்மக்கள் தங்களுடைய சுவர்களில் வண்ணச் சுவரொட்டிகளை ஒட்டும் கட்சிகளுக்கு தாங்கள் யார் என்பதைக் காட்டுவார்கள்.

நன்றி: நிலாந்தன்

# கனேடிய நாடளுமன்ற உறுப்பினர் ஷோன் ஷென் (Shaun Chen) நோக்கி முன்வைக்கப்படும் மனு!

யூலை 05, 2024

**E-5058 மனவில் கையொப்பமிடுவது எப்படி?**
**https://www.ourcommons.ca/petitions/en/Petition/Details?Petition=e-5058**

இவ்வாறாக:

★ இலங்கைத் தீவிலுள்ள தமது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மரபு வழித் தாயகமான தமிழீழத்தில் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நீட்சியான இன அழிப்பை எதிர்கொண்டுவரும் ஈழத்தமிழர் தேச மக்களிற் புலம்பெயர்ந்த பெருந்தொகையானோருக்குப் புகலிடமாகக் கனடா விளங்குகிறது (என்பதாலும்);

★ இலங்கை அரசு ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அப்பட்டமாக மீறிவந்துள்ளது (என்பதாலும்);

★ அவ்வரசின் ஊக்கத்தோடு 1956 ஆம் ஆண்டு தொட்டு தமிழருக்கு எதிரான இனப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, அவை பெரும் படுகொலைகளாகத் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஓர் இன அழிப்புப் போர் ஊடாக மெய்நடப்புத் தமிழீழம் முற்றாக அழிக்கப்படுவது ஈறாகச் சரீர (பௌதிக) இன அழிப்பு பலவேறு வழிகளில் வெளிப்பட்டுள்ளது (என்பதாலும்);

★ தமிழ் இன அழிப்பு நீட்சியான தனித்துவத் தன்மையைக் கொண்டது, ஏனெனில் இன அழிப்பின் பத்துப் படிநிலைகளும் இதில் நடந்தேறியுள்ளன, அதுவும் இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஆம் ஆண்டுச் சாசனத்தின் அடிப்படையில் விசாரிக்கப்படக்கூடிய ஆரம்ப நியாயாதிக்க காலம் எப்போதிருந்து ஆரம்பிக்கிறதோ அப்போதிருந்தே அவை நடைபெற்றுவருகின்றன என்பதோடு அவை (எதிர்காலத்திலும்) மீள்நிகழும் ஆபத்துக் கடுமையாக நிலவுகிறது (என்பதாலும்);

★ இன அழிப்பு என்ற குற்றச்சாட்டை ஐ.நா. விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று கனேடிய நாடாளுமன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டிருந்த பிரேரணை, ஒன்ராரியோ மாகாண சட்டவாக்க அவையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 104 ஆம் சட்டமூலம் ஆகிய இரண்டையும் இலங்கை அரசு மறுதலித்துவிட்டது (என்பதாலும்);

கீழே ஒப்பமிட்டுள்ளோராகிய கனடாவின் குடிமக்களும் வதிவிடவுரிமை கொண்டோருமான நாம் கனேடிய நாடாளுமன்றத்திடம் வேண்டிக்கொள்வது (என்னவெனில்)

**1.** கனடா தனக்குரிய இரண்டு பொறுப்புகளின் அடிப்படையில் - (முதலாவதாக, புலம்பெயர்) ஈழத்தமிழ் மரபுரிமையின் பாற்பட்ட குடிமக்களைத் தன்னகத்தே கொண்டிருக்குங் காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஓர் அரச தரப்பாகவும் (இரண்டாவதாக, நேரடியாகப் பாதிக்கப்படாவிட்டாற் கூட எந்த ஓர் அரசுக்கும் பொதுவானதாயுள்ள சர்வதேசக்) கட்டாய நியமத் தரப்புக் கடப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்புள்ள ஓர் அரச தரப்பாகவும் - (இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஐ.நா.) சாசனத்தின் ஒன்பதாம் உறுப்புரை வரையறுத்துள்ள பொறுப்பின் அடிப்படையிற் செயலாற்றி தமிழ் இன அழிப்பு மீது இலங்கைக்குரிய அரச பொறுப்பை அச் சாசனம் வழங்குகின்ற முழுமையான கால நியாயாதிக்கத்தையும் (சாசனத்தின் சட்ட அமுலாக்கம் செல்லுபடியாகும் முதலாம் நாளான 1951 ஜனவரி 12 ஆம் நாள் தொடக்கம் இற்றை நாள் வரை மட்டுமல்ல மீள்நிகழும் ஆபத்தைக் கருத்திற்கொண்டு எதிர்காலக் கரிசனையையும்) உள்ளடக்கி சர்வதேச (உலக) நீதிமன்றில் விசாரிப்பதற்குரிய வழக்குத் தொடரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்; அத்தோடு

**2.** ஆக்கிரமிக்கப்பட்ட தாயகத்திலுள்ள (ஈழத்தமிழ்) மக்களிடையேயும் (அவர்தம்) புலம்பெயர் மக்களிடையேயும் (மேற்குறித்த இன அழிப்பில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான பரிகார நீதியாக) சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழ அரசின் உருவாக்கத்தை முடிவுசெய்வதற்கான பொதுவாக்கெடுப்பு ஒன்றை சர்வதேச நிர்வகிப்புடன் நடாத்தக் கோருதல் வேண்டும்.




**PETITION TO THE CANADIAN GOVERNMENT**

**1: TAKE SRI LANKA TO THE INTERNATIONAL COURT OF JUSTICE (ICJ) AND;**

**2: CALL FOR AN INTERNATIONALLY ADMINISTERED REFERENDUM OF INDEPENDENT AND SOVEREIGN STATE OF TAMILEELAM**

**HOW TO SIGN?**

**STEP 1:** SIGN THE ELECTRONIC PETITION ON HOUSE OF COMMONS WEBSITE (https://www.ourcommons.ca/petitions/en/Petition/Details?Petition=e-5058)

**STEP 2:** CONFIRM SIGNATURE VIA E-MAIL



SCAN ME

## PURPOSE OF SIGNING THE PETITION e-5058

**This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).*

**Open for signature**
July 05, 2024, at 10:01 A.M. (EDT)

**Closed for signature**
September 03, 2024, at 10:01 A.M (EDT)

PURPOSE OF SIGNING THE PETITION e-5058

**This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).*

Canada is a diasporic home to largest number of Eelam Tamils, a nation of people without their own state, who fled their occupied traditional homeland, Tamileelam, in the island of Ceylon/Sri Lanka, facing protracted genocide over 75 years;

The Sri Lankan state has grossly violated the Right of Self-Determination of the Eelam Tamils with constitutionally entrenched clauses and amendments imposing *unitary system of government* and giving *foremost place* to a particular religion concentrating power over affairs and wealth of the island in the hands of the Sinhala ethnic community, as well as imposing the Sixth Amendment against the democratic aspiration of Eelam Tamils;

The State-sponsored physical genocide has manifested in various ways since 1956 from anti-Tamil ethnic pogroms, military and paramilitary conducted massacres, and finally, a genocidal war that ended in May 2009 in total annihilation of the de-facto Tamil Eelam administration, which remained committed to internationally brokered peace process since 2002;

The protracted nature of genocide is a unique feature of Sri Lanka's genocide and an overwhelming majority of Tamils perceive that all ten stages of genocide have occurred since the beginning of invocable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention and Punishment of the Crime of Genocide (the Genocide Convention) and the risk of recurrence remains also high post-2009;

The Sri Lankan State has disputed both The House of Commons motion passed on 19th June 2019 that called on the UN to investigate into allegations of genocide and the Legislative Assembly of Ontario enacted Bill 104;

**WE, THE UNDERSIGNED**, residents and citizens of Canada

**CALL UPON THE** Member of Parliament

**TO**

**Firstly, invoke Canada's responsibilities on two grounds – as an *injured State* party on behalf of its citizens of Eelam Tamil heritage and as a State party exercising its *erga omnes partes* obligation owed to the international community as a whole – to initiate proceedings against the Republic of Sri Lanka at the International Court of Justice to investigate that State's responsibility on Tamil genocide under the Genocide Convention's Article IX covering entire temporal jurisdiction period; and**

**secondly, to call for an internationally-administered referendum among the people of North and East descent in the island, in the diaspora and among the refugees in India and elsewhere, to decide on the creation of an independent and sovereign state of Tamil Eelam.**

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

**Background information**

**Canadian citizens of Eelam Tamil diaspora origin should urge Canada to institute case against the Republic of Sri Lanka at the International Court of Justice (ICJ) to investigate Sri Lankan State responsibility on Tamil genocide, covering temporal jurisdiction of the 1948 Genocide Convention in its entirety**

Canada is a diasporic home to the largest number of exiled Eelam Tamils, who fled genocidal onslaught in their traditional homeland, which is the northern and eastern parts of the island of Ceylon/'Sri Lanka. The homeland, which was de-facto Tamil Eelam prior to May 2009 is now Occupied Tamil Eelam.

The discourse of state formation in the island severed the legal continuity of sovereignty ties with the British Queen, who continued to be the repository of Tamils sovereignty until 1972. It unilaterally abolished even the meagre constitutional safeguards in the British-given 1947 Soulbury Constitution that had also been enacted disregarding Tamil concerns.

The unitary State of Sri Lanka has constitutionally negated Tamils their collective right of Self-Determination is the mainstream and unanimous view of the Tamils. Their democratically expressed political aspiration in 1977 for the establishment of a sovereign, secular and independent Tamil Eelam as the last-resort remedy, in the last- ever free and fair democratic election in the context of democratically exercising their self-determination, has been totally denied through the 6th Amendment to the Sri Lankan constitution since August 1983.

The Eelam Tamils, who commenced a passive resistance struggle since 1930s have been systematically subjected to a series of state-sponsored genocidal pogroms since 1956 that triggered them to seek last-resort defensive warfare as thousands fled seeking security within and outside the island. During the war, there were a series of genocidal massacres committed against Tamils by the armed military and paramilitary forces of the State. When Tamils achieved diplomatic and military parity of status with the Sri Lankan State, that State allegedly decided to genocidally annihilate the Eelam Tamils, which culminated in the genocidal war of 2009.

The widespread protests in the World capitals ended futile as the International Community failed to prevent the genocide within the Responsibility to Protect (R2P) framework. The UN's investigation into its own conduct during the last months of the war admitted "systemic failure" and concluded that the "events in Sri Lanka mark a grave failure of the UN" and recommended that the UN should in future "be able to meet a much higher standard in fulfilling its protection and humanitarian responsibilities".

However, the UN Human Rights Council based discourse in Geneva has also failed to deliver justice post-2009. There has been no meaningful transition from the root causes behind the conflict even though the armed struggle was ended through the genocidal onslaught. Cultural and structural genocide continues post-2009 with high risk of recurrence of physical genocide.

Since the systematic and protracted State-sponsored genocide against Eelam Tamils in the island manifest in various ways, it is crucial to place the acts of genocide from the very beginning of invokable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention of Genocide (hereafter be cited as the Convention) and the genocidal war in 2009 in the broader context of Ceylon/Sri Lankan States conduct towards Eelam Tamils during the last 75-year-long protracted genocide.

All the ten stages of genocide have taken place and continue to take place post-2009. The protracted nature of genocide is a uniquely unique feature of Sri Lanka's genocide. "Never again" has become "time again" in the island. Unless the State-responsibility for all acts under Article III of the Convention is properly investigated by the International Court of Justice (ICJ), there is a great danger of recurrence.

Narrowing the temporal jurisdiction to 2006-2009 without considering the protracted nature of the genocide would make it challenging to establish the intention as one would be limited to infer the intent from relevant facts and circumstances of a limited scope. In addition to reasonable inference[1], there are open and clear-cut reference to establish the definitional element of intent, which is often referred to as *dolus specialis* or *specific intent*.

[1] The International Criminal Tribunal for the former Yugoslavia (ICTY) has held that genocidal intent "may, in the absence of direct explicit evidence, be inferred from" circumstantial evidence. The International Criminal Court's (ICC's) Elements of Crimes, also states, "Existence of intent and knowledge can be inferred from relevant facts and circumstances". However, the UN Human Rights Council reports on Sri Lanka have limited such inferences only towards War Crimes and Crimes Against Humanity on crimes committed in Sri Lanka during the final phase of the war, even though the former High Commissioner of Human Rights did not rule out the interpretation of plausibile genocide based on the findings in the future."That is not something that we perceive at this stage. Had we thought that acts of genocide had been committed of course we would have raised this in the findings – that is not to say that at a subsequent stage once investigations were conducted that it implausible. But for the time being that is not something that we perceive as having allegedly happened," responded UN High Commissioner for Human Rights Zeid Ra'ad Al Hussein responding to question on genocide during OHCHR press conference on OISL Report (Geneva, 16 September 2015).

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

The North-East Secretariat of Human Rights (NESOHR), which was subjected to genocidal annihilation, has extensively documented the genocidal massacres since 1956[2].

The Permanent Peoples' Tribunal (PPT) on Sri Lanka, an international opinion tribunal independent from any State or UN authority, found Sri Lanka guilty of genocide in January 2014 at its Bremen Session[3]. Apart from the crime of genocide, the Tribunal has also defined the protected group according to the Convention as the nation of Eelam Tamils.

The House of Commons has passed a motion on 19th June 2019 calling upon "the United Nations to establish an international independent investigation into allegations of genocide against Tamils committed in Sri Lanka, including during the last phase of the armed conflict in 2009". Furthermore, the Legislative Assembly of Ontario has enacted Bill 104 in 2021 proclaiming the seven-day period in each year ending on May 18 as Tamil Genocide Education Week.

The Sri Lankan State has disputed the Canadian resolution and the legislature recognition of Tamil genocide remembrance. As such, a clear dispute has already been established for the Canadian State to institute a case at the ICJ.

As the largest diasporic home country of the Eelam Tamils, Canada that has a concern for its citizens, is entitled to invoke its responsibility as an injured State as well as being entitled to invoke its obligation *erga omnes partes* as recently demonstrated by The Gambia in its case against the Myanmar State-responsibility on genocide (2022) and by South Africa in the case of Israel's crimes against Palestinians (2024). Both the cases have been accepted by the ICJ as having plausible rights to protection from genocide.

Prevention of State Responsibility under the Convention is a clearly accepted obligation stemming from the peremptory norm of general international law (jus cogens).

Professor Francis Boyle, an eminent American expert in international law at the University of Illinois College of Law, who has single-handedly won two ICJ orders for the Republic of Bosnia Herzegovina against Yugoslavia to cease and desist all acts of genocide committed against its population, has held that the genocide against Eelam Tamils must be investigated by the ICJ and that he is prepared to appear as the Chief Prosecutor. [4]

While addressing the State Responsibility at the ICJ, the most proper avenue to address the criminal responsibility would be a specifically constituted (ad hoc) International Criminal Tribunal on Sri Lanka (ICT-SL) with dedicated statutes. The International Criminal Court has limited scope of temporal jurisdiction as the ICC can only exercise jurisdiction over crimes committed after July 1, 2002 (the date that the Rome Statute went into force).

Denial of Right of Self-Determination is also widely regarded as a jus cogens norm. Canada could also initiate a separate case in the ICJ on Sri Lankan States violation of the Right of Self-Determination of Eelam Tamils.

Canada has also incorporated the obligations of the Rome Statute into its national laws when it adopted the Crimes Against Humanity and War Crimes Act (CAHWCA) on June 24, 2000.

As such it could also apply Universal Jurisdiction to prosecute any individual present in Canada for crimes listed in the CAHWCA regardless of that individual's nationality or where the crimes were committed.

However, when making representations to The House of Commons or any Canadian government authority, the Tamil diaspora activist groups should not mix jurisprudence, territorial and temporal jurisdiction and they type of courts in one and same document when initiating a particular type of action. For example, a request to initiate proceedings at the ICJ on State Responsibility at the ICJ should not be mixing criminal responsibility or universal jurisdiction. Similarly, one should also pursue ICT over ICC as both entails the route.

[2] Report by, North East Secretariat on Human Rights (NESOHR), Karadipokku Junction Kilinochchi, Sri Lanka, First Edition in Tamil - 2005, First Edition in English - 2007, Information Collected by Statistical Centre for North East (SNE)

[3] Peoples's Tribunal on Sri Lanka (PTSL), Bremen, Germany, 07-10 December 2013, Report of the findings published by the Permanent People's Tribunal (PPT) and the International Human Rights Association - Bremen (IMRV), Bremen 2014

[4] Speech at the second international conference on Tamil Nationhood and Genocide in Sri Lanka, held at Carleton University in Ottawa in May 2018.

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

# வடக்கிற்கு வரும் ஜனாதிபதி வேட்பாளர்கள் ‘கறுப்பு யூலைக்கு மன்னிப்பேனும் கேட்கவில்லை’

30.07.2024

நாற்பத்தொரு வருடங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் ஆரம்பித்து நாடு முழுவதும் அரச ஆதரவுடன் இடம்பெற்ற கறுப்பு யூலையின்போது, வெலிக்கடை சிறைச்சாலையில் 55ற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் கொல்லப்பட்டமைக்கு, இந்த நாட்களில் வடக்கிற்கு வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறைந்தபட்சம் ‘மன்னிப்பையேனும் கேட்கவில்லை’ என தமிழ் அரசியல்வாதி ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார்.

“நாங்கள் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுக்கக்கூடிய நேரத்தில் கூட, தென்னிலங்கையில் இருந்து வேட்பாளர்களாக இங்கு வரக்கூடியவர்கள் நடந்துமுடிந்த இவ்வாறான படுகொலைகளுக்கு மன்னிப்புக் கேட்டிருக்கின்றார்களா என்றால் இல்லை. அல்லது எவராவது இவர்களுக்கு ஏதாவது நட்டஈடு அல்லது உதவிகளை வழங்கியிருக்கின்றார்கள என்றால் இல்லை.”

1983 கறுப்பு ஜூலை படுகொலைளின்போது வெலிக்கடைச் சிறைச்சாலை மற்றும் 2000ஆம் ஆண்டு பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் உள்ளிட்ட இலங்கையின் ஏனைய சிறைச்சாலைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நினவுகூரும் வகையில், ‘வெலிக்கடைசிறை படுகொலை தினத்தில்’ (யூலை 25) மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் கொல்லப்பட்ட அனைத்து தமிழ் மக்களையும் இந்நாட்டு அரசாங்கங்கள் பயங்கரவாதிகளாகப் பார்ப்பதாகத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென மேலும் குறிப்பிட்டுள்ளார்.

“இந்த நாட்டில் கொல்லப்பட்ட அனைத்து தமிழ் மக்களையுமே இந்த நாட்டின் அரசு பயங்கரவாதிகளாகவே பார்த்தது. ஆகவே நாங்கள் ஆயிரக்கணக்கான மக்களை இந்த போராட்டத்தில் இழந்திருக்கின்றோம். அது மாத்திரமல்லாமல் பல்லாயிரக் கணக்கான மக்கள் இராணுவத்தினரால், கடற்படையினரால் மேலும் பல்வேறு தரப்பினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளோம். ஆகவே இந்த நிலையில், படுகொலையில் இருந்து தப்பி வந்த நாங்கள் படுகொலையானவர்களை நினைவுகூர்வது, தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் தமது உரிமைகளுக்காக போராடினார்கள் என்பதை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும்.”

2024ஆம் ஆண்டு யூலை 29ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால், தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதாகக் கொழும்பில் அறிவிப்பதற்கு முன்னதாக, யூலை 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய, நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ச, 41 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு யூலைக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரினார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வட மாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைபீட பீடாதிபதி எஸ்.ரகுராம், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, உயிரிழந்தவர்களின் உறவினர்கள், விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர, 1983 கறுப்பு யூலையில், வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளை, டெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், ஜனநாயக போராளிகள் கட்சி மற்றும் தமிழ் தேசியக் கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதே தந்தை செல்வா அரங்கில் நினைவுகூறியது.

இதேவேளை, யாழ்ப்பாண வணிகர் கழகம் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து நடத்திய கறுப்பு யூலை நினைவேந்தலில் மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் கலந்துகொண்டனர்.



### 25 – 27 யூலை 1983

83 கறுப்பு யூலை படுகொலையின் போது வெலிக்கடையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த டெலோ அமைப்பின் தலைவர் உட்பட 54 தமிழ் அரசியல் கைதிகள், அவர்களைப் பாதுகாக்க அழைக்கப்பட்ட படைகள் மற்றும் சிறை அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் அவர்களது அறைகளிலேயே சிங்களக் கைதிகளால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

1983ஆம் ஆண்டு யூலை 25ஆம் திகதி, மனிதாபிமானமற்ற முறையில் கொல்லப்பட்ட குட்டிமணி உள்ளிட்ட 35 பேரின் சடலங்கள் சிறைச்சாலை முற்றத்தில் உள்ள புத்தர் சிலைக்கு முன் குவிந்திருந்த நிலையில், சடலங்களுக்கு மத்தியில் உயிருடன் இருப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டனர்.

அதன்பின்னர், மீண்டும் யூலை 27ஆம் திகதி, தமிழ்க் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த முதல் மாடியில் உள்ள இளைஞர் அறையை சிங்களக் கைதிகள் முற்றுகையிட்டதில், காந்திய இயக்கத் தலைவர் வைத்தியர் இராஜசுந்தரம் உட்பட 18 பேர் கொல்லப்பட்ட நிலையில், உயிருக்குப் போராடி உயிர் பிழைத்தவர்களில் தற்போதைய மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பனாகொட மகேஸ்வரன் என்கிற தம்பிப்பிள்ளை மகேஸ்வரன், ஈரோஸ் அமைப்பின் அந்தோணிப்பிள்ளை அழகிரி, காந்தி இயக்கத்தைச் சேர்ந்த எஸ். டேவிட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எஸ். டேவிட் இந்த அனுபவத்தைப் பற்றி பிற்காலத்தில் எழுதியதோடு, அந்தோனிப்பிள்ளை அழகிரி வெலிக்கடையில் நடந்த மனிதாபிமானமற்ற தாக்குதல் இத்தாலியில் உள்ள அலிதாலியா விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தை கடத்திய குற்றத்திற்காக வெலிக்கடை சிறையில் இருந்த சேபால ஏகநாயக்க தலைமையில் இடம்பெற்றது என, ஜேடிஎஸ் (JDS) இணையதளத்திற்கு தெரிவித்திருந்தார்.

டெலோ தலைவர் குட்டிமணியை நாடாளுமன்ற உறுப்பினராக முன்னிறுத்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி முயற்சித்த போதிலும், அவர் ஆயுள் தண்டனை அனுபவித்து வருவதால், அவரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க அப்போதைய சபாநாயகர் பாக்கீர் மார்க்கர் மறுத்திருந்தார்.

### 25 ஒக்டோபர் 2000 பிந்துனுவெவ

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பின்னர், பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 பேரில் 27 பேர், 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதி அதிகாலை வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்டதோடு மேலும் 14ற்கும் மேற்பட்டோர் காயமடைந்த இந்த சம்பவத்தில் பொலிசார் மற்றும் கிராம மக்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது.

பிந்துனுவெவ படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 41 பேரில் பண்டாரவளை மற்றும் தியத்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட 19 பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குவர். எஞ்சியவர்கள் பிந்துனுவெவ கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

யூலை 1, 2003 அன்று, நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட நான்கு குற்றவாளிகளையும், மே 17 2005 அன்று, மேல்முறையீட்டு நீதிமன்றம் விடுவிக்க உத்தரவிட்டது.

எவ்வாறெனினும் 27 கைதிகள் வெட்டி படுகொலை செய்யப்பட்ட மற்றும் 14ற்கும் மேற்பட்ட கைதிகள் காயமடைந்த, பிந்துனுவெவ படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்த மலையக தோட்டத் தொழிலாளர் இளைஞர்களுக்கு எதிரான வழக்கு, இன்னும் சாட்சிகள் தாக்கல் செய்யப்படாத நிலையில் இடம்பெற்று வருவதாக ஜேடிஎஸ் தெரிவிக்கின்றது.

நன்றி: தென்னவள்

**பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் படுகொலை (25.10.2000) செய்யப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்ட இறந்தவர்களின் பெயர்கள் மற்றும் சொந்த ஊர்கள்:**

குணபாலன் ஜெயவர்த்தனம், மன்னார்

ஆண்டனி ஜோன், கல்லடி, மட்டக்களப்பு

கருணாகரன் இராமசாமி, சாந்தச்சோலை, வவுனியா

ரூபேஷ்குமார் விஸ்வபரன், வேப்பங்குளம், வவுனியா

செந்தூரன் விநாயகமூர்த்தி, வந்துமூலை, மட்டக்களப்பு

மோகன் சின்னத்துரை, ஆனதபுரம், திருகோணமலை

ரவிதரன் கனபதிப்பிள்ளை, லிங்கபுரம், மணலாறு

விஜயேந்திரன் விஸ்வலிங்கம், நாவட்காடு, மட்டக்களப்பு

பாலகுமார் மாரிமுத்து, புல்லாவெளி, மட்டக்களப்பு

மதியழகன் புண்ணியமூர்த்தி, மூதூர், திருகோணமலை

செல்வராஜா துரைராஜா, தம்பனை, யாழ்ப்பாணம்

முகுந்தன் சிவயோகராஜன், கரவெட்டி கிழக்கு, யாழ்ப்பாணம்

விபுலானந்தராஜா சிவயோகராஜன் திருக்கோவில், அம்பாறை

கோகுலமணி சஜீவன், கல்லடி, மட்டக்களப்பு

பேரின்பநாயகம் நிம்லராஜ், மட்டக்களப்பு

சோமசுந்தரம் செல்லராசா
சிவன் குபேந்திரன், ஆரையம்பதி

சின்னத்தம்பி என்கிற வைஸ்வபரம் ரூபேஷ்குமார், ஊர்மிளா கோட்டம், வவுனியா

இராமசாமி கருணாகரன், சாந்தசோலை, வவுனியா

....?




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# கறுப்பு யூலை:

## தமிழர்கள் மீதான சிங்கள இனவெறியின் உச்சம்!

சிங்களர்களின் ஆட்சிக் காலம் தமிழர்களின் இருண்ட காலம் என்றே வரலாற்றுப் பக்கங்களில் எழுதப்படும் அளவுக்கு மிகவும் கொடுரமானது. இலங்கையின் பூர்வகுடிகளான தமிழர்களின் நிலப்பகுதிகள் சிங்களத்தால் பறிக்கப்பட்ட பின்னாலும் மீதமுள்ளவையே தமிழர் பகுதிகளாக நீடிக்கின்றன. தமிழர் என்ற தேசிய அடையாளத்தை முற்றிலும் துடைத்தழிக்க துடித்த சிங்களப் பேரினவாத அரசு, இலட்சக்கணக்கான தமிழர்களை கொன்று இனப்படுகொலை செய்து முடித்திருக்கிறது. காலங்கள் கடந்தாலும் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகள் நம் இரத்தத்தை உறைய வைப்பவை. நடத்தப்பட்ட படுகொலைகள் நம் உணர்ச்சிகளை கொந்தளிக்கச் செய்பவை. ஈழத் தமிழர்களின் வரலாற்றை வாசிப்பவர்கள் கண்ணீரின்றி கடக்க முடியாத நிகழ்வுகளுள் ஒன்று இந்த கருப்பு யூலை எனப்படும் யூலை கலவரம். 1983-ம் ஆண்டு யூலை மாதம் சிங்களப் பேரினவாத அரசாலும், சிங்கள இனவெறியர்களாலும் தமிழர்களுக்கு நடத்தப்பட்ட கொடூரங்களே “கறுப்பு யூலை” என்று குறிப்பிடக் காரணமாக இருக்கிறது.



ஒரு மனிதன் உணர்ச்சி மரத்துப் போய் நிர்வாணமான நிலையில் தலையில் கை வைத்து அமர்ந்திருக்க, சுற்றிலும் இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிக்கும் புகைப்படத்தை காணாதவர்கள் இருக்க முடியாது. யூலை கலவரத்தின் சாட்சியாக உலகத்தின் மனசாட்சியை உலுக்கிய புகைப்படம் இது. அந்தக் கலவரத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை, சிங்கள இனவெறியர்கள் கண்டந்துண்டமாக வெட்டி வீசினார்கள். குடும்பத்துடன் தமிழர்களை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தினார்கள். 500-க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் ஈவிரக்கமின்றி இந்த வெறியர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். வணிக வளாகங்கள், கடைகள், எரிபொருள் நிலையங்கள், திரையரங்குகள் என 5000-க்கும் மேற்பட்ட தமிழர்களின் வர்த்தக நிறுவனங்களை குறிவைத்து காட்டுமிராண்டித்தனமாக சூறையாடினார்கள்.

தமிழர்களின் உடைமைகள், வர்த்தக நிலையங்கள், சொத்துகள் தொடர்பான விவரங்கள் ஏற்கனவே சிங்கள அதிகாரிகளால் கலவரக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. தமிழர்களின் பொருளாதார அடித்தளத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே நன்கு திட்டமிடப்பட்டு இந்தக் கலவரம் நடந்தது. ஆறு நாட்கள் சிங்கள வெறியர்களின் கையில் கொழும்பு மாநகரமும், தென்னிலங்கையும் இருந்தது. பெயரளவுக்கு போடப்பட்ட ஊரடங்கிற்கும், சிங்கள ஆயுதப் படை மதிக்காமல் மறுப்பு தெரிவித்து கலவரக்காரர்களுடன் இணைந்து கொண்டு தமிழர்களைத் தாக்கியது. தலைநகரமெங்கும் தமிழர்களின் மரண ஓலங்களும், தீயடங்காது எரியும் தமிழர்களின் வணிக




நிலையங்களும் என கொழும்பு கோரமாய்க் காட்சியளித்தது. புத்தரின் கோட்பாடு அன்று பல்லிளித்தது. 1,50,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உடைமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.

இன்னொரு குரூரமும் யூலை 25ம் நாளன்று நடந்தேறியது. கொழும்பின் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கதுரை, ஜெகன், காந்திய அமைப்பைச் சார்ந்த மருத்துவர் இராசசுந்தரம் மற்றும் எஸ்.ஏ டேவிட் உட்பட 37 பேரை சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு அவர்கள் அளித்த ஆயுதங்களோடு மிகக் கொடூரமாக கொல்லப்பட்டனர்.

“அரசு என்னை ஒரு நாள் கொன்று விடும். எனது கண்களை ஈழத் தமிழர்களுக்கு பொருத்தி விடுங்கள். நான் காண இயலாத தமிழ் ஈழத்தை எனது கண்களாவது காணட்டும்!” என்று நீதிமன்றத்தில் கூறியவர் குட்டிமணி. இந்த கண்கள் இருந்தால் தானே ஈழத்தை பார்க்கும் என்று குட்டிமணியின் கண்களைத் தோண்டியெடுத்து, அதனை காலால் மிதித்தான் சிங்கள இனவெறியன் ஒருவன். அந்த நாளோடு மட்டும் அந்தக் கொடூரம் முடியவில்லை. மீண்டும் ஜூலை 28-ம் தேதியும் அந்த சிறையில் தாக்குதல் நடத்தப்பட்டது. 18 தமிழர்கள் கொல்லப்பட்டனர். மூன்றே நாட்களில் 55 தமிழ் கைதிகள் சிங்கள இனவெறிக்கு இரையாக்கப்பட்டார்கள்.

தமிழர் என்ற அடையாளமே சிங்கள வெறியர்களுக்கு வெறியேற்றிக் கொள்ள போதுமானதாக இருந்தது. பௌத்த துறவிகளிலிருந்து சிங்களக் கைதிகள் வரை இனவெறி ஊன்றுவதற்கு வித்திட்டவர் சிங்களர்கள் குருவாக கருதும் அநாகாரிக்க தர்மபாலா.

“சிங்களர்கள் தனித்துவமானவர்கள். நாகரீகமற்ற காடையர்களால் சீரழிக்கப்படும் முன் ஒளிமயமான இந்த அழகிய தீவு ஆரிய சிங்களர்களால் ஒரு சுவர்க்க பூமியாக உருவாக்கப்பட்டிருந்தது” - சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பிதா என்றழைக்கப்பட்ட அநாகாரிக்க தர்மபாலாவின் கூற்று இவை. ஆனால் திராவிட பழங்குடி இனமான நாகர்களின் தேசமே ஒட்டு மொத்த இலங்கையும் என்பது வரலாற்றாசிரியர்களின் கூற்று. உண்மை வரலாறு இப்படியிருக்க, இடையில் வந்து இலங்கைத் தீவை ஆக்கிரமித்து, பூர்வகுடிகளான தமிழர்களை ஒடுக்க சிங்களர்களுக்கு வெறியூட்டிய வரலாற்றுத் திரிபுகளை வடிவமைத்தவர்களே இந்த பௌத்த அடிப்படைவாதிகள்.

கருப்பு யூலை படுகொலைகளை சர்வதேசப் பத்திரிக்கைகளும் கண்டித்து இவ்வாறு எழுதின.

“ஏனைய ஆசிய நாடுகளின் கலவரங்களிலிருந்து இந்தக் கலவரத்தின் தெளிவான வேறுபாடு, தமிழர்களின் வர்த்தகத் தலங்களைத் தேடி கலவரக் கும்பல்கள் கண்டுபிடித்து தாக்கியதே ஆகும். காவலர்களும், அரசப் படைகளும் கலகக்காரர்களுடன் சேர்ந்தே தாக்கினார்கள்” - பைனான்சியல் டைம்ஸ், 1983 ஆகஸ்ட் 12

“சேர்ந்து வாழ்வது கடினமானதென்றால் வடக்கில் தமிழர்களுக்கு தனி நாடு கோரும் உரிமை இருக்கவே செய்கிறது” - வாஷிங்டன் போஸ்ட் - 1983 ஆகஸ்ட் 4

தமிழ்நாட்டின் பத்திரிக்கைகளும், இந்திய ஒன்றியத்தின் முக்கியப் பத்திரிக்கைகளும் இதனை தலைப்புச் செய்திகளாக்கின.

தமிழ்நாட்டிலும், உலகத் தமிழர்களிடையிலும் இந்த யூலை கலவரம் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது. கட்சி, அமைப்பு வேறுபாடுகளின்றி தமிழகத்தின் பொதுமக்கள் இலங்கை அரசுக்கெதிரான பேரணி, ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என தங்கள் தமிழீழ உறவுகள் கொன்றொழிக்கப்பட்டதை கண்டித்து திரண்டார்கள். சர்வதேச சமூகமும் கண்டனத்தை தெரிவித்தன. இந்த யூலை கலவரம், பல்லாயிரம் தமிழ் இளைஞர்களை ஆயுதம் தரித்த விடுதலைப் போரில் சேர உந்தித் தள்ளியது. தமிழ்நாட்டு தமிழர்கள் இந்திய படையை அனுப்பி அமைதியை நிலைநாட்ட கோரிக்கை எழுப்பியதும் யூலை கலவரத்தால் உருவானது.

கறுப்பு யூலை என்பது யூலை மாதத்தில் ஆரம்பித்த நிகழ்வு அல்ல. அது மே மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக நடந்து வருவது. 1983 மே மாதத்தில் அங்கு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் பங்கேற்க கூடாது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் கொடுத்த அழைப்பின் பேரில் தமிழர் பகுதியில் 98 சதவீதம் பேர் தேர்தலை முற்றுமுழுதாக புறக்கணித்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் தமிழர் பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் ஜெயவர்தனேவை கடுங்கோபம் அடைய செய்தது. இதனால் ஜெயவர்த்தனே தனது படைகளை கட்டவிழ்த்து விட, தமிழர் பகுதிகளில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். வீடுகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இந்த பதட்டம் வவுனியா முழுவதும் பரவியது. பின்பு திரிகோணமலை பகுதிகளிலும் பரவியது. 1983 யூலை மாதம் நாள்தோறும் தமிழர்கள் கொல்லப்படுவது வாடிக்கையாகி போனது. யூலை 23-க்கு மேல் இது உச்சத்தை அடைந்தது. இதன் பின்பு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த பொது கடையடைப்பு முழுவீச்சில் நடைபெற்றது. அப்போது கொழும்புவிலிருந்து வந்த யாழ்தேவி தொடருந்து தமிழ் இளைஞர்களால் தீயிடப்பட்டது. இதனால் ஏற்பட்ட பதற்றத்தினால், யாழ்ப்பாண பத்திரிக்கைகளுக்கு தடைவிதிக்கப்பட்டன.

தொடர்ந்து, திருநெல்வேலி தாக்குதல் எனப்படும் கன்னிவெடி தாக்குதலில் 13 சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். யாழ்ப்பாணத்திலேயே அவர்கள் உடல்களை அடக்கம் செய்திட இராணுவத்தினர் விரும்பிய போதும், ஜெயவர்த்தனே அவர்களது உடலை கொழும்புவில் சிங்கள மக்கள் மத்தியில்

பார்வைக்கு வைத்து அடக்கம் செய்ய முடிவெடுத்தார். சிங்கள அரசான ஜெயவர்த்தனா அரசு இராணுவத்தினரின் மரணத்தை இனவெறி தூண்டும் நிகழ்வாக மாற்றியது. எந்த இராணுவ வீரர்கள் மறைவிற்கும் கடைபிடிக்காத புதிய முறைகளில் இந்த இராணுவத்தினருக்கு சவ ஊர்வலம் நடந்தது. சவப்பெட்டியில் எடுத்து வராமல் வேண்டுமென்றே சூழ்ச்சியுடன் பாலிதீன் பைகளில் பிணங்களை கட்டிக் கொண்டு வந்தார்கள். இருட்டும் வரை சவ ஊர்வலத்தை தாமதப்படுத்தி சிங்களவர்களிடம் கொதிப்புணர்வை தூண்டச் செய்தார்கள். இந்த தாமதம் பெரும்பாலான சிங்களவர்களை கொழும்பை நோக்கி வரச் செய்வதற்கு போதுமான காலமாக இருந்தது. அரச பயங்கரவாதிகளின் குரூரப் புத்தியால் தூண்டப்பட்ட சிங்கள வெறியர்களால் அப்பாவித் தமிழர்களின் இரத்தம் ஆறாக ஓடியது. படிப்படியாக தென்னிலங்கைக்கும் வன்முறை பரவியது. இதனால் 1,50,000-க்கும் மேற்பட்டோர் தங்கள் உடைமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்டனர். மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் மாண்டனர். அரச பயங்கரவாதப் படைகளால் திட்டமிடப்பட்டு நிகழ்த்திய படுகொலை என்பதை "கறுப்பு யூலை" வெளிச்சமிட்டு காட்டியது.

"கறுப்பு யூலை" தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட மிகக் கொடூரமான இனவெறி தாக்குதல் என்றாலும், ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை தீவு விடுதலை பெற்றது முதல், சிங்களவர்களின் ஆட்சியின் கீழ் தொடர்ச்சியாக தமிழர்கள் மீது நடத்தப்பட்ட திட்டமிட்ட இனவெறி தாக்குதல்கள் அதற்கு அடித்தளமிட்டுள்ளன எனலாம்.

1956-ல் "சிங்களம் மட்டும்" இயக்கம் நடத்திய பண்டாரநாயகா அதிபரான போது, சிங்களத்தை அரச மொழியாக்கி, தமிழ் மொழி கீழிறக்கப்பட்டது. தமிழர்கள் உட்பட அனைத்து அரசு ஊழியர்களுக்கும் சிங்களம் மொழி தெரிந்தாக வேண்டும், இல்லையென்றால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு இல்லை என ஆணை பிறப்பிக்கப்பட்டது. அப்பொழுது தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்திய சமஷ்டிக் கட்சியான தந்தை செல்வா தலைமையில் இயங்கிய தமிழரசு கட்சி அமைதிவழிப் போராட்டமே நடத்தியது. அதற்கு பலன் அம்பாறை மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை மற்றும் வணிக வளாகங்கள் சூறையாடப்பட்டது.

1958-ல் இனவெறி ஊட்டப்பட்ட மிருகங்களின் வேட்டையாடலில் 150-க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். கொழும்பிலிருந்து 10,000-க்கும் மேற்பட்டோர் அகதிகளாகி வடக்கு, கிழக்கு பகுதிக்கு சென்றார்கள். அப்பொழுதும் தன்னாட்சி கோரிக்கையை வெகு ஜன மக்களிடம் எடுத்துச் செல்ல சமஷ்டிக் கட்சி அறவழியிலேயே போராடியது. 1961லிலும் அதே அறவழிப் போராட்டம் தான் நடத்தியது. அதே ஆண்டு 3 மாத காலம் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தால் வடக்கு, கிழக்கு பகுதியிலுள்ள அரசு நிறுவனங்கள் முடங்கியது. சிங்கள சட்டத்திற்கு புறம்பாக தமிழ் தேசிய அஞ்சல் தலைகள் சமஷ்டிக் கட்சியால் வெளியிட்டது. ஒரு அஞ்சல் தலைக்காக அறவழிப் போராட்ட தலைவர்களை அடித்து ஒடுக்கிட ஆயுதப் படைகளை ஏவியது சிங்களப் பேரினவாத அரசு. எப்பொழுதும் இலக்காகும் அப்பாவி மக்கள் அப்பொழுதும் காவலர்களின் குண்டாந்தடிகளுக்கு இரையானார்கள்.

இப்படியே அறவழிப் போராட்டங்களும் தமிழர் படுகொலைகளும் தொடர்ந்த வண்ணமிருக்க தமிழர்களுக்கான அறவழிக் கட்சிகள் தமிழர்களின் அரசியல் சுதந்திரத்தை, தமிழ் தேசிய அடையாளத்தை காப்பாற்ற இணையத் துவங்கின. அவர்களும் இலட்சியத்தின் பாதைகளை விட்டு பாராளுமன்றப் பதவிக்குள் முடங்கி விட்டனர்.

இதற்கிடையில் இலங்கை அரசின் 1967, 1971, 1979-ம் ஆண்டுகளில் கொண்டு வந்த தரப்படுத்துதல் சட்டங்கள் தமிழர்களின் கல்வியில் பேரிடியாய் நுழைந்தது. அதாவது, அதிக புள்ளிகள் பெற்ற, திறமை வாய்ந்த தமிழ் மாணவர்கள் வாய்ப்புக்களை இழக்க, குறைந்த புள்ளிகள் பெற்ற சிங்கள மாணவர்கள் அந்த வாய்ப்புக்களை பெற்றனர். வேலை வாய்ப்பின்றி, உயர் படிப்புக்கு வழியுமின்றி விரக்தியும், சலிப்பும் புறவய சூழலாக இளைஞர்களை புரட்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கத் தூண்டியது. அறவழி விரும்பாதவர்கள் தமிழர்கள் எனும் போலி பிம்பம் கட்டமைக்கப்படுவது உண்மையல்ல என்பதற்கும், தமிழினம் சிங்களப் பேரினவாதம் அடிக்க அடிக்க தன் கன்னங்களைக் காட்டிக் கொண்டே தானிருந்தது என்பதற்குமே இந்த அறவழிப் போராட்டங்களின் சான்றுகள்.

பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட பொழுதும் இயேசுவின் போதனைகளையும், புத்தனின் கோட்பாட்டினையும் வரித்துக் கொண்டு அமைதியாகவே கடந்தார்கள் தமிழர்கள். இனியும் இப்படியே கடந்தால் உயிருக்கு நிகரான மொழியும், இனத்திற்கு உயிரான பண்பாடும் அழிக்கப்பட்டு விடும் ஆபத்து தோன்றியதாலேயே ஆயுதம் தரித்த போராட்டக் குழுக்கள் உருவாயின. அதில் விடுதலைப் புலிகளின் இயக்கம் சீரிய பண்பாலும், ஒழுக்க நெறியாலும் சிங்களப் படைகளை எதிர்த்தது. போர் அறம் கொண்டவர்கள் இராணுவத்தினை எதிர்த்து நின்றார்கள் ஆனால் இனவெறி கொண்ட சிங்கள அரசோ அப்பாவி மக்களை இலக்காக்கியது.

"கறுப்பு யூலை" நிகழ்வு காலங்கள் கடந்தாலும் தமிழர்களின் மனதில் ஆறாத காயங்களையும், தீராத வலிகளையும் தமிழர்கள் மனதில் கிளறிக் கொண்டேயிருக்கும். சிங்களப் பேரினவாத அரசு ஆயிரக்கணக்கான தமிழர்களை அழித்தொழித்த 1983-ம் ஆண்டின் கறுப்பு யூலையும், இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த 2009-ம் ஆண்டின் மே மாதமும் என்றென்றும் தமிழர்கள் மறக்கவும், மன்னிக்கவும் மாட்டார்கள்.

"எங்கள் சிக்கல்களுக்கு அமைதி வழியில் தீர்வு காண வேண்டுமென்றால் இனப்படுகொலை செய்யும் சிங்கள ஆட்சியாளர்களின் மனப்போக்கு மற்றும் அணுகுமுறையில் அடிப்படை மாற்றம் வேண்டும்" என்றார் தேசியத் தலைவர் பிரபாகரன். பௌத்த அடிப்படைவாத, சிங்களப் பேரினவாத மனப்போக்கு கொண்டவர்கள் ஆளும் வரை இலங்கைக்குள் தமிழர்களுக்கு தீர்வு என்பது கானல் நீரே.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!"

ஆவணம் (விடுதலைப்புலிகள் குரல்)

# கட்டுநாயக்கா சிறீலங்கா விமானத்தளம் மீதான கரும்புலித் தாக்குதல் – 24.07.2001




**கட்டுநாயக்க சிறீலங்கா வான்படைத் தளத்தில் வைத்து தமிழின அழிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட வான் படைக்கலங்கள் பலவற்றை அழித்து வீரவரலாறு படைத்த 14 நிழற்கரும்புலி மாவீரர்களையும் இன்றைய நாளில் நினைவு கூருகிறோம்.**

# செஞ்சோலையில் உதிர்ந்த மலர்கள் நினைவில்....

## 18ம் ஆண்டு நினைவுகளுடன்...



14.08.2006 14.08.2024